# சுடர் ஒளி

வாராந்த சஞ்சிகை

ஏப்ரல் 02 - 08, 2014 பக்கம் - 24 30/-




# இந்தியாவும் இலவுகாத்தவர்களும்





மொபிடெல் இடமிருந்து மிகவும் சிறந்த IDD கட்டணங்கள்

| ரீலோட் / ரீசார்ஜ் பெறுமதி | கிடைக்கப் பெறும் IDD அழைப்புகளின் பெறுமதி | கிடைக்கப் பெறும் சர்வதேச SMS பெறுமதி | கிடைக்கப் பெறும் மொத்தப் பெறுமதி |
|---|---|---|---|
| ரூ. 189 | ரூ. 300 | ரூ. 100 | ரூ. 400 |
| ரூ. 589 | ரூ. 900 | ரூ. 400 | ரூ. 1,300 |

Sri Lanka Telecom Mobitel


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## சொன்னர் செய்தார் செரீனா

மயாமி பகிரங்க ரென்னிஸ் மகளிர் ஒற்றையர் ஆட்டத்தில் உலகின் முதல் நிலை வீராங்கனை செரீனா வில்லியம்ஸ் சம்பியனானார்.
இந்தத் தொடர் தொடங்குவதற்கு முன்னரே வெற்றிக் கிண்ணம் எனக்குத்தான் என்று பகிரங்கமாக அறிவித்துவிட்டே செரீனா களமிறங்கியிருந்தார்.
ஆயினும் அவர் நினைத்தபடி கிண்ணத்தை கொண்டுபோகவிடோம் என்று மரியா ஷரபோவா உள்ளிட்ட முன்னணி வீராங்கனைகளும் பதிலுக்கு மார்தட்டியிருந்தார்கள். ஆனால் சொன்னபடியே இறுதிப்போட்டியில் சீனாவின் லீ நா வை தோற்கடித்து இன்னுமொரு வெற்றிக் கிண்ணத்தை தன் கணக்கில் சேர்த்துக்கொண்டார் செரினா.

## குத்தாட்டத்துக்கு தடை?




கிரிக்கெட் உலகில் திருப்புமுனையாக அமைந்த விடயம் ஐ.பி.எல். தொடர்தான்.
ஒருநாள் உலகக் கிண்ணத் தொடரில் இந்தியா மரண அடிவாங்கி முதற்சுற்றிலேயே வெளியேறிய காலகட்டத்தில் கிரிக்கெட்டைத் தடைசெய்யவேண்டும் என்ற கோரிக்கை பரவலாக அங்கு எழுந்தது. ஆனால் மீண்டும் கிரிக்கெட் மீதான மோகத்தை அங்கு விதைக்க ஐ.பி.எல். தொடர் அறிமுகமானது. பல்வேறு நாடுகளைச் சேர்ந்த வீரர்கள் பங்கேற்கும் போட்டிகளைக் கண்டு மீண்டும் கிரிக்கெட் பித்துப்பிடித்தோர் எண்ணிக்கை அதிகரித்தது. ஐ.பி. எல். போட்டிகளுக்கு பார்வையாளர்களை இழுக்க அப்போதைய ஐ.பி.எல். தலைவர் லலித் மோடி கண்டு பிடித்த உத்திதான் 'சியர்ஸ் கேர்ள்ஸ்' எனப்படும் நடனமங்கைகளின் குத்தாட்டம். பந்துகள் எல்லைக் கோட்டைத் தாண்டும்போது இலக்குகள் வீழும் போதும் ஒவ்வொரு அணி சார்ந்த நடன மங்கைகள் கவர்ச்சியான உடைகளோடு கைகளில் வர்ண குஞ்சங்களோடு ஆடி பார்வையாளரை மகிழ் வித்தார்கள். இதனால் இவர்களின் ஆட்டத்தைக் காணவென ஒரு கூட்டம் அலைமோதியது. ஆயினும் அண்மைக் காலமாக ஐ.பி.எல். தொடரில் எழுந்துள்ள சூதாட்டச் சர்ச்சை நடனமங்கைகளையும் பாதித் துள்ளது. சில சூதாட்டத் தரகர்கள் இந்த நடனமங்கை களைப் பயன்படுத்தியே வீரர்கள் சிலரை தங்கள் வலையில் வீழ்த்தியதாக தகவல்கள் வெளியாகி யுள்ளன. எனவே, இம்முறை ஐ.பி.எல்.தொ-டரில் நடனமங்கைகளை ஆட விடுவதில்லை என்று முடிவெடுக்கப்பட்டுள்ளதாக தெரியவருகின்றது. எனினும் இது குறித்த இறுதித் தீர்மானம் விரைவில் வெளியிடப்படும் என்று ஐ.பி.எல். நிர்வாகம் அறிவித்துள்ளது.

## பரவசப்படுத்தும் மாய விக்கெட்



உலகக் கிண்ணப் போட்டிகளைப் பார்ப்பவர்கள் இலக்குகள் சாய்க்கப்படும்போது ஒரு மாயத்தைக் கண்டிருக்கமுடியும். முன்னெப்போதும் இல்லாத வகையில் பந்து இலக்கில் பட்டதும் அது செந்நிற ஒளிப்பிழம்பாக மின்னி ஒளிரும். படத்தில் செய்யப்படும் கிரபிக்ஸ் காட்சிபோன்று இந்த இலக்கச் சாய்ப்புக்கள் பார்வையாளர்களை பரவசப்படுத்துகின்றது. முன்பெல்லாம் மைதானத்தில் இருந்து பார்த்தால் இலக்குகள் சாய்க்கப்படுவது அவ்வளவாகத் தெரியாது. ஆனால் இந்த ஒளிரும் விக்கெட்டால் எங்கிருந்தாலும் பார்வையாளர்கள் இலக்குகள் வீழ்வதை காணமுடிகிறது.
முதன் முதலில் கிரிக்கெட்டில் ஒளிரும் விக்கெட் முறை பயன்படுத்தப்பட்டது ஆஸ்திரேலியாவின் 'பிக்பாஸ்' போட்டிகளில்தான். அந்த நாட்டைச் சேர்ந்த எக்கெர்மான் என்பரே இந்த ஒளிரும் விக்கெட்டுகளை கண்டுபிடித்தார். இப்போது அது எல்லோரது வரவேற்பையும் பெற்றுவிட்டதால் ஒருநாள் போட்டிகளிலும் இந்த ஒளிரும் விக்கெட்டைப் பயன்படத்த ஐ.சி.சி. ஆலோசித்து வருகின்றது. ரன் அவுட் ஆட்டமிழப்புகளை துல்லியமாக அறிய ஒளிரும் விக்கெட் பேருதவியாக இருக்கின்றது. ஆனால், போட்டியில் வென்றவுடன் வழமைபோன்று வீரர்கள் விக்கெட்டைப் பிடுங்கிக்கொண்டு ஓடமுடியாது. ஏனெனில் ஒரு விக்கெட்டின் விலை 24 லட்சம்.

## மீண்டும் சுழல் புயல்

மேற்கிந்தியாவின் முரளிதரன் என்று கொண்டாடப்படுபவர் ஷில்லிங்போட். இவரும் முரளியைப் போலவே எதிரணியைக் கலங்கடிக்கும் தூஸ்ரா பந்துகளை வீசுவதில் வல்லவர். எனினும் எப்படிமுரளி பந்தை எறிகிறார் என்று குற்றச்சாட்டு வந்ததோ. அதே, குற்றச்சாட்டு ஷில்லிங்போட் மீதும் எய்யப்பட்டது. பந்துவீச தடை விதிக்கப்பட்டு அவரது பந்துவீச்சு முறைமை ஆராயப்பட்டது. மற்றைய நேரங்களைக் காட்டிலும் தூஸ்ரா வகையில் பந்து வீசும்போதே அவரது கை அசைவில் வித்தியாசம் இருப்பது கண்டறியப்பட்டது. அது இயல்பாகவே வருவதுதான். ஏனெனில் மற்றைய பந்து வீச்சு முறைமைகளை விடவும் தூஸ்ராவுக்கு கைகளின் அசைவு வித்தியாசமாகவே இருக்கும். இதனால்தான் பார்ப்போருக்கு பந்தை எறிவதுபோன்ற தோற்றம் தென்படும். ஆனால் இந்த விளக்கங்களை எல்லாம் ஐ.சி.சி. காதில் வாங்கிக்கொள்வதாக இல்லை. அதேநேரம் ஷில்லிங்போட் மீது சுமத்தப்பட்ட குற்றச்சாட்டில் 98 வீதம் உண்மையில்லை என்பதால் அவரை போட்டிகளில் பங்கேற்கவிடாமல் தடுத்து வைத்திருக்கவும் முடியாது. எனவே, தூஸ்ரா பந்துகளை வீசக்கூடாது என்ற நிபந்தனையோடு ஷில்லிங்போட் மீதான தடை தளர்த்தப்பட்டுவிட்டது. மேற்கிந்தியாவில் சுழல்வேகம் ஷில்லிங்போட்டின் மீள்வருகையோடு இன்னும் அதிகரிக்கும்.



## மீண்டும் ஷகிரா


கொலம்பியா நாட்டை சேர்ந்த பிரபல பொப் பாடகி ஷகிரா. வக்கா வக்கா பாடலின் மூலம் ரசிகர்களை கவர்ந்த ஷகிரா, மீண்டும் இந்த ஆண்டுக்கான உலகக் கிண்ண உதைபந்தாட்ட தொடர்பற்றிய பாடலை வெளியிட்டுள்ளார். இவர் கடந்த 2012ம் ஆண்டு வக்கா வக்கா என்ற பாடலை வெளியிட்டு அனைவரின் மனதையும் கொள்ளை கொண்டார். இந்த நிலையில் 2014 உலகக் கிண்ண உதைபந்தாட்ட போட்டிக்கான பாடலை பதிவு செய்துள்ளார்.
இதுகுறித்து இவர் அளித்த பேட்டியில், ஐந்து ஆண்டு இடைவெளிக்கு பிறகு சுய தலைப்பிட்ட இசைத் தொகுப்பில் இடம்பெற்றுள்ள இந்த பாடல், பிரேசிலிய மரபோடு புதிய உற்சாகத்துடன் உள்ளதாகவும் தெரிவித்துள்ளார்.
37 வயதான ஷகிரா, 2010ஆம் ஆண்டில் இருந்து ஸ்பெயின் உதைபந்து வீரர் ஜெரார்டுடன் இணைந்து வாழ்ந்து வருகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

**ஆசாத்**

# அடி பணிந்து அடிவாங்கல்




**நா**ம் எமது எதிர்த்தரப்புடன் மோதினால் அடிகொடுக்கலாம்; சில சமயங்களில் அடியும் வாங்கலாம். ஆனால் அப்படி அடி வாங்கினாலும் கூட அது தன்மானம் இழக்காத தோல்வி. மீண்டும் அடிக்க முடியும் என்ற வேகத்தை ஏற்படுத்தும் தோல்வி. எனினும் அடிபணிந்து அடிவாங்குவது அவமானகரமானது மட்டுமல்ல எதிரிக்கு எங்களை மேலும் அடிக்கும் துணிவையும் தெம்பையும் வழங்கி விடக்கூடும்.

ஆனால் சில சுக போகங்களையும், சுயநல நோக்கங்களையும் கொண்டு அடிபணிதலை அடிப்படைக் கொள்கையாக வரித்துக்

**எவ்வளவுநாள் இவர்கள் அடி பணிந்தாலும் அடிவாங்குவது தொட ரும் என்பதில் எவ்வித சந்தேகமு மில்லை. அதுபற்றி இவர்களுக்குக் கவலையுமில்லை.**

கொண்ட ஒரு சிலர் இப்போ அடி வாங்க ஆரம்பித்து விட்டனர். முன்பெல்லாம் அடி விழும் போது அது அடியேயல்ல எனப்பூசி மெழுகியவர்கள் இப்போது "ஐயோ!" எனஅலற ஆரம்பித்து விட்டனர். அந்த வரிசையில் இப்போது அமைச்சர் ரிசாட் பதியூதீனின் அலறல் கேட்க ஆரம்பித்துள்ளது.

வில்பத்து சரணாலயத்திலிருந்து மன்னார் வரை அமைச்சர் ரிசாட் பதியூதீன் முஸ்லிம்களை அத்துமீறிக் குடியேற்றி வருகிறார் எனவும் வில்பத்தையே முஸ்லிம்கள் கைப்பற்றி விட்டனர் எனவும் அதைத் தடுத்து நிறுத்த வேண்டும் எனவும் பொதுபலசேனாவின் பொதுச்செயலர் கலகொட ஞானசாரதேரார் கொதித்தெழுந்துள்ளார்.

அமைச்சரோ 'நான் வடக்கிலிருந்து இடம்பெயர்ந்த முஸ்லிம்களை அவர்கள் முன்பு வாழ்ந்த இடங்களிலேயே குடியேற்றுகிறேன் என்று சத்தியம் செய்து பார்த்தார். முந்திரிகைக்குளம், மடிச்சுக் கட்டி, முள்ளிக்குளம், சிலாவத் துறை என்பன பாரம்பரியமாக முஸ்லிம் மக்களும் தமிழ்மக்களும் வாழ்ந்து, விவசாயத்திலும், மீன் பிடியிலும் ஈடுபட்ட இடங்கள். இவை வில்பத்தின் எல்லையில் அமைந்துள்ளன.

ஆனால் இப்போதுள்ள நிலமை முந்திரிகைக்குளம் , மரமுந்திரிகைச் செய்கைக்கென என ஒதுக்கப்பட்டு கஜீவத்தை எனப் பெயர் மாற்றப்பட்டு சிங்களமயப்படுத்தப்பட்டும் விட்டது. மறிச்சுக் கட்டி கடற்படையினரால் ஆக்கிரமிக்கப்பட்டு அங்கு கடற்படையினரின் குடும்பங்கள் குடியேற்றப்படுகின்றன. சிலாவத்துறை, முள்ளிக் குளம், ஆகியவற்றின் பெரும்பகுதியும் படையினரின் கட்டுப்பாட்டிலேயே உள்ளது.

இவை அனைத்தும் தமிழ், முஸ்லிம் மக்கள் பரம்பரை பரம்பரையாக வாழ்ந்த பகுதிகள். இப்போது ஏற்கனவே இங்கு வாழ்ந்த முஸ்லீம் மக்கள் அப்பகுதியில் குடியேற்றப்படுவதற்கு எதிராகப் பொதுபல சேனா போர்க்கொடி தூக்கியுள்ளது. அது மட்டுமன்றி அமைச்சர் ரிசாட் பதியூதீனுக்கு எதிராகவும் வசைமாரி பொழிந்திருக்கிறது.

தமிழ் மக்களுக்கும் முஸ்லிம் மக்களுக்குமிடையே முரண்பாடுகளை ஏற்படுத்துவதில் மிகத் தீவிரமாகச் செயற்பட்டு சிங்கள இன வெறியர்களின் நோக்கங்களை நிறைவேற்ற அயராது பாடுபட்டவர் அமைச்சர் ரிசாட்பதியூதீன்.

அதே வேளையில் முஸ்லிம் மக்களுக்கு எதிராகப் பொதுபலசேனாவினால் பள்ளிவாசல் உடைப்பு போன்ற சம்பவங்கள் மேற்கொள்ளப்பட்ட போதும் இவர் உருப்படியான எந்தஒரு முயற்சியையும் மேற்கொள்ளவில்லை. இவர் ஒரு அமைச்சரவை அந்தஸ்துள்ள அமைச்சராக இருந்த போதிலும் அவற்றுக்கு எதிராக சட்ட நடவடிக்கைகள் கூட எடுக்கப்படவில்லை. எல்லாவற்றுக்கும் மேலாகத் தனது அகில இலங்கை மக்கள் முஸ்லிம் காங்கிரஸ் என்ற பெயரை அகில் இலங்கை மக்கள் காங்கிரஸ் என மாற்றி தனது கட்சியில் இன அடையாளத்தையே மாற்றி அமைத்தார்.

இவ்வாறு தமிழ் முஸ்லிம் மக்களிடையே விரோதத்தைக் தூண்டியும் முஸ்லிம் மக்களின் மேல் இழைக்கப்பட்ட அநீதிகளையும் பூசி மெழுகியும் தன் எஜமானாரிடம் விசுவாசத்தை அமைச்சர் காட்டிய போதிலும் இப்போது அவர் மீதும் கறைகள் வீசப்பட ஆரம்பித்து விட்டன.

ஆனால் அமைச்சர் சில நாள்களில் அமைதியாகி விட, சிங்களக் குடியேற்றங்களின் விரிவாக்கமும் , முஸ்லிம்கள் தங்கள் சொந்த இடங்களில் குடியேற முடியாத நிலைமையையும் தொடர்ந்தால் கூட ஆச்சரியமில்லை.

அப்படி நடந்தால் அரசின் கபடத்தை மறைக்கும் வகையில் - "தமிழ்த் தேசியக் கூட்டமைப்பினர் முஸ்லிம் மக்கள் வடக்கில் குடியேற விடுகிறார்கள் இல்லை" எனக் கூறி சிங்கள இனவாதிகளின் அட்டூழியங்களை ரிசாட் மறைத்து விடுவார்.

எவ்வளவுநாள் இவர்கள் அடி பணிந்தாலும் அடிவாங்குவது தொடரும் என்பதில் எவ்வித சந்தேகமுமில்லை. அதுபற்றி இவர்களுக்குக் கவலையுமில்லை.

ஆனால் முஸ்லிம் மக்கள் ரிசாட் போன்ற அரசியல்வாதிகளைப் புரிந்து கொள்ளும் காலம் தொலைவில் இல்லை என்பதுதான் யாதார்த்தமாகும்.

# சாகும் போதுவலிக்குமா?

## பாசக்கார ஐந்து வயது அண்ணனின் கேள்வி


உயிர் பிழைத்த தங்கை

**இ**ரண்டு அகவையான தங்கள் பெண் குழந்தைக்கு திடீரென்று நோய் ஏற்பட்டதால் மருத்துவமனையின் அவசர மருத்துவ பிரிவில் சேர்த்தனர் பெற்றோர். மருத்துவர்கள் பரிசோதித்துவிட்டு "குழந்தையை காப்பாற்றுவது சற்று கடினமே" என்றனர். "ஆனால் இதே நோயால் இதற்கு முன்னர் பாதிக்கப்பட்ட ஒருவரின் குருதி பெறப்பட்டு குழந்தைக்கு ஏற்றப்படவேண்டும் அப்படி செய்தால் குணமாவதற்கு வாய்ப்புகள் உண்டு. இதேவகை குருதிக்கு நீங்கள் உடனடியாக ஏற்பாடு செய்ய வேண்டும்" என்று பெற்றோரிடம் தெரிவித்தனர்.

பெற்றோர்களின் முகத்தில் உடனே ஒரு நம்பிக்கைஒளி பிறந்தது. தற்போது ஐந்து அகவையிலுள்ள அவர்களது இன்னொரு மகன் குழந்தைப்பருவத்தில் அதே நோய்க்குள்ளாகி அபூர்வமாக குணமடைந்திருந்தான். இதை மருத்துவர்களிடம் கூறியபோது மருத்துவர்களுக்கும் நம்பிக்கை அதிகரித்தது.

மருத்துவர்கள் சிறுவனை உட்கார வைத்துவிட்டு அன்பாக நிலமையை எடுத்து சொல்லி "உனது தங்கையின் உயிரைக் காப்பாற்றுவதற்காக குருதி வழங்க விருப்பமா?" என்று கேட்டனர்.

சிறுவன் சிறிது நேரம் மௌனமாக யோசித்துக் கொண்டிருந்தான். பிறகு "என்குருதியை எடுத்து அவளுக்கு கொடுப்பதன் மூலம் அவள் காப்பாற்றப்படுவாள் என்றால் தாராளமாக எடுத்து கொள்ளுங்கள்" என்றான்.

சிறுவனிடமிருந்து குருதி பெறப்பட்டு நேரடியாக குழந்தைக்கு ஏற்றுவதற்கான ஏற்பாடுகள் செய்யப்பட்டிருந்தது. சிறுவனுக்குப் பக்கத்தில் பெற்றோரும் அனுமதிக்கப்பட்டிருந்தனர். பெற்றோர் சிறுவனை தைரியமூட்டி கொண்டிருந்தனர், பின்னர் குருதிப் பரிமாற்றம் ஆரம்பமானது. சிறுவன் புன்முறுவலுடன் தனது தங்கையுடைய முகத்தையே பார்த்துக்கொண்டிருந்தான்.

நேரம் செல்லச்செல்ல குழந்தையிடமிருந்து அசைவுகள் தெரிய ஆரம்பித்தன. ஆனால் சிறுவனது முகம் வாடிக்கொண்டே சென்றது.

சிறுவன் மருத்துவரை பார்த்து "டொக்டர், சாகும்போது சிரமமாக இருக்குமா?" என்று சோகமான குரலில் கேட்டான். சிறுவனின் இந்த கேள்வியால் பெற்றோர்கள் மருத்துவர்கள் மற்றும் செவிலியர்கள் அதிர்ச்சி அடைந்தனர்.

உடனே மருத்துவர், "குருதி வழங்குவதால் சாவதற்கு வாய்ப்பு இல்லை" என்பதை சிறுவனிடம் எடுத்துக்கூறினார்.

சிறுவன், ஆரம்பத்தில் தனது உடம்பிலிருந்து முழு குருதியையும் எடுக்கப்போவதாகவே எண்ணியிருந்தான், தன் தங்கைக்காக தனது உயிரையே தியாகம்செய்ய முன்வந்திருந்தான். யாருக்கு வரும் இந்த தியாக உணர்வு?. அவன் தியாக உணர்வை கண்டு பெற்றோரும், செவிலியர்களும் மருத்துவரும் கண்ணீர் சிந்தினர். இப்போது அண்ணனும் தங்கையும் ஆனந்தமாக இருக்கிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யுவ்ராஜ்சிங்கும் அப்பாவும்

கலைச்செல்வன்
(சிட்னி, அவுஸ்திரேலியா)



பங்களாதேஷில் நடைபெற்றுக் கொண்டிருக்கும் 20/20 உலகக் கிண்ணக் கிரிக்கெட் தொடரில் சுப்பர்–10 பிரிவில் ஓர் ஆட்டத்தில் ஆஸ்திரேலியாவும் இந்தியாவும் மோதின. முதலில் துடுப்பெடுத்தாட ஆஸிகளால் பணிக்கப்பட்ட இந்தியா முதல் இன்னிங்ஸில் 159 ஓட்டங்களை எடுத்தது.பின்னர் ஆஸி அணி 86 ஓட்டங்களையே எடுத்து 73 ஓட்டங்களால் தோற்றுப் போனது.

இந்தப்போட்டியில் இந்தியா சார்பாக அதிக ஓட்டங்களை எடுத்தவர் யுவ்ராஜ் சிங். அவர் தனது 60 ஓட்டங்களையும் 43 பந்துகளில் எடுத்திருந்தார். கிரிக்கெட்டில் அதுவும் '20 /20' கிரிக்கெட்டில் 43 பந்துகளில் 60 ஓட்டங்கள் எடுப்பது பெரிய விடயமா ? என்று கிரிக்கெட்டைப் பற்றித் தெரிந்தவர்கள் ஆச்சரியப்படுவது புரிகின்றது. ஆனால் குறித்த போட்டியில் ஆஸிகள் மிகத் திறமாக வீசிய வேகப்பந்துக்கும்,சுழல் பந்துக்கும் உறுதியுடன் அடித்தாடினால்தான் ஓட்டங்களை எடுக்க முடியும் அப்படி உடல் உறுதியுடனும் மன உறுதியுடனும் ஆடிய யுவ்ராஜ் ஓட்டங்களை மட்டும் தனது அணிக்காக எடுக்கவில்லை. உலகெங்குமுள்ள கோடிக்கணக்கான நுரையீரல் புற்று நோயாளிகளுக்கு மிகப் பெரும் தன்னம்பிக்கையையும், தாம் அந்த நோயை எதிர்த்துப் போராடினால் அதிலிருந்து மீண்டு பழைய நிலைமைக்குத் திரும்பலாம் என்ற மன உறுதியையும் கொடுத்துள்ள ஓட்டங்கள் அவை.

யார் இந்த யுவ்ராஜ் சிங் ? இவர் மிக உறுதி படைத்த இந்திய கிரிக்கெட் வீரர் . பஞ்சாப்பை பிறப்பிடமாகக் கொண்டவர். பஞ்சாப்பின் பிரபல நடிகர் யோகராஜுக்கு மகனாகப் பிறந்ததனால் பிறக்கும் போதே வசதி வாய்ப்புக்களுக்குக் குறைச்சலில்லை. அவரின் தந்தைக்கு கிரிக்கெட்டில் சாதிக்க வேண்டும் என்றிருந்த கனவு இருந்தது. இந்திய அணி சார்பாக யோக்ராஜ் சிங் ஒரு டெஸ்ட் போட்டியிலும், ஒரேயொரு ஒருநாள் போட்டியிலும் விளையாடியுமுள்ளார். எனினும் அவரால் கிரிக்கெட்டில் சாதிக்க முடியாது போனதால், வழமையான அப்பாக்களைப் போலே மகனை கிரிக்கெட் வீரனாக்குவதற்காக எல்லா வசதிகளையும் செய்து கொடுத்திருந்தார்.

பொதுவாக காழ்ப்புணர்ச்சியுள்ளவர்கள் பொருமுவதைப்போல யுவ்ராஜ் வெறுமனே தந்தையின் செல்வாக்கைப் பயன்படுத்தி கிரிக்கெட்டில் முன்னேறவில்லை . அவரிடம் இயற்கையாகவே ஒரு சர்வதேசக் கிரிக்கெட் வீரனாவதற்குரிய மன உறுதியும் , உடல் உறுதியும், கிரிக்கெட் நுட்பமும் குடிகொண்டிருந்தன. இந்திய அணியில் தனது திறமையால் இடம்பிடித்த யுவ்ராஜ் ஒருநாள் அணியில் நிரந்தர வீரனானார். ஆனால் அவரைப் புகழின் உச்சிக்குக் கொண்டு சென்றதும் அவர் எப்படிப்பட்ட திறமைசாலி என்று நிரூபித்ததும் முதலாவதாக தென்னாபிரிக்காவில் நடைபெற்ற 20 /20 உலகக் கிண்ணத் தொடர்தான்.

இதில் ஒரு போட்டியில் இங்கிலாந்தும் இந்தியாவும் மோதின. அதில் தற்போதைய இங்கிலாந்து 20 / 20 அணித்தலைவரும் இங்கிலாந்தின் வேகப்பந்து வீச்சாளருமான ஸ்ருவர்ட் ப்ரோட் ஒரு ஓவரில் வீசிய 6 பந்துகளையும் 6 சிக்ஸர்களாக மாற்றி கிரிக்கெட் உலகையே வியப்பிலாழ்த்தி சாதனை படைத்தார் யுவ்ராஜ். அடியென்றால் அடி . அப்படியொரு அடி. அந்தப் போட்டிதான் இந்திய அணிக்கு தாம் எங்கேயும் எவரையும் வெல்ல முடியும் என்ற தன்னம்பிக்கையை உருவாக்கியது.

சில வருடங்களில் யுவ்ராஜுக்கு ஒரு நோய் ஏற்பட்டது. அதை நுரையீரல் புற்று நோய் எனக் கண்டறிந்தனர் டாக்டர்கள். கிரிக்கெட் உலகமே ஒரு கணம் தடுமாறிய தருணம் அது. ஒரு இளம் சாதனை வீரனுக்கு மிக இளம் வயதில் இப்படியொரு நோய் வந்துவிட்டதே என எண்ணி இன, மத, மொழி பேதமின்றி எல்லா நாட்டுக் கிரிக்கெட் ரசிகர்களும் மனம் வெதும்பிப் போனார்கள். ஆனால் யுவ்ராஜ் மனம் தளரவில்லை. அமெரிக்காவுக்குத் தன்னம்பிக்கையுடன் சிகிச்சைக்குப் போனார்.அவருக்கான சிகிச்சை அமெரிக்காவில் தொடங்கியது.

புற்றுநோய்க்கான சிகிச்சையை முடித்த அந்த இளம்வீரனின் புகைப்படம் ஒன்றை எதேச்சையாகப் பார்த்தபோது மிகவும் ஆடிப்போனேன். தலைமுடியற்ற அவரைப் பார்க்க என்னமோ போலிருந்தது. ஆனால் யுவ்ராஜ் மனம் தளரவில்லை தனது நோயை எதிர்த்துப் போராடினார். வைத்தியர்களின் அறிவுரையின்படி செயற்பட்டார். மனத்தை மகிழ்ச்சியுடன் வைக்கப்பழகிக் கொண்டார். உண்மையில் இந்தப் போராடும் குணத்தை கிரிக்கெட்தான் அவருக்குக் கொடுத்திருக்கும் என்பது எனது கணிப்பு. அது அவருக்கு வெற்றியைக் கொடுத்தது. புற்றுநோய் அவரிடம் தோற்றுப் போனது. இதோ சுருளான தலைமுடியுடன் அதே மிடுக்குடன், இன்னும் பலத்துடன், மனத்தைரியத்துடன், 140 கி.மீற்றர் வேகத்தில் வரும் வேகப் பந்து வீச்சாளர்களின் பந்துகளை துவம்சம் செய்யத் தொடங்கி விட்டார். உலகெங்கும் இருக்கும் நுரையீரல் புற்று நோயாளர்களுக்கு ஒரு வழிகாட்டியாக திகழத் தொடங்கி விட்டார்.

கிரிக்கெட் விளையாடுவது, அதுவும் சர்வதேசக் கிரிக்கெட் விளையாடுவது இலகுவான ஒன்றல்ல. 140 – 150 கி.மீ. வேகத்தில் வரும் ஒரு தோலினாலான முரட்டுப் பந்தை ( இந்தப் பந்தை ரெனிஸ் பந்து போல மெது மெதுப்பானதென்று நினைக்காதீர்கள், இது தலையில் பட்டால் உயிராபத்தே ஏற்படும் அபாயமுள்ளது. அதனால்தான் கிரிக்கெட் வீரர்கள் ஹெல்மெட் போட்டு கிரிக்கெட் விளையாடுகின்றார்கள் ) பத்திலொரு செக்கனுக்குள் எங்கே எந்த வேகத்தில் என்ன விதமாக எந்த முறையில் அடிக்க வேண்டுமென்ற முடிவெடுக்கும் திறமை ஒருவருக்கு இருக்கவேண்டும்.அப்படி முடிவெடுப்பதற்கு அந்த வேகமான பந்தை துல்லியமாகப் பார்க்கும் கண்பார்வை வேண்டும். அதை எப்படி அடிக்க வேண்டுமென்று விவேகம் வேண்டும். மூளை எடுத்த முடிவை செயற்படுத்த வேகமான இயக்கம் கொண்ட கை கால்கள் வேண்டும். மிகுந்த பொறுமை வேண்டும். உணர்ச்சிவசப்படுதல் தவிர்க்கப்படல் வேண்டும். இவையெல்லாவற்றுக்கும் மிக முக்கியமான மனத்திடமும் உடற் பலமும் வேண்டும்.

இவையெல்லாம் இருக்கும் பட்சத்தில்தான் ஒருவரால் கிரிக்கெட்டில் சிறக்க முடியும், அதை இப்போது யுவராஜில் பார்த்தேன். சில வருடங்களுக்கு முன்னர் அடிக்கடி ரீ.வி யிலும், சிட்னி கிரிக்கெட் மைதானத்தில் நேரடியாகவும் பார்த்த அந்த வேகமான திடகாத்திரமான இளைஞனை இதோ இப்போது மீண்டும் அதேபோலப் பார்த்தேன். அவர் பழைய நிலைக்குத் திரும்பிவிட்டதற்கான அத்தாட்சி இது. மிக்க மகிழ்ச்சி. இதில் எனது சுயநலமும் அடங்கியிருக்கின்றது. அது மிக முக்கியமான ஒன்று. அது என்ன ??

சில மாதங்களுக்கு முன்னர் வந்த தொலைபேசி அழைப்பு ஒன்று என்னை தாயகத்தை நோக்கி பறக்க வைத்தது. யாழ்ப்பாணத்தில் இறங்கியதும் நான் நேரே சென்றது யாழ் பெரியாஸ்பத்திரிக்குத்தான். அங்கு எனது தந்தை அவசரப்பிரிவில் சேர்க்கப்படிருந்தார். அந்தச் செய்தியால்தான் அங்கு ஓடிச்சென்றிருந்தேன். இருமலுக்கான பரிசோதனைக்குச் சென்றிருந்தவரைப் பரிசோதித்த டாக்டர்கள் தனது வாழ்நாளில் ஒரு தடவை தன்னும் சிகரட் புகைக்காத அவருக்கு நுரையீரல் புற்றுநோய் வந்திருப்பதைக் கூறி என்னை உடனடியாக வரும்படி அறிவுறுத்தியும் இருந்தனர்.

"எப்படி அப்பாவின் முகத்தில் முழிக்கப் போகிறேனோ ?"

விமானத்தில் பறந்து கொண்டிருக்கும் போதும், கொழும்பிலிருந்து யாழ்ப்பாணத்துக்கான கடுகதி பஸ்சில் இரவிரவாக தூக்க மின்றிப் பயணித்துக் கொண்டிருந்த பொழுதும் என் மனதில் பல்லாயிரம் தடவை தோன்றித் தோன்றி நெஞ்சடைக்க வைத்த கேள்வி அது "எப்படி அப்பாவின் முகத்தில் முழிக்கப், போகிறேன். என்ன சொல்லித் தெம்பூட்டப் போகிறேன்.



வைத்தியசாலைக்குள் எனது நண்பனொருவனுடன் போய்க் கொண்டிருக்கிறேன். நெஞ்சு பதறத் தொடங்குகின்றது. வைத்தியசாலைக்கு உள்ளே சென்று, திரும்பி மேலே புற்றுநோய் விடுதியை நோக்கி நானும் நண்பனும் நடக்கத் தொடங்குகின்றோம்.. கால்கள் பின்னுகின்றன. எனது நண்பனோ ஒரு கத்தோலிக்க குரு. எனது சிறு வயதிலிருந்தே நண்பன். என் நிலையைப் பார்த்துப் புரிந்து கொண்டு "கடவுள் இருக்கிறார்.. ஒண்டுக்கும் பயப்பிடாமல் தெம்பாக வாடாப்பா என்கிறார்.."

"எனக்குப் பிரச்சினையில்லை .. அப்பாவுக்குத்தான் எப்படித் தெம்பூட்டப் போகிறேன் என்று தெரியவில்லை. அதுதான் ஒரே யோசினையாகவும் குழப்பமாகவும் இருக்கின்றது" என்று கூறியபடியே புற்றுநோய் விடுதிக்குள் நுழைந்து அப்பா படுத்திருந்த கட்டிலுக்கு அருகில் செல்கின்றேன். என்னைக் கண்டதும் உடலில் பதற்றம். தானாகக் கட்டிலில் இருந்து எழ முயற்சிக்கிறார்.. கண்கள் கலங்குகின்றன.. இத்தனை வருடங்களில் அதுவரை அவர் அழுது நான் பார்த்ததில்லை. ஆஸ்பத்திரியில் உதவிக்கு நின்ற உதவியாளரின் துணையோடு உதவவும் அவர் எழுந்திருக்கவும் நான் அவரருகில் போகவும் சரியாக இருக்கின்றது. வார்த்தைகள் தடுமாறிய நிலை யில் அவர் தளம்பியபோதுதான் தான் அந்த வார்த்தைகள் என்னிடமிருந்து வந்து விழுந்தன.. அதுவரை நான் தயார்படுத்தியிருக்காத வார்த்தைகள், அந்த வைத்தியசாலைக்குச் சென்று சேரும் வரை அதைக் கூறுவேன் என நினைத்திருக்காத வார்த்தைகள்.

"அப்பா யுவ்ராஜ் சிங்கை நினைச்சுப் பாருங்கோ.. உந்த வருத்தகிலை இருந்து வெளியாலை வந்துடுவியள்"

அப்பாவுக்கு புரிந்துபோனது. கலங்கிய முகத்தில் புன்முறுவல் எட்டிப்பார்த்தது.. முகம் பிரகாசமானது.

"ஓமோம் தம்பி .., நான் அதை மறந்தே போயிருந்தனான்.. இப்பதான் நினைவு வருகுது.. யுவ்ராஜுக்கும் இதே வருத்தம் என்றுதாே ரீட்மென்ற் செய்தவை .. இப்ப ஆள் திரும்ப விளையாடப் போற்றாம் எண்டு உதயன் பேப்பரிலை நானும் படிச்சனான்.. அப்ப பழையபடி 100'/. சுகம் எண்டுதானே அர்த்தம்.. சரி சரி.. இதிலை பக்கத்திலை இருந்து கதையன்.. பேரன் எப்பிடி இருக்கிறான்.. பேத்தி எப்பிடியிருக்கிறாள்?" என்று சாதாரணமாகப் பேசத்தொடங்கினார் அப்பா. அதற்குப் பிறகு அவரின் பேச்சில் நடையில் ஒரு தன்னம்பிக்கை. அவரின் காலம் இன்னும் எவ்வளவோ தெரியாது. ஆனால் அதுவரை யுவ்ராஜ் சிங் என்ற வீரன் அவருக்கு மனத்தைரியத்தையும் தன்னம்பிக்கையையும் கொடுத்துக் கொண்டேயிருப்பான் என்பது எனக்கு மிக நன்றாகத் தெரியும்.

இதோ இப்போது யுவ்ராஜ் அடித்துள்ள அந்த 60 ஓட்டங்கள், இந்திய அணியை வெற் றிக்கு அழைத்துச் செல்லுமோ இல்லையோ எனது அப்பா உட்பட ஆயிரக்கணக்கான கான்சர் நோயாளிகளுக்கு, கடலில் தத்தளிப்போருக்கு கிடைக்கும் ஒரு மரக் கிளையைப்போல தன்னம்பிக்கையையும் மகிழ்ச்சியையும் ஊட்டி, அவர்களின் கைபிடித்து அழைத்துச் செல்லும் என்பதுமட்டும் சர்வ நிச்சயம்.!!!!



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# போர்க்குற்றவாளிகள் தப்ப முடியாது

அக்கினிபுத்திரன்

மேல் மாகாண , தென்மாகாண தேர்தல் திருவிழா நிறைவு பெற்றுவிட்டது. பிரமாண்டமான பேரணிகள், இலட்சக்கணக்கான மக்களின் அணிதிரளல்கள் , ஆச்சரியப்படவைக்கும் கட் – அவுட்டுகள் , சுவரொட்டிகள் என்று எங்கும் ஒரே அல்லோல கல்லோலம். இவற்றை விட வீதித்திறப்பு விழாக்கள் , அடிக்கல் நாட்டு விழாக்கள் எனப் பல அரச விழாக்களும் பரப்புரைகளில் தங்கள் பங்கை வழங்கியிருக்கின்றன. அதிலும் ஜனாதிபதி கலந்து கொண்ட மக்கள் சந்திப்புக்கள் அதியுச்ச பிரமாண்டங்களைக் காட்டி நின்றன.


இன்னொருபுறம் ஒரு கொலை உட்பட ஆயிரத்துக்கு மேற்பட்ட தேர்தல் மீறல்களும் இடம்பெற்றன. அவற்றில் வன்முறைகள் , அரச வளங்களைத் துஷ்பிரயோகம் செய்தல் என இலங்கையின் ஜனநாயகத்தின் உண்மை வடிவம் பல சர்ந்தர்ப்பங்களிலும் வெளிப்படுத்தப்பட்டது.

எனினும் ஜனாதிபதி கலந்து கொண்ட நிகழ்வுகள் பற்றிய படங்களும், உரைகளும், ஊடகங்களில் மற்றெல்லா விடயங்களையும் பின் தள்ளிவிட்டுப் பிரதான இடத்தைப் பிடித்துக் கொண்டன.

அவரின் உரைகளில் வழமைபோலவே "நான் 30 ஆண்டு கொண்ட போரை முடிவுக்குக் கொண்டு வந்த வீரபுத்திரன்" என்ற தொனி ஓங்கியே ஒலித்தது. அதிவேக நெடுஞ்சாலைகளையிட்டும் கொழும்பு நகரை அழகு படுத்துவது பற்றியும் கிராமங்களை நகரங்களாக்குவது பற்றியும் அவர் பெருமையடித்துக் கொண்டார்.கொழும்பில் கடலை நிரவி 500 ஏக்கர் கொண்ட ஒரு நகரத்தை உருவாக்குவதன் மூலம் உலக வரைபடத்தையே மாற்றும் சாதனையைச் செய்யப்போவதாக சவால் விட்டார். அதே வேளையில் இலங்கையின் வளர்ச்சியைப் பொறுக்க மாட்டாத சில நாடுகள் ஜெனிவாவில் இலங்கைக்கு எதிராகச் செயற்பட்டு வருவதாகத் தன் கோபத்தையும் வெளிப்படுத்தினார்.

எனவே , மேல் மாகாண, தென் மாகாண சபைத் தேர்தலில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பை அமோக வெற்றி பெற வைப்பதன் மூலம் ஜெனிவாத் தீர்மானத்தை இலங்கை மக்கள் நிராகரிக்கிறார்கள் என்ற செய்தியை வெளிப்படுத்துங்கள்" என்றும் அவர் கேட்டுக் கொண்டார்.

அதாவது மேல், தெற்கு மாகாணங்களில் ஐக்கிய மக்கள் சுதந்திரக் கூட்டமைப்பின் வெற்றியானது சிங்கள மக்கள் ஜெனிவா தீர்மானத்துக்கு எதிராக வழங்கும்




மக்கள் ஆணை என்பது தான் அவரின் கருத்து. ஒரு ஜனநாயக நாட்டில் தேர்தலின் போது சில கோரிக்கைகளை முன் வைத்துப் போட்டியிடுவதும் அதில் வெற்றி பெற்றால் அந்தக் கொள்கைகளுக்கு மக்கள் ஆணை வழங்கப்பட்டதாக ஏற்றுக் கொள்வதும் வழமையாகப் பேணப்பட்டு வரும் ஒரு மரபாகும்.அந்தவகையில் ஜனாதிபதியால் முன் வைக்கப்பட்ட கருத்தை தவறு என எவரும் சொல்லி விட முடியாது.

இப்படியான ஒரு நிலையில் சில கேள்விகள் இங்கு எழத்தான் செய்கின்றன.

1977 ஆம் ஆண்டு வடக்குக் கிழக்கு மாகாணத்தில் வாழும் தமிழ் மக்கள் ஜனநாயக முறைப்படி இடம்பெற்ற தேர்தலின் போது ஏகோபித்த முறையில் தனித் தமிழீழத்துக்கு ஆணை வழங்கினர்.

அன்று தமிழ் மக்கள் வழங்கிய ஆணையைச் சிங்களதேசம் ஏற்றுக் கொண்டதா?

2005ம் ஆண்டு இடம்பெற்ற தேர்தலில் தமிழீழமே ஒரே முடிவு எனவும் விடுதலைப்புலிகளே தமிழ் மக்களின் ஒரே தலைமை எனவும் தமிழ் மக்கள் அமோக வாக்குகளால் ஆணை வழங்கினர்.

அது ஏற்றுக் கொள்ளப்படாதது மட்டுமல்ல தமிழ் மக்களுக்கு எதிரான போர் மேலும் தீவிரப்படுத்தப்பட்டது. தமிழ் மக்களின் பிரதிநிதிகள் பலர் உயிர் அச்சுறுத்தலுக்கு உள்ளானர்கள். சிலர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

இறுதியாகக் கடந்த வருடம் இடம்பெற்ற வடமாகாண சபைத் தேர்தலின் போது தமிழ் தேசியக் கூட்டமைப்பினர் 'ஒன்றுபட்ட இலங்கையில் வடக்கு – கிழக்கு இணைந்த உள்ளக சுயநிர்ணய உரிமையுடன் கூடிய அதிகாரப் பகிர்வு' என்ற கோஷத்தை வைத்து தமிழ் மக்களிடம் ஆணை கோரினர். தமிழ் மக்களும் 85 வீதத்துக்கும் அதிகமான வாக்குகளால் ஆணை வழங்கினர்.

அந்த ஆணைக்கு இலங்கை அரசாங்கம் வழங்கிய பதில் என்ன? இன்று ஜெனிவா தீர்மானத்துக்கு எதிராக ஆணை வழங்கும்படி கோரும் ஜனாதிபதி மஹிந்த ராஜபக் ஷ தமிழ் மக்களின் ஆணைக்கு வழங்கிய மதிப்பு என்ன?

தனக்கொரு நீதி பிறருக்கொரு நீதி என்பது கொடுங்கோல் ஆட்சியாளர்களின் அடிப்படைக் கொள்கைதான். எனினும் மக்கள் ஆணைக்கு மதிப்பளிக்காதவர்களுக்கு மக்கள் ஆணையைப் பற்றிப் பேச என்ன அருகதை இருக்கிறது.

ஜெனிவாவில் இடம்பெறுவது ஒரு தனி நாடு தொடர்பான பிரச்சினை அல்ல. அது முழு உலகுக்கும் பொதுவான போர்க்குற்றங்கள், மனித உரிமை மீறல்கள் தொடர்பான பிரச்சினை. அவை இலங்கையில் எவ்வாறு இடம்பெற்றன என்பது இந்தப் பிரச்சினையின் ஒரு பகுதி மாத்திரமே.

உலகின் பொதுப் பிரச்சினையை இலங்கையின் இரு மாகாணங்கள் வழங்கும் ஆணை மூலம் கட்டுப்படுத்த முடியுமா? தமிழ் மக்கள் தங்கள் பிரச்சினைக்கு ஆணை வழங்கிய போதே அதைப் பொருட்படுத்தாது எதிர் நடவடிக்கைகளை மேற்கொள்பவர்கள் உலகப் பொதுப்பிரச்சினைக்கு ஆணை வழங்கமளவுக்கு நப்பாசை கொள்வது அதிசயம் தான்?

ஜெனிவாவுக்கு இலங்கை எந்தச் செய்தியையும் சொல்லலாம். அதை எவரும் பொருட்படுத்தப்போவதில்லை. ஆனால் ஜெனீவா இலங்கைக்கு சொன்ன செய்தி இன்றில்லாவிடினும் என்றோ ஒரு நாள் போர்க்குற்றவாளிகளையும் மனித உரிமை மீறலர்களையும் கூண்டில் நிறுத்தும்.

# தண்ணீரில் நடக்கும் டைனமோ

பறப்பதற்கும் தண்ணீரில் நடப்பதற்கும் எல்லோருக்கும் ஆசை தான். ஆசை இருந்தாலும் அதைச் செயற்படுத்த எல்லோராலும் முடியாதே. ஒருசிலரால் தான் அந்த அற்புதங்களை நிகழ்த்த முடிகிறது. அப்படியொருவர் 2011 ஜூன் 25 அன்று லண்டன் தேம்ஸ் நதியின் மீது நடந்து சென்று மக்களை ஆச்சரியத்தில் மூழ்கடித்துள்ளார். அவர் டைனமோ என்னும் புகழ்பெற்ற மேஜிக் நிபுணர்.

இதைப் போல மக்களைப் பரவசத்தில் ஆழ்த்தும் பல நிகழ்ச்சிகளை இவர் நடத்தியுள்ளார். ஒரு முறை லொஸ் ஏஞ்சல்ஸ் நகரில் உள்ள உயரமான டைம்ஸ் கட்டடத்தின் பக்கவாட்டுச் சுவரில் நடந்தே தரைக்கு இறங்கியுள்ளார்.

கடந்த ஆண்டு ஜூன் மாதம் லண்டனில் இரட்டைத் தட்டு பஸ்ஸின் கூரை மீது தரையிலிருந்து 15 அடி உயரம் – வலது கையைத் தொட்டபடி உடல் முழுவதையும் அந்தரத்தில் தொங்கவிட்டுவந்தார். கண்ணாடி வழியே ஊடுருவுவார். விரலைக் கையிலிருந்து ஒடித்து மீண்டும் பொருத்துவார். இவையெல்லாம் சில எடுத்துக்காட்டுகளே.





சாதாரண மனிதன் நினைத்தே பார்க்க முடியாத சாகசச் செயல்களை அநாயாசமாகச் செய்து காட்டியுள்ளார் டைனமோ. ஹிஸ்டரி என்ற தொலைக்காட்சி அலைவரிசையில் ஒளிபரப்பான இவரது 'மேஜிசியன் இம்பாஸிபிள்' நிகழ்ச்சியை 24 லட்சம் பேர் பார்த்துள்ளனர். இதற்குச் சிறந்த பொழுதுபோக்கு நிகழ்ச்சி விருதும் இருமுறை கிடைத்துள்ளது. இந்த நிகழ்ச்சி 'டிவிடி' வடிவில் விற்பனையானபோதும் பெரும் வரவேற்பு பெற்றுள்ளது. இவையெல்லாம் இவரது திறமைக்குச் சான்றுகள்.

ரசிகர்களால் டைனமோ என அழைக்கப்படும் ஸ்டீவன் பிரேய்ன் இங்கிலாந்தில் உள்ள பிராட்போர்டில் 1982இல் பிறந்தார். இவரது தந்தை அடிக்கடி குற்றச்செயல்களில் ஈடுபட்டுச் சிறைக்குச் சென்றுவிடுவாராம். எனவே தாயின் பராமரிப்பில்தான் வளர்ந்துவந்திருக்கிறார். தந்தையின் இடத்தில் இருந்து இவரைப் பார்த்துக்கொண்டவர் இவருடைய தாத்தாவான கென். இவர்தான் டைனமோவின் உதாரண புருஷர். இவரும் சிறு அளவிலான மந்திர தந்திர வித்தைகளில் ஈடுபட்டவர். இவரிடமிருந்து தான் மாயாஜால வித்தைகளை டைனமோ கற்றுக்கொண்டுள்ளார்.

2012இல் தாத்தா இறந்தமை தனது வாழ்வின் பெருந்துக்கம் என்கிறார் டைனமோ. தொடக்க காலத்தில் ஸ்டீவன் சீட்டுக் கட்டுகளை வைத்துப் பல தந்திர விளையாட்டுகளில் ஈடுபட்டுப் பார்ப்போரைக் கவர்ந்திருக்கிறார். இவருக்குப் பிடித்த கதாநாயகப் பாத்திரங்களில் ஒன்று சூப்பர் மான். சூப்பர் மானின் சாகசங்கள் எல்லாம் உண்மையானவை என நம்பியுள்ளார் இவர். டைனமோ என்ற பிரபலமான மாஜிக் நிபுணரானபோது தன்னையும் சூப்பர் மான் போல் நினைத்துக்கொண்டே தந்திர நிகழ்ச்சிகள் ஈடுபட்டதாக இவர் சொல்கிறார்.

இளவயதில் ஏற்பட்ட குடல் அழற்சி நோயின் பாதிப்பையும் மீறி ரசிகர்கள் தந்த உற்சாகத்தால் தொடர்ந்து சாகச நிகழ்ச்சிகளில் ஈடுபட்டுள்ளார் டைனமோ. சாதாரணமாக வீதியில் மாயாஜால நிகழ்ச்சிகளை நடத்திவந்த இவருக்கு இப்போது உலகம் முழுவதிலும் ரசிகர்கள் உள்ளனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஏப்ரல் 02-08 , 2014
sudarolijaffna@gmail.com
சுடர் ஒளி
வாராந்த சஞ்சிகை
361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி-: 021 567 7609

# ஊதிப்பெருக்கும் சர்வதிகாரம்

**ஜெ**னிவாப் பிரேரணை சமர்ப்பிக்கப்பட்ட சூடு ஆறுவதற்கிடையில் மேல்மாகாண மற்றும் தென் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் நடந்து முடிந்திருக்கின்றன. ஜெனிவாவில் பட்ட அடியை ஆற்றுவதற்கு இந்தத் தேர்தல் முடிவுகளே அரசுக்கு உதவியிருக்கின்றன. வழக்கம்போலவே இந்த இரண்டு மாகாணங்களிலும் ஆளுந்தரப்பே அமோக வெற்றியீட்டியிருக்கிறது.

உண்மையில் இந்த வெற்றியை தமிழர்கள் கொண்டாட முடியாதுதான். ஏனெனில் ஐக்கிய மக்கள் சுதந்திரமுன்னணியின் ஆட்சியில்தான் தங்கள் தலைவிதி குருதியால் மாற்றப்பட்டதை இன்னமும் தமிழர்கள் மறக்கவில்லை. ஆகவே ஆளுந்தரப்பின் வெற்றி என்பது அவர்களால் ஏற்றுக்கொள்ளப்படமுடியாத ஒன்று.

ஆயினும் இம்முறை அரசு ஜெனிவாவில் தோற்கடிக்கப்பட்ட பின்னும் தென், மேல்மாகாணங்களில் வென்றதன் ஊடாக சர்வதேசம் ஒரு செய்தியை உணர்ந்திருக்கும். அதாவது தோற்கடிக்கப்பட முடியாத - நீண்ட ஆயுளைக்கொண்ட - சர்வதிகாரத்தை நோக்கி இலங்கை பயணிக்கிறது என்பதே அந்தச் செய்தி.

ஏற்கனவே இரு தடவைகளுக்கு மேல் ஒருவர் ஜனாதிபதியாக முடியாது என்ற அரசமைப்பை மாற்றி எத்தனை தடவையும் ஜனாதிபதியாகலாம் என தங்களுக்கு வசதியாக சட்டங்களை ஆளுந்தரப்பு உருவாக்கிவைத்திருக்கிறது. இந்த நிலையில் வடக்கு, கிழக்கு தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் அசைக்க முடியாத நிலையில் ஆளுந்தரப்பு சம்மணமிட்டு உட்கார்ந்திருக்கிறது.

அபிவிருத்தித்திட்டங்கள், மக்கள் நலன்சார் செயற்பாடுகள், பொருளாதார முன்னேற்றங்கள் என்று அரசின் நடவடிக்கைகளால் கவரப்பட்டு மக்கள் வாக்குகளை அளிக்கவில்லை. நாட்டில் ஓரளவுக்கேனும் அபிவிருத்தி நிகழ்வது உண்மைதான். ஆனால் அந்த அபிவிருத்தி நடவடிக்கைகளில் பெரும்பாலானவை விழலுக்கு இறைத்த நீராகவே வீணாகின்றன. இதற்கு நல்ல உதாரணம் மத்தள விமான நிலையம். கோடிகோடியாகக் கொட்டி கட்டப்பட்ட இந்த விமானத்தளத்தில் குரங்குகளும் பறவைகளுமே தரையிறங்கிச் செல்கின்றன. மத்தள விமான நிலையப் பாணியில் கொழும்பிலும் கடலுக்கு நடுவே 500 ஏக்கரில் நகர் ஒன்றைக் கட்டியெழுப்பவும் முயற்சிகள் நடக்கின்றன. இதுவும் காசைக் கரியாக்கும் வேலையே.

நிமிரமுடியாத சுமையாக அழுத்தும் விலைவாசி, ஏறமறுக்கும் சம்பளம், தொடர்ந்து துரத்தும் பொருளாதாரப் பிரச்சினைகள் என்று மக்கள் கூழுக்கே அழும் நிலையில் இந்த் எடுப்பெல்லாம் தேவைதானா? அப்படியிருந்தும் ஆளுந்தரப்புக்கு மக்கள் தொடர்ந்தும் வாக்களிப்பதற்குக் காரணம் ஆளுந்தரப்புக்கு மாற்றான - வேறு தெரிவாக - எதிர்க்கட்சி இன்மைதான். ஐ.தே.க சேடமிழுத்துக்கொண்டிருக்கிறது. ஜே.வி.பி.யும் பொன்சேகாவின் கட்சியும் துண்டங்களாகிக் கொண்டே இருக்கின்றன. இத்தகைய நிலையில் தொடர்ந்தும் மஹிந்த குடும்பத்தின் ஆட்சியே நீடிப்பதற்கு அறிகுறிகள் உண்டு.

எனவே ஜனநாயகத்தால் ஆட்சிக்கட்டிலில் இருந்து தூக்கி எறியப்பட முடியாதபடி அரசமைப்பையே மாற்றிவைத்துள்ள 'மஹிந்த கொம்பனியை' சர்வதேசம் சர்வதிகாரியாக இன்னும் ஊதிப் பெருக்க விடப்போகிறதா அல்லது உண்மையான ஜனநாயகத்தை கொண்டுவரும் வழிகளைத் தேடப்போகிறதா?

# இந்தியாவும் இலவுகாத்தவர்களும்

பிரமன்



ஏமாறப்பிறந்தவர்கள்

*பச்சை வர்ணத்தில் காய்கள் கொத்துக் கொத்தாக தொங்கிக் கொண்டிருந்தன. கிளிகளுக்கு ஒரே ஆனந்தம். 'அட! இவ்வளவு பெரிய காய்களா? இவை பழுத் தால் ஆயுள் முழுக்க எங்கள் பசி தீர்க்க காணுமே' என்று எண்ணின. எல்லா வேலைகளையும் விட்டு விட்டு அந்த மரத்தையே சுற்றிச் சுற்றி வந்தன. பசித்தது. ஆயினும் காய்கள் கனியானால் இந்தப் பசிக்கு நிரந்தரமாக முடிவு கட்டி விடலாம் என்ற நம்பிக்கையோடு அங்கேயே அசையாதிருந்தன. ஆனால் ஒருநாள் 'டப்' என்ற சத்தம். காய் ஒன்று வெடித்து அதிலிருந்து வெண்மை நிறத்தோடு பஞ்சு பறக்கத் தொடங் கியது. பின்னர் அந்த வெடிப்பு எல்லாக் காய் களுக்கும் தொற்றிக் கொள்ள, அந்த இட மெல்லாம் ஒரே பஞ்சு மயம். அப்போதுதான் கிளிகள் "எட நாங்கள் கனியாகாமல் பஞ்சாகப் பறக்கும் இலவம் காய் களுக்காகவா காவல் இருந்தோம்" என்று நொந்துகொண்டே பறக்கத் தொடங்கின. நீண்டதூரம் பறந்ததும் மீண்டும் ஒரு மரத்தில் இன்னும் நிறைய பச்சைக்காய்கள். கிளிகளுக்கு மீண்டும் வாயூறியது. அந்தக் காய்களுக்காகவும் காத்திருக்கத் தொடங்கின, அவை யும் இலவம் பஞ்சுக் காய்கள் என்பதை அறியாமல்.*

## முடிந்தது திருவிழா

இந்தா...அந்தா என்று எல்லோரும் வாய்பிளந்து பார்த்து நின்ற இந்த வருடத்து ஜெனிவாத் திருவிழா இனிதே ஒப்பேறிவிட் டது. சாம்பல் பறக்க தங்கள் பின்பக்கத்தைத் தட்டிக் கொண்டு திருவிழாவுக்கு வந்திருந்த வியா பாரிகள் எல்லோரும் மூடை முடிச்சுகளோடு கப்பலேறிக் கொண்டிருக்கிறார்கள்.

"இந்தமுறை திருவிழாவில அப்பிடி என்னதான் விஷேசம்? எங்களுக்கு ஏதும் தீர்வு கிடைக்குமோ? ஏதாவது புதுச்செய்தி இனியாவது கிடைக்குமோ" என்ற நப்பாசையில் ஒவ்வொருவரும் எதிர்ப்படுபவர்களிடம் கேட்கத்தவறவில்லை. அவர்களும் பழையபடி உதட்டைப் பிதுக்கிவிட்டு "உதெல்லாம் உப்புச்சப்பில்லாத திருவிழாக்கள். ஒரு சீலம்பாயும் நடக்கேலை" என்று இருக்கிற கடுப்பை இன்னும் ஏற்றிக் கொண்டு நகர்வார்கள்.

இருண்டுபோன தமிழர்களின் வாழ்வியலில் மீண்டும் ஒளியேற்றும் புதிய சூரியனொன்றை கண்டு பிடிக்கும் மாயங்கள் எதனையும் ஜெனிவா செய்யாவிட்டாலும், ஒரு நெருப்புக்குச்சியைத்தானும் தரவில்லையே என்பதுதான் அநேக தமிழர்களின் ஆதங்கமாக இருக்கிறது. அதிலும் தங்கள் பக்கத்து

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவும் இலவுகாத்தவர்களும்




நாடான இந்தியா, இந்தமுறை வாக்கெடுப்பில் கலந்துகொள்ளாது தங்களைக் கழுத்தறுத்தமைதான் இன்னும் அவர்களுக்கு எரிச்சலை மூட்டியிருக்கிறது. வழக்கம் போல அமெரிக்காவின் பிரேரணையை மென்மைப்படுத்திவிட்டு அதனை இந்தியா ஆதரிக்கும் என்றே பலரும் நம்பியிருந்தனர். ஆனால் அதைவிடவும் மேலே போய் "எனக்கு ஈழத் தமிழர்களை விடவும் இலங்கை அரசே முக்கியம்" என்ற செய்தியை இந்தியா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது பதுங்கியதன் மூலம் புலப்படுத்தியிருக்கிறது.தான் எப்போதும் தமிழர்களுக்கு வாலை யும் பேரினத்துக்கு தலையையும் காட்டும் முள்ளந்தண்டற்ற விலாங்கு மீன் தான் என்பதை இந்தியா இன் னொரு முறை சொல்லியிருக்கிறது.

என்றாலும் வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாததை வைத்து இந்தியா நடுவுநிலைமை வகித்தது என்று எவரும் கூறினால் அது விட அபத்தம் வேறொன்றுமில்லை. இந்தமுறை தான் எதற்காக வாக் கெடுப்பில் கலந்து கொள்ளவில்லை என்பதை இந்தியா சரியான படி தெரிவிக்கவில்லை.

**இந்தியா வாக்கெடுப்பில் கலந்து கொள்ளாது பதுங்கியதன் மூலம் புலப்படுத்தியிருக்கிறது.தான் எப்போதும் தமிழர்களுக்கு வாலையும் பேரினத்துக்கு தலையையும் காட்டும் முள்ளந்தண்டற்ற விலாங்கு மீன் தான் என்பதை இந்தியா இன்னொரு முறை சொல்லியிருக்கிறது.**

"இலங்கையில் போருக்கு பின்னர் மேற்கொள்ளப்பட்ட அபிவிருத்திகளை கணக்கில் கொள்ளாமல் இந்தப்பிரே ரணை கொண்டுவரப்பட்டுள்ளது" என்று ஒரு சப்பைக் காரணத்தை சாட்டுக்கு சொல்லி விட்டு பின்கதவால் போயேவிட் டது இந்தியா.

### புத்தி இன்னும் வரவில்லையே

பலமுறை இப்படி இந்தியா காலால் எட்டி உதைத்த பின்னும் இந்தியாதான் தங்கள் தொப்புள் கொடி உறவு என்று இன்னமும் தமிழர்கள் நம்புகிறார்கள். அடிக்கிற கைதான் அணைக்கும் என்ற கொள்கையை தமிழர்கள் எந்தவிடயத்தில் பின்பற்றாவிட்டாலும் இந்திய உறவு பற்றிய விடயத்தில் மட்டும் விடாமல் உடும்புப்பிடியாகக் கொண்டிருக் கிறார்கள். எனவே இறுதிப்போரில் தாங்கள் பட்ட காயங்களுக்கெல்லாம் இந்திய உதவியுடன் தான் மருந்திட முடியும் என்பதும் அவர் கள் எண்ணம். இது இந்தியாவுக்கும் நன்கு தெரியும். அப்படியிருந்தும் இன்னமும் தன் விரோதிகளைப் போலவே தமிழர்களை இந்தியா கருதுகின்றது. ராஜிவ் என்ற தனி மனிதனின் சாவுக்கு ஈழத்தமிழினத் தையே கருவறுத்து தன் பழியைத் தீர்த்துக் கொள்ளவே அது தொடர்ந் தும் முனைகின்றது. இதனால் தான் தமிழர்கள் மீதான இறுதிப்போரை நடத்தி முடிக்க இலங்கை கேட் டதையெல்லாம் இந்தியா தூக்கிக் கொடுத்தது. அப்படியும் அதன் வெறி அடங்கவில்லைப் போலும். தமிழர்களுக்கான தீர்வுக்கான சின்ன அறிகுறி தென்பட்டாலும் கூட அதனை கெட்ட சகுனமாகக் கருதி, பதறியடித்து எப்பாடுபட்டாவது அந்த அறிகுறியை இல்லாதாக்குவது தான் இந்தியாவின் வேலை.

எனவேதான் ஈழத்தமிழர்களுக்கு கொஞ்சமென்றாலும் நீதியைப் பெற்றுத்தர விழைகின்ற ஜெனிவாப் பிரேணைகளைக் குழப்ப அது முடிவு செய்தது. ஆனாலும் கடந்த முறை தமிழக மாணவர்களினதும் அரசியல் கட்சிகளினதும் எழுச்சி யால் வேறு வழியின்றி இலங் கைக்கு எதிராக – பிரேரணைக்கு ஆதரவாக – இந்தியா கையை உயர் த்தியது. இந்தமுறை நாடாளுமன்ற தேர்தல் நடவடிக்கை களில் தமி ழகக்கட்சிகள் கன்னை பிரிந்து , ஆளுக்கொரு திசையில் 'மைக்' சகிதம் புறப்பட்டு விட்டார்கள். மாணவர்களின் போராட்டமும் கடந்தமுறை போன்று வீரியத் தோடு பரவவில்லை. இவையெல் லாம் இந்திய ஆளும்தரப்புக்கு தன் எண்ணத்தை ஈடேற்ற வசதியாகப் போய்விட்டது. எப்படியாவது இலங்கைக்கு 'ஐஸ்' வைக்க வாக் கெடுப்பை இந்தியா புறக் கணித்தது. அப்படியானால் இலங்கைக்கு பிரேரணையை எதிர்த்து இலங்கைக்கு சார்பாக இந்தியா வாக்களித்திருக்கலாமே என்று சிலர் கேட்கலாம்.ஆனால் இலங்கையை நேரடியாக ஆதரித்தால் நாடாளுமன்றத் தேர்தலில் இன்னும் சரிவை உண்டுபண்ணிவிடும் என்பதாலேயே நடுவு நிலைமை வகிப்பதாகக் கூறி காங்கிரஸ் தலைமையிலான இந்திய அரசு ஓடி ஒளிந்து கொண்டது.


### பகையாளிகளுடன் கைகோர்த்தல்

இதில் என்ன வேடிக்கை என்றால், தன் காலை கட்டிப்பிடித்து கதறிய தமிழர்களை எட்டி மிதித்த இதே இந்தியா, தன் நாட்டு எல்லையில் கண்களில் பகை கொண்டு கொலை வெறியோடு அலையும் நாடுகளோடு கைகோர்த் ததுதான். சீனாவும், பாகிஸ்தானும் இந்தியாவின் ஜென்மப்பகையாளி கள். சந்தர்ப்பம் கிடைக்கும் போதெல்லாம் இந்திய எல்லைக்குள் ஊடுருவுவதும், இந்திய இராணுவத்தினரை வேட் டையாடுவதும் தான் அவர்கள் தொழில். இலங்கை மட்டும் சும்மாவா? கடலில் இந்திய மீனவர்களை சுட்டும், வெட்டியும், சிறை பிடித்தும் தன் பங்குக்கு இந்தியா மீது காறி உமிழ்ந்த படியே இருக்கிறது. ஆனால் காந்தி தேசத்துக்கு சுரணை நரம்பு அறுந்து விட்டதால் தன் ஜென்மப் பகை யாளிகளோடு சேர்ந்து, போர்க் குற்றவாளியான இலங்கையைக் காப்பாற்ற முனைந் திருக்கிறது. ஆயினும் எப்படியோ பிரேரணை வென்றுவிட்டது.

ஆனாலும் இந்த முறை இந்தியா இலங்கையைக் காப்பாற்ற முனைந்தது கத்திமேல் நடப்பதற்கு ஒப்பான செயல்தான். ஏனெனில் இந்திய நாடாளுமன்றத் தேர்தலுக்கான அறிவிப்பு வெளிவந்த சூழலில் இலங்கைக்காக வாக்கெடுப்பிலிருந்து இந்தியா ஒதுங்கிக்கொண்டதால் தமிழகத்தில் பெரும் எதிர்ப்பு அலை எழுந்துள்ளது. இந்த எதிர்ப்பலை தற்போது இந்திய ஆட்சிக்கட்டிலை அலங்கரிக்கும் காங்கிரஸ்கட்சிக்கு எதிர்மறையான விளைவுகளையே ஏற்படுத்தக்கூடும். ஏற்கனவே காங்கிரஸோடு கூட்டுச்சேர தமிழகத்தில் இரண்டு பிரதான கட்சிகளுமான தி.மு.கவும், அ.தி.முகாவும் மறுத்துவிட்டன. இதனால் தன்னந்தனியனாக களமிறங்கும் காங்கிரஸ் இப்போது இலங்கைக்கு எதிரான பிரேரணைக்கு ஆதரவாக வாக்களிகாமல் நழுவியதன் மூலம் தனக்கிருந்த கொஞ்சநஞ்ச வாக்குகளையும் அது இழந்துள்ளது.

இவ்வாறான நிலையிலும் இலங் கையை அது ஆதரித்த இரகசியம் என்ன? உண்மையில் சீனா கொண்டு வரவுள்ள முத்துமாலைத்திட்டத்தின் பிரதான தொடுப்பாக அமையப்போகும் இலங்கையை எப்பாடு பட்டாவது தனது பிடிக்குள் கொண்டுவருவதற்கே இந்த நாடகத்தை இந்தியா ஆடியுள்ளது. இதுதவிர திருமலைத் துறைமுகம், நுரைச்சோலை அனல் மின்நிலையம் போன்ற அரசியல் பொருளாதார நலன்களையும் பெறுவதற்கே இவ்வாறு இந்தியா வாக்களிப்பில் கலந்துகொள்ளாமல் பேசா மடந்தையாக ஐ.நா.சபையில் அமர்ந்திருக்கக் கூடும். இந்தியாவின் திட்டம் பலிக்கத் தொடங்கிவிட்டது போலவே தெரிகிறது. ,

இக்கட்டான நிலையில் இந்தியா செய்த பேருதவிக்கு கைமாறாக, சிறை களில் உள்ள இந்திய மீனவர்களை விடுவிக்குமாறு ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ உத்தரவிட்டுள்ளார். யார் கண்டது, மஹிந்த இருக்கும் புளுகத்தில் கச்சதீவைக் கூட பரிசாக இந்தியாவுக்கு கொடுத்துவிடக் கூடும். ஜெனிவாவில் இலவு கனியு மென்று காத்திருந்தவர்களே! இன் னும் காத்திருப்போம். காத்திருத் தல் மட்டுமே நமக்கு நிரந்தத் தலையெழுத்தல்லவா.






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கவிதைப் புனல்



## முகமிழுத்தல் குற்றமல்ல

சாத்தானின் நாக்குகள்
எங்கும் தொங்க
அடைபட்டுக் கிடக்கிறேன்
தீக் குளித்தவளின்
கால்கள்
முலை திருகியவளின்
கைகள்
கல்லாகிப்
போனவளின்
கனவுகள்
எல்லாவற்றுடனும் தான்
அடைபட்டுக் கிடக்கிறேன்
சூனியக்காரிகளின்
கேசம் மட்டும் தான்
என்னை சூழ்ந்திருக்கிறது...!
எத்தனை காலம்
இந்த சகதிக்குள் ?
இங்கு
மூச்சு விடுவது தான் குற்றம்
முகமிழுத்தல் அல்ல

-மதுஷா மாதங்கி-

## உயிர் கொண்டலைதல்

ஓ....
என் உயர்ந்த தேசமே......!
இதோ
அனைத்தையும் மறைக்காது,
நான்கு கண் வழி
உனை தேடி மடிகிறேன்.
தொங்கும் என் கனாக்கள்
உனக்கு விருந்தாகட்டும்,
இன்னும் அதிகமாக............!
கரத்தினில் கனக்கும்
என் உயிரையும் கொண்டு
அலைகிறேன்.
இனி உன் தேசமாவது
பூக்களை பூக்கச் செய்யட்டும்.
உன் பூக்களுக்கு வியர்த்தால்,
கொஞ்ச நேரம் என் விசிறி கொடு



## ஈழத்தில் பெண்

– மகாலிங்கம் பத்மநாதன்
(பரந்தன்)

கஞ்சியோ கூழோ
கிடைத்ததை உண்டு
காவியோ வெள்ளையோ
கசக்கி உடுத்து
கோவில் குளமென
எங்கும் சென்று
ஓலைக் குடிசையில்
மகிழ்வாக வாழ்ந்தோம்

திருமணம் என்றனர்
சிணுங்கி மறுத்தேன்
உனக்கு கீழே
தங்கைகள் பலருளர்
அவர்க்கு நீயும்
வழிவிட வேண்டும்
சரியென உணர்ந்து
சம்மதம் என்றேன்

கறுப்பாக எடுப்பாக
கணவரும் வந்தார்
கடைசி வரைக்கும்
காப்பேன் என்றார்
இருவரும் சேர்ந்து
இணையாக

உழைத்தோம்
சிக்கனமாக நாம்
சேமித்து வாழ்ந்தோம்

ஆசைக்கொரு பெண்
ஆஸ்திக்கொரு ஆண்
அழகாகப் பிறந்தனர்
அன்பாக வளர்த்தோம்
மேடும் வந்தது
பள்ளமும் வந்தது
ஒருவருக்கொருவர்
துணையாக வாழ்ந்தோம்

போரும் வந்தது
எதிரியும் வந்தான்
நித்தம்நித்தம் குண்டுகள்
பொழிந்தான்
இரத்தம் சிந்தி
மக்கள் மாண்டனர்
சித்தம் மறந்து
சிதறி ஓடினோம்

ஓட ஓட எதிரியும்
விரட்டினான்
ஊரோடொத்து
நாமும் ஓடினோம்
காடுமேடெல்லாம்
கடந்து ஓடினோம்
பிணங்களைத் தாண்டி
பீதியோடோடினோம்

(அடுத்தவாரம் தொடரும்)

## கொதிக்கிறது வயிறு



அடுப்பு
வைச்சு...

அடுப்பு
மேலே

நெருப்பு
வைச்சு...

நெருப்பு
மேலே

பானை
வைச்சு...

பானைக்குள்ள
தண்ணி
வைச்சு...

தண்ணிக்குள்ள
அரிசி
போட
வழியில்லையே
எனக்கு...

நான் வைச்ச
பச்சை தண்ணி
ஒரு பக்கம்
ஆவியாப்
போகுதே!

மறுபக்கம்...

என் பச்சை
உயிரும்
ஆவியாப்
போகுதே

பாழாப் போன
இந்தப்
பசியாலே....

- யாரோ

## தவிர்க்கும் நொடிகள்

உன்னோடு பேச
எனக்கும் ஆசைதான்...!
ஒருமுறையல்ல இருமுறையல்ல
ஒவ்வோர் நொடிகளிலும்தான்....!
ஆனாலும் தவிர்க்கிறேன்...
எங்கே உன்னிடம்
இன்னுமொருமுறை
தோற்றுவிடுவேனோ
என்ற பயத்தில்....!!!



## தமிழ் எங்கள் உரிமை

தமிழெங்கள் தலையாகும்
தமிழுக்கே விலையாகும்
தமிழெங்கள் உயிரோடு
தருவது இதற்காகும்

தமிழெங்கள் நடையாகும்
தமிழெங்கள் நடப்புமாகும்
தமிழெங்கள் உடையாகும்
தமிழெங்கள் படையாகும்

தமிழெங்கள் கண்ணாகும்
தமிழெங்கள் காட்சியாகும்
தமிழெங்கள் பொருளாகும்
தமிழெங்கள் பொதுவாகும்

தமிழெங்கள் விழியாகும்
தமிழெங்கள் விழிப்பாகும்
தமிழெங்கள் சொல்லாகும்
தமிழெங்கள் வில்லாகும்!


- கல்லொளுவை பாரிஸ் (மல்வானை)

## தலைப்புச் செய்தி

நிலவு
இப்போதெல்லாம் அதிகமாக
மேகத்தையழைத்து
தன்னை முழுமையாக
இழுத்து போர்த்துகிறது

பூமியிலுள்ள
மனிதரெல்லாம்
வெறும் பார்வையாலே
கற்பழிப்பதால்

சா. ரமேஸ்குமார்,
மருதனார்மடம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படிப்பா? ஐயோ பிச்சை வேண்டாம் நாயைப்பிடி..

— இலக்கியா

**இன்றைய கல்வி முறைமை வெறும் பரீட்சை பெறுபேறு எனும் வட்டத்துள் சிக்கித் தவிப்பதோடு மட்டுமன்றி பிள்ளைப்பருவத் திலேயே கல்வியை வெறுப்படையவும் வைக்கின்றது. பரீட்சை என்பது சந்தை வாய்ப்புக்கான அளவுகோலே தவிர நூறு வீதம் பிள்ளையை மதிப்பிடுவதற்கான கருவி அல்ல.**


மனிதனுக்கு அந்தந்த வயதிற்கேற்ற இயல்பிலேயே அவனது அறிவு வளர்ச்சியும் ஏற்படினும் புறக்காரணிகள் பெரிதும் செல்வாக்குச் செலுத்தத்தான் செய்கின்றன. கேட்பவை, பார்ப்பவை,வாசிப்பவை உணர்பவை போன்றவை அறிவு வளர்ச்சியை ஏற்படுத்தும் புறக்காரணிகளில் முக்கியமானவை. சரி என்றும் பிழையென்றும் பகுத்தறியும் ஞானமும் இவற்றின் மூலமே கிடைக்கின்றது. குழந்தைகளின் அறிவு வளர்ச்சியை பரீட்சை பெறுபேறுகளில் தேடும் பெற்றோரது பகுத்தறிவு பற்றி வருந்தவே தோன்றுகின்றது. இன்றைய கல்வி முறைமை வெறும் பரீட்சை பெறுபேறு எனும் வட்டத்துள் சிக்கித் தவிப்பதோடு மட்டுமன்றி பிள்ளைப்பருவத்திலேயே கல்வியை வெறுப்படையவும் வைக்கின்றது. பரீட்சை என்பது சந்தை வாய்ப்புக்கான அளவுகோலே தவிர நூறு வீதம் பிள்ளையை மதிப்பிடுவதற்கான கருவி அல்ல.

இவற்றையெல்லாம் நம்மவர்கள் உணர்வதில்லை. யாழ்ப்பாணத்தில் கல்வி பெரும் கலவரமாகவே மாறுகின்றதோ என எண்ணத்தோறுமளவுக்கு சில பாடசாலைகளதும் பல பெற் றோர்களதும் மித மிஞ்சிய அக்கறையைக் கொள்ள முடிகிறது.

யாழ்ப்பாணத்தை பொறுத்த வரை கல்வி ஒரு பந்தயம். இந்தப்பந்தயத்துக்காகக் குதிரைகள் விரட்டப்படுகின்றன. இதில் வெருண்டு தடம் மாறிச் சென்ற குதிரைகளே அநேகம். இந்தச்சந்தர்ப்பங்களிலெல்லாம் தம் பிள்ளைகளைத் தவிர அடுத்த வீட்டு அடுத்த தெரு பிள்ளைகளின் திறனும் புள்ளியுமே அநேகமாக பெற்றோரின் கருத்திற் பட்டுத் தொலைகிறது.

"அவன் இவ்வளவு மார்க்ஸ் எடுத்திருக்கிறான். உனக்கென்ன? அவனைப்பார்த்தாவது திருந்து" என்று. இங்கே பிள்ளையின் நியாயப்பாடுகளுக்கு செவிசாய்ப்பதில்லை. தமது பிள்ளைகளிடம் என்ன திறன் இருக்கிறது என்பதை கண்டறியும் பொறுமையும் ஆர்வமும் இருப்பதில்லை. பெற்றோர் தாம் நினைத்ததை பிள்ளைகளில் திணிக்கும் முறைமை இன்னும் குறையவே இல்லை. பிள்ளையை மற்றப் பிள்ளைகளுடன் ஒப்பிடும் விவேகம் குறைந்த செயலால் பல குழந்தைகள் தாழ்வுச்சிக்கலுக்குள்ளாகி தம்மை தாழ்ந்தவர்களாகவே ஆக்கிக்கொள்வதற்கான அடித்தளத்தை பெற்றோரே இடுகிறார்கள். ஒவ்வொரு குழந்தையும் தனித்துவமானதும் தனித்திறன் கொண்டதும் என்பதை ஏனோ பெற்றோர் விளங்கிக்கொள்வதில்லை. பிள்ளை முன்னர் எடுத்த 98 புள்ளியை விட எப்போதாவது எடுக்கும் 65 புள்ளியே அதிகமாக வீட்டில் பேசப்படும். பெற்றோரே! (முக்கியமாக அம்மாக்களே!) தயவு செய்து பிள்ளைகள் செய்த நல்ல செயற்பாடுகளுக்கு முதலில் பாராட்டை தெரிவித்துவிட்டு குறைகளுக்கு என்ன காரணம் என்பதை பிள்ளையிடமே தெரிந்து அவர்களை வழிப்படுத்துங்கள். பிள்ளைகளை மற்ற பிள்ளைகளோடு ஒப்பிடுவதால் உங்கள் குழந்தை தாழ்வுச்சிக்கலுக்குள் சிக்கி தன் சுயத்தை இழந்து எதற்கும் பிறரையே எதிர்பார்த்து பயந்த சுபாவத்தையுடைய குழந்தையாக உருவாக்காதீர்கள். சில சந்தர்ப்பங்களில் பிள்ளைகள் வழி தவறிச்செல்லும் நிலைக்கும் நீங்களே காரணமாவீர்கள்.

முன்பள்ளி என்பது பிள்ளை சமூகத்துடன் இணைவதற்கும் புதிய ஒரு சூழ்நிலையை உள்வாங்குவதற்கும் பொழுதைக் கழிப்பதற்குமான ஓர் இடமே. யாழ்ப்பாணத்தில் சில பாடசாலைகள் தரம் ஒன்றுக்கு அனுமதிக்கு மிகக் கூடுதலாக கற்றல் அறிவை எதிர்பார்ப்பதால் முன்பள்ளி காலம் கூட கசக்கும் நிலை காணப்படுகின்றது. பிள்ளை கெட்டிக்காரனாக இருந்தால்தான் தரம் ஒன்றுக்கான அனுமதியும் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்தியடைந்திருந்தால்தான் பாடசாலையில் அனுமதி தருவோம் என்று கூறும்



பாடசாலைகளிடம் சில கேள்விகள்–

நன்கு கற்கத்தெரிந்த அல்லது இயல்பிலேயே அறிவு வளர்ச்சியுடைய பிள்ளைகளுக்கு அதீத கவனிப்பு தேவையில்லை. அந்தப்பிள்ளை எந்தச் சூழ் நிலையிலும் கற்கும். அப்படியாயின் இந்த இலவசக்கல்விதான் எதற்கு? ஆசிரியர்கள் எதற்கு? இந்தப்பிள்ளை கள் அதீத புள்ளி எடுப்பதும் பாடசாலையின் வீதம் உயர்வதும் ஆச்சரியமில்லையே. அப்படியாயின் கல்வி அபிவிருத்தியில் குறித்த பாடசாலைகளின் பங்குதான் என்ன?

தாழ்நிலையில் இருப்போரை உயர்த்தும் எண்ணம் யாருக்கும் இல்லை. உயர்ந்தோரை காட்டி, அவர்களை உயர்த்தியது நாம் தான் என்று மார் தட்டிக் கொள்வதில் என்ன பெருமை இருக்கின்றது? யாழ்ப்பாணத்தின் இன்றைய கல்வி வளர்ச்சி வீதம் மிக மோசமான நிலையை எட்டுவதற்கு இவர்களெல்லாம் - இவையெல்லாமே - காரணம். சில பாடசாலைகள் பிள்ளைகளது பெற்றோருக்கும் நேர்முகத்தேர்வு வைக்கின்றன. அதிபர்களே! ஆசிரியர்களே! தயவுசெய்து உங்கள் மனச்சாட்சியைத்தொட்டு சொல்லுங்கள் உங்கள் அனைவரதும் பெற்றோர் கல்வி கற்றவர்களா? கற்ற பெற்றோரால் தான் பிள்ளையை கற்பிக்க முடியும் என்றால் நீங்கள் எதற்கு? மக்களின் பணத்தில் உங்களுக்கான சம்பளம்தான் எதற்கு?

யாழ்.நகரிலுள்ள ஒரு கரையோரக் கிராமத்தின் கிராம சேவையாளர் சொன்னது ஞாபகத்துக்கு வருகின்றது "எங்கட கிராமங்களை சுத்தித்தான் முன்னணிப் பள்ளிக்கூடங்கள் எல்லாம் இருக்கு. ஆனா எங்கட் பிள்ளையளின்ர கல்வி நிலமை சரியான மோசம். அதோட அவையளுக்கு இந்தப்பள்ளிக்கூடங்களில் சந்தர்ப்பம் கிடைக்கிறது சரியான குறைவு"

இவ்வாறு பிள்ளைகளுக்கு மிக அருகில் உள்ள பாடசாலைகளிலேயே சந்தர்ப்பம் மறுக்கும் நிலை எவ்வளவு கொடுமையானது. சாதி, பொருளாதார ஏற்றத்தாழ்வு போன்றனவே இப்படிப்பட்ட வஞ்சிப்புகளுக்கு காரணம் என்று அந்தப் பகுதி மக்கள் சொல்கிறார்கள். பொருளாதார வசதியுள்ளோருக்கும், வைத்தியர்கள் பொறியியலாளர்களது பிள்ளைகளுக்கும் பாடசாலை எவ்வளவு தொலைவில் இருந்தாலும் கற்பதற்கு சந்தர்ப்பம் கிடைக்கிறது என்றால் சாதாரண பிள்ளைகளுக்கு ஏன் கிடைப்பதில்லை?..... இந்த இலவசக்கல்வி அறிமுகப்படுத்தப் பட்டதே எல்லோருக்கும் கல்வி கிடைக்க வேண்டும் என்பதற்காகத்தான். ஆனால் அதற்குள் இத்தனை வேற்றுமைகள்... அநியாயங்கள்... அப்பப்பா!!!!

பெற்றோர் ஒருபுறம் தம் சொந்தப் பிள்ளைகளையே ஒதுக்க சில பாடசாலைகள் பல பிள்ளைகளுக்கு சந்தர்ப்பம் கொடுக்கவே மறுக்கின்றன. யாழ்ப்பாணம் கல்வியியல் எங்கேதான் போகிறது? பாடசாலையின் பெயர் முக்கியமாகப்படும் இந்த படித்த கூட்டத்துக்கு இந்த சமூகத்தின் கல்விநிலை வளர்ச்சி பற்றி எந்த அக்கறையும் இல்லை .

தரம் ஒன்றில் கற்கும் ஒரு பிள்ளை எத்தனை தனியார் வகுப்புகளுக்குச் செல்கின்றது என்பதை ஊர்களுக்குள் வகுப்பு நடத்துவோரது வீட்டுக்கு முன்னால் நின்று பார்த்தால் தெரியும். அதுவும் ஒரு பிள்ளை புலமைப்பரிசில் பரீட்சைக்கு தோற்றப்போகுதென்றால் அப்பப்பா அந்த பிள்ளையைப்படுத்தும் பாடு இருக்கின்றதே. பாடசாலையால் வந்தவுடன் ஓடத்தொடங்கிய பிள்ளை நித்திரை கொள்ளும் நேரத்திற்கே வீட்டுக்கு வருகிறது. யாராவது யோசித்திருக்கிறீர்களா அந்தப் பிள்ளை எப்போது சுயமாகக் கற்கிறது என்று? சுய கற்றல் இல்லாத பிள்ளை எவ்வாறு தேறும்?

உயர்தரத்தில் இன்னும் பெற்றோரின் கௌரவத்துக்காக கற்கும் அநேகமான பிள்ளைகள் பரீட்சையின் பின் செய்வதறியாது நிற்பதைக் காண்கிறோம். கணிதப்பிரிவும் விஞ்ஞானப் பிரிவுமே கௌரவம் தரக்கூடியவை என்ற எண்ணம் இன்றும் யாழ்ப்பாணத்தில் பெருகிக்கொண்டே செல்கிறது. முன்பெல்லாம் சாதாரண தரம், உயர் தரத்தில் சித்தியெய்தவில்லை என்றால் புலிகளாக மாறியுவர்கள் அநேகர் உண்டு. இவையெல்லாம் பெற்றோரின் சுடு சொல்லுக்குப் பயந்தே ஆனால் இன்று இதற்கான சந்தர்ப்பமும் அவர்களிடமிருந்து பறிபோய் தற்கொலை முடிவுகளை நாடும் நிலையை பரீட்சைப்பெறுபேறுகள் வரும் காலப்பகுதி பத்திரிகைகள் ஊடாக அறிய முடியும்.


தயவுசெய்து பிள்ளைகளில் அக்கறை உள்ளவர்கள் அவர்களது மனநிலையை விளங்கி அவர்களுக்கு என்ன நாட்டம் இருக்கின்றது, எத்துறையில் திறன் உள்ளது என்பதை சரியாக விளங்கி அவர்களுடன் கலந்துரையாடி வழிநடத்துங்கள். பாடசாலைகள் செய்யும் பாகுபாட்டை விடுத்து தயவு செய்து கல்விசார் நிர்வாகத்தினரே ஆர்வலர்களே பிள்ளைகளின் நலனைக் கருத்திற்கொண்டு செயற்படுங்கள். இவை எல்லாமே எமது சமூகத்தின் எதிர்காலத்திற்கு ஆரோக்கியமானது. எல்லாமே இழந்த ஒரு சமூகம் கல்வியாலேயே நிமிர்ந்து நிற்க முடியும்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சாயியே சரணம்

## பரவசமூட்டும் ஆன்மீகத் தொடர் – 6



சீரடி சாயி பாபா. எளிய மனிதராக அவதாரமெடுத்த கடவுள் என்று கோடிக்கணக்கான மக்களால் இன, மொழி, மத பேதங்களற்று வணங்கப்பட்டு வருகிறார். சீரடி பாபாவின் காலத்தில் அவரோடு கூடவே தங்கியிருந்து, பாபா நிகழ்த்திய அற்புதங்களைத் தரிசித்த ஹேமாட்பந்த் என்பவர் அவற்றையெல்லாம் தொகுத்து எழுதிய தொடர் இங்கு பிரசுரமாகின்றது.

நைஜாம் சமஸ்தானத்தைச் சேர்ந்த ஔரங்கபாத் ஜில்லா விலுள்ள தூப் என்கிற கிராமத்தில் சாந்த்பாடீல் என்ற வசதி யுள்ள பெருந்தகை ஒருவர் இருந்தார். அவர் ஔரங்கா பாத்துக்குப் போய்க்கொண்டிருக்கையில் ஒரு பெண் குதிரை யைத் தொலைத்துவிட்டார். இரண்டு மாதங்கள் பிரயாசை யுடன் தேடினார். ஆனாலும் காணாமல்போன அக்குதிரை யைப் பற்றிக் கொஞ்சமும் தகவல் பெறஇயல வில்லை. ஏமாற்றத்துடன் குதிரைச் சேணத்தை தன் தோளில் போட்டுக் கொண்டு ஔரங்க பாத்திலிருந்து திரும்பிக்கொண்டிருந்தார். சில கிலோமீற்றர் பிரயாணம் செய்த பின்னர் ஒரு மாம ரத்தினருகில் வந்தார். அதன் அடியில் ஒரு விசித்ர மனிதர் உட்கார்ந்து இருந்தார். அவர் தலையில் ஒரு குல்லாய் கஃப்னி என்னும் நீண்ட ஆடை தரித்திருந்தார். கமக்கட்டில் ஸட்கா என்னும் குட்டையான பருமனான ஒரு தடி வைத் திருந்தார். ஹீக்கா (சுக்கான்) குடிப்பதற்குத் தயார்செய்து கொண்டிருந்தார். சாந்த்பாடீல் அவ்வழியே போவதைக் கண்டு அவரைத் தன்னிடத்திற்குக் கூப்பிட்டுப் புகை பிடிக்க வும் கொஞ்சம் ஓய்வெடுத்துக்கொள்ளவும் சொன்னார். அந்த விசித்திரமனிதர் அல்லது பக்கிரி குதிரைச் சோணத்தைப் பற்றி வினவினார். சாந்த் பாடீல் தனது தொலைந்து போன குதிரையில் மீதிருந்த சேணம் அது என்று கூறினார். அதற்கு அவர் அருகாமையிலுள்ள சோலையொன்றில் தேடும்படி கேட்டுக் கொண்டார். அவர் அங்கே சென்றார். ஆச்சரியத்திலும் ஆச்சரியம்! அவர் தன்னுடைய குதிரையைக் கண்டுபிடித்து விட் டார். அந்தப் பக்கிரி ஓர் சாதாரண மனிதரல்ல. ஆனால் ஓர் அவலியா (பெரும் ஞானி) என்று எண்ணினார். குதிரை யுடன் பக்கரியிடம் திரும்பி வந்தார். ஹீக்கா குடிப்பதற்குத் தயாராகியது. ஆனாலும் இரண்டு பொருட்கள் தேவைப்பட் டன.1) குழாயைப் பற்ற வைப்பதற்கு நெருப்பு. 2) சாபி ( புகை இழுக்கப்படும் ஒரு துண்டுத் துணி) யை நனைப்பதற்கு வேண்டிய தண்ணீர்.பக்கிரி தனது கத்தியை எடுத்து அதை நிலத்தில் நுழைத்தார். அதிலிருந்து எரியும் ஒரு நிலக்கரி நெருப்புத் துண்டம் வந்தது. அதை அவர் குழாய் வழி இட்டார். பிறகு தமது தடியை தரையில் அடித்தார். அவ்விடத்திலிருந்து நீர் கசியத் தொடங்கியது. சாபி நனைக்கப்பட்டது. பிறகு பிழியப்பட்டுக் குழாயில் சுற்றப்பட்டது. இங்ஙனம் எல்லாம் முடிந்த பின்னர் பக்கரி ஜீக்கா குடித்து விட்டு சாந்த் பாடீலுக்கும் புகை குடிக்க கொடுத்தார். இவற்றையெல்லாம் கண்ணுற்ற சாந்தபாடில் வியப்புற்றார். பின்பு அவர் பக்கிரியை தன் வீட்டிற்கு அழைத்து தனது விருந்தோம்பலைச் ஏற்றுக் கொள் ளும்படிச் சொன்னார். மறுநாள் அவர் பாடீல் வீட்டிற்குத் சென்று சில நாள் தங்கியிருந்தார். பாடீல். தூப் கிராமத்தின் அதிகாரி அவருடைய மனைவியின் சகோதரரது புதல்வன் கல்யாணம் செய்யவிருந்தான். சீரடியிலிருந்து மணப் பெண் தேர்ந்தெடுக்கப்பட்டிருந்தாள். எனவே சீரடிக்குப் புறப்படுவதற்கு பாடீல் ஆயத்தங்கள் செய்யத் தொடங்கினார். பக்கரியும் கல்யாண கோஷ்டியுடன் கூட வந்தார். கல் யாணமும் எவ்வித சிரமுமின்றி முடிவடைந்து கோஷ்டியும் 'தூப்'பிற்கு திரும்பியது. ஆனால் பக்கரி மாத்திரம் சீரடியி லேயே இருந்தார். பின்னர் அங்கேயே எப்போதும் இருந்தார்.

### சாயி என்னும் பெயரை பெற்ற பக்கிரி

கல்யாணக் கோஷ்டி சீரடியை அடைந்ததும் ஆன்மீகக் குருவான கண்டோபா கோயிலுக்கு அருகிலுள்ள ஓர் ஆலமரத்தடியில் வந்து தங்கினார். கண்டோபா கோயிலின் பரந்த வெளியில் வண்டிகள் அவிழ்த்து விடப்பட்டன. கோஷ்டி யில் உள்ளவர்கள் எல்லாம் ஒவ்வொருவராக இறங்கினர். பக்கிரியும் கீழே இறங்கினார். இளம் பக்கரி இறங்கிக் கொண்டிருப்பதை பகத் மஹால்ஸாபதி என்ற பக்தர் கண் ணுற்றார். உடனே 'யா சாயி' (சாயி வரவேண்டும்) என்று அழைத்தார். அதிலிருந்து மற்றவர்களும் அவரை சாயிபாபா என்னும் பெயரினால் அழைக்கத்தொடங்கினார்கள்.

### மற்ற ஞானிகளுடன் தொடர்பு

தேவிதாஸ் என்ற ஒரு ஞானி. பாபா வருவதற்குப் பல ஆண்டு களுக்கு முன்பே சீரடியில் தங்கியிருந்தார். பாபா அவர் தம் நட்பை விரும்பினார். அவருடன் மாருதி கோயிலிலும், சாவடியிலும் தங்கியி ருந்தார். சில சமயங்களில் தனியாகவும் இருந்தார். பிறகு ஜான்கிதாஸ் என்று மற்றொரு ஞானியும் வந்தார். பாபா அவருடன் பேசிக்கொண்டிருப்பதிலேயே பெரும பாலான நேரத்தைக் கழித்தார். அன்றி ஜான்கிதாஸ் பாபா தங்கியிருந்த இடத்திற்குச் செல்வார். அங்ஙனமே புண் தாம் பேயினின்று இல்லறத்திலிருந்த வைசிய ஞானியான கங்கா கீர் எப்போதும் சீரடிக்கு வந்தார். சாயிபாபா தம் இரு கைகளா லும் தண்ணீர் குடத்தை தோட்டத்திற்கு நீர் பாய்ச்சுவதற்காக எடுத்துச் சென்றபோது முதன் முதலாக அவரைக் கண்ட கங்காகீர் ஆச்சரியப்பட்டு வியந்து கூறியதாவது.

சீரடி ஆசீர்வதிக்கப்பட்டது.அது விலைமதிக்க முடியாத வைரத் தைப் பெற்றிருக்கிறது. இம்மனிதர் இன்று தண்ணீர் சுமந்து கொண்டிருக்கிறார். ஆனாலும் அவர் சாதாரண மனிதர் அல்ல. இந்த நிலம் (சீரடி) அதிர்ஷ்டமும் புண்ணியமும் உடைய ஓர் வைரத்தைப் பெற்றது. அங்ஙனமே யோவலா மடத்தைச் சேர்ந்த ஆனந்த்நாத் என்பவர் புகழ்பெற்ற ஞானியும், அக்கல்கோட் மாஹாராஜீன் சீடரும் ஆவார். அவர் சீரடி மக்கள் சிலருடன் சீரடிக்கு வந்திருந்தார். அவர் சாயி பாபாவைத் தம்முன் கண்டபோது வெளிப்படையாகப் பின் வருமாறு கூறினார். இது உண்மையில் விலை மதிக்க முடியாத இரத்தினமாகும். அவர் ஒரு சாதாரண மனிதர் போன்று தோன்றினாலும் , அவர் ஒரு சாதாரணக் கல் அல்ல. ஒரு வைரக்கல் கூடிய விரைவில் நீங்கள் இதை உணர்வீர்கள். இதைக் கூறியபின்னர் அவர் யேவலாவுக்குத் திரும்பிவிட்டார்.

### பாபாவின் அன்றாட நிகழ்ச்சி

சாயிபாபா தமது இளம் பருவத்தில் தமது தலையில் முடி வளர்த்தார். தமது தலைமுடியை ஒழுங்கு படுத்துவதே இல்லை. விளையாட்டு வீரனைப் போன்று அவர் உடை யணிந்தார். அவர் ராஹாதாவிற்கு சென்றிருந்தபோது ஜெந்து. ஜாய்.ஜீய் ஆகியவற்றின் சிறிய புஷ்பங்களைக் கொணர்ந்து. தரையைச் சுத்தப்படுத்தி . காய்ந்த நிலத்தைக் கொத்தி அவற் றைப் பயிர்செய்து தண்ணீர்விட்டார். வாமன் தாத்யா என் னும் ஓர் அடியவர் ஆவருக்குத் தினந்தோறும் இரண்டு பானைகள் கொடுத்தார். இவற்றைக் கொண்டு பாபா தமது செடிகளுக்குத் தண்ணீர் விடுவது வழக்கம். கிணற்றிலிருந்து நீர் இறைத்து மட்குடங்களை தாமே தோளில் தூக்கிச் செல் வார். மாலை நேரங்களில் மண் பானைகள் வேப்பர மரத்தடி யல் வைக்கப்பட்டிருக்கும் . அவை வெறும் பச்சை மண்ணால் செய்யப்பட்டு சுடப்படாத காரணத்தால் வைக்கப்பட்ட உடனேயே உடைந்து விடும். அடுத்த நாள் தாத்யா வேறு இரண்டு புதுப் பானைகள் கொடுப்பார். இந்த நிகழ்ச்சி மூன்று ஆண்டுகள் நடந்தது. சாயிபாபாவின் கடினப் பயிற்சி, உழைப்பு ஆகிய வற்றினால் ஒரு பூந்தோட்டம் வளர்ந்தது. இந்த நிலத்தில் தற்போது பாபாவின் சமாதி மந்திர் என்னும் ஓர் பெரிய மாளிகை இருக்கிறது. இந்த மநதிா தற்போது பல பக்தர்களால் பூஜிக்கப்பட்டு வருகின்றது. (ஞானத்தை இன்னும் தேடுவோம்)

## சொற்சிலம்பம் போட்டி இல. 614

| | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|
| 1 | 2 | 3 | 4 | | ■ | 5 | 6 |
| 7 | | | | ■ | 8 | | |
| 9 | | ■ | 10 | 11 | | | ■ |
| | ■ | 12 | | | ■ | 13 | 14 |
| ■ | 15 | | | ■ | 16 | | |
| 17 | | | ■ | 18 | | ■ | |
| 19 | | ■ | 20 | | | 21 | ■ |
| 22 | | | | | ■ | 23 | |

**மேலிருந்து கீழ்**

1. அதிசயிக்கத்தக்க செயல்களை செய்வது.
2. ஆணியை இறுக்கப் பயன்படும் ஆயுதம்.
3. வாழ்.
4. காட்சி கொடுத்தல் .
5. புவி நடுக்கம்.
6. இன்றைய உலகின் இயக்க நாயகன்.
8. எடையான.
11. பிரி.
12. மெல்லிய உலோகப் படலம்.
14. எருதின் ஏரிக்கு இப்படி ஓர் பெயர்.
15. அளவீட்டின் ஒரு அலகு.
16. வீண்.
17. முன்னிலையில்.
18. அகம்.
20. ஒன்றுமல்ல; பலவுமல்ல.
21. நெருப்பில்லாமல் இது வராது

**இடமிருந்து வலம்**

1. நித்தியம்.
5. உலகம்.
7. வெட்டு.
8. யானையை வழி நடத்துபவன்.
9. சூழ்ச்சி.
10. நாவிதன் செய்வது.
12. வம்புக்கு இழு.
13. இடம்.
15. உள்ளம்.
16. முன்னரெல்லாம் அரைப்பதற்கு இதுவே கை கொடுத்தது.
17. உச்சி.
18. புதிய.
19. சேர்.
20. மன்னர் காலத்துப் பெண்கள் காலில் அணிந்த அணிகலன்.
22. வெற்றிலை. பாக்குச் சேர்ந்த கலவை.
23. சிறையில் இருப்பவன்.

அனுப்புபவர் பெயர்:..........................................

விலாசம்:..........................................

..........................................

கையொப்பம்:..........................................

### சொற்சிலம்பம் போட்டி இல. 614

சொற்சிலம்பம் போட்டி 614ற்கான விடைகளை அனுப்பி வைக்க வேண்டிய இறுதித் தினம் 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 16 ஆம் திகதி ஆகும். விடைகள் மற்றும் வெற்றி பெற்றவர்களின் பெயர் விபரங்கள் முறையே 2014 ஆம் ஆண்டு ஏப்ரல் 23ஆம் மற்றும் ஏப்ரல் 30ஆம் திகதிய சுடர் ஒளியில் பிரசுரமாகும். தபாலட்டையில் ஒட்டப்பட்டு அனுப்பப்படும் விண்ணப்பங்கள் மட்டும் ஏற்றுக் கொள்ளப்படும். முதலாவது பரிசாக ரூபா 250 உம் இரண்டாவது பரிசாக ரூபா 150 உம் மூன்றாவது பரிசாக ரூபா 100 உம் வழங்கப்படும். பலர் விடைகளைச் சரியாக எழுதியிருப்பின் அதிஷ்டக் குலுக்கல் மூலம் பரிசுக்குரியவர்கள் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

அனுப்ப வேண்டிய முகவரி:

சுடர் ஒளி யாழ். அலுவலகம், 361, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.

### சொற்சிலம்பம் போட்டி இல. 612 க்கான விடைகள்

**மேலிருந்து கீழ்**

1.பஞ்சாரி, 2.தேசம், 3.சிரி, 4.தும்மல், 5.புலம்பல், 7.தகனம், 9.தடிமன், 12.அரம், 14.கனவான், 15.கொடும், 16.அதிக, 17.வீரன், 18.வர, 19.புண்,

**இடமிருந்து வலம்**

1.பரதேசி, 4.தூப்பு, 6.சரிதம், 8.சதம், 10.கமலம், 11.மிடி, 12.அனல், 13.மகரம், 15.கொல், 16.அன்னம், 17.வீடு, 18.வரம்பு, 20.கடன்காரன்

### போட்டி இல. 611 இல் பரிசு பெற்றோர்

| | |
|---|---|
| 1ஆம் பரிசு | ச. நவரத்தினம், இல:-7 1/19. காலி வீதி. வெள்ளவத்தை. |
| 2ஆம் பரிசு | திருமதி ம. வளர்மதி, 3ஆம் வட்டாரம், முள்ளியவளை. |
| 3ஆம் பரிசு | அ.ஜெயசேகரா, காளி கோவிலடி.துர்க்காபுரம் தெல்லிப்பழை. |

### பாராட்டுப் பெறுவோர்

(1) திருமதி. எஸ்.பாக்கியநாதன், பிரதம நூலகர், நூலகம் கொழும்புத் தமிழ்ச் சங்கம், இல;-157 ஆவது ஒழுங்கை, கொழும்பு -06.

(2) எஸ். வசந்தப் பிரியன் இல;-36 4/4, கொட்டாஞ்சேனை வீதி, கொழும்பு-13.

(3) செல்வி சி. சம்பூரணி, அரசடி ஒழுங்கை, வட்டு தெற்கு, வட்டுக்கோட்டை.

(4) லக்சியா தயாளன், 'வாணி அகம்', சினைப்பா வீதி, நவாலி, மானிப்பாய்.

(5) வே. சரஸ்வதி , அம்பன், குடத்தனை.

(6) க. தில்லையம்பலம், கதிர்காம கோவிலடி, வதிரி, கரவெட்டி.

(7) சிவகுமாரன் சம்பூரணி, முகாமைத்துவ பீடம்-2 ஆம் வருடம், யாழ். பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம்.

(8) திருமதி செல்வராசா கலைமகள், இல; 6--8/AC, வியாசர் வீதி, தோணிக்கல், வவுனியா.

(9) முகுந்தா- ஜெயசோதி , இல; 93 2/5, பீட்டர்சன் வீதி, கொழும்பு-06.

(10) செல்வி ஸ்ரீரங்கன் வைஸ்ணவி, வல்லை வீதி,தொட்டிலடி, சங்கானை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அர்த்தமுள்ள முத்தங்கள்

காதலர்கள் தங்கள் அதிசுவடிய அன்பினை வெளிப்படுத்த தேர்ந்தெடுக்கும் ஒரு வழிதான் முத்தம். நம் அன்புக்குரியவர் நம்மீது கோபத்துடன் இருந்தால் கூட, ஒரு முத்தத்தின் மூலம் கோபத்தைத் தணிக்கலாம். மேலும் காதலர்கள்முத்தம் கொடுப்பதில் பல வகைகள் உள்ளன. அவை ஒவ்வொன்றும் ஒவ்வொரு அர்த்தத்தை வெளிப்படுத்தும். காதலின் முதல் மொழி முத்தம் என்றுகூடச் சொல்லலாம். ஏனெனில் இது எண்ணத்தைவெளிப்படுத்தும் சங்கேத பாஷையாக உள்ளது. சில சந்தர்ப்பங்களில் காதலர்கள் தங்களுக்கிடையே சில விடயங்களை வார்த்தைகளூடாக வெளிப்படுத்த முடியாதிருக்கும். அப்படி வெளிப்படுத்தினாலும் கூட அது ஏதோ செயற்கைத்தனமாகவே அமைந்துவிடும். எனவே உள்ளார்ந்த அன்பினை உதட்டில் குவித்து ஈரத்தோடு பதித்து, சொல்ல வந்ததை ஒரே முத்தத்தில் காதலர்கள் சொல்லிவிடுவார்கள். எந்த இடத்தில் முத்தம்கொடுத்தால், என்ன அர்த்தம் என்று நீங்களும் அறிந்து கொள்ளுங்களேன்.

### உதடும் உதடும் சந்தித்தால்...

காதலர்கள் அதிகமாக முத்தமிடும் இடங்களில் முதலிடம் வகிப்பது உதடுதான். ஏனெனில் எப்போதுமே ஒரே தன்மையான அங்கங்களையே எதிர்ப்பாலரிடம் தேடுவது மனித இயல்பு. எனவே முத்தத்தின் வெளிப்படுகை இடமான உதடு, தன் துணையின் உதட்டையே முதலில் தேட ஏங்கும். அதேவேளை காதலன் அல்லது காதலியின் உதட்டு ஸ்பரிசத்துக்காக எதிர்ப்பாலரின் உதடுகளும் காத்துக் கிடக்கும். எல்லாம் கை கூடும் போது உதடும் உதடும் ஒட்டிக் கொள்ளும். இப்படி உதட்டில்முத்தம் கொடுத்தால், "நான் உன்னை உயிரை விட மேலாக நேசிக்கிறேன்" என்றுஅர்த்தம்.

உதடும் உதடும் இணையும் முத்தத்தில் கூட உள்ளகப்பிரிப்புகள் இருக்கவே செய்கின்றன. பட்டும் படாமல் லேசான தொடுகையோடு காதலர்களின் உதடுகள் சந்தித்து திரும்பினால், "கவலைப்படாதே! உனக்காக நான் இருக்கிறேனே" என்ற ஆறுதலைச் சொல்வதாக இருக்கும். இத்தகைய பட்டும் படாத முத்தங்கள் ஏதாவது நெருக்கடியான சூழலில் தங்கள் துணை இருக்கும் போது காதலர்கள் பிரயோகிப்பதுண்டு.

**(இன்னும் அர்த்தங்கள் இருக்கு)**



# காதல் பேசுவோம்

**கா**தலர்கள் செல்போனில் பேசும் போது இன்னொரு விடயத்தை முக்கியமாகக் கவனிக்க வேண்டும். அது உங்கள் காதலி எப்போது உங்களைத் தொலைபேசியில் தொடர்பு கொண்டாலும் பதிலளிக்க நீங்கள் தயர் நிலையில் இருக்கவேண்டும். எனவே அடிக்கடி உங்கள் செல்போனை சுயபரிசோதனை செய்து கொள்வது கட்டாயம்.

'சார்ஜ் இருக்கிறதா?'

'தானாகவே செயலிழந்து போய்விட்டதா?'

'கவரேஜ் ஒழுங்காக உள்ளதா?'

என்று கவனித்துக் கொள்ளுங்கள். ஏனெனில் மேற்சொன்னவற்றில் ஏதாவது ஒரு காரணத்தால் உங்கள் செல்போனை காதலி தொடர்பு கொள்ளமுடியாத போது, வீணான முரண்பாடுகள் தோன்றும்.

"நான் எடுப்பன் எண்டு தெரியும் தானே. போனுக்கு சார்ஜ் போட்டு வைக்க தெரியாதோ? இல்லாட்டி நான் அடிக்கடி எடுத்து டிஸ்டொர்ப் பண்ணுறன் எண்டு வேணுமெண்டே சார்ஜ் போடாமல் வைச்சிருக் கிறியளோ? எல்லா இடத்திலையும் கவரேஜ் இருக்கேக்க உங்களுக்கு மட் டும் அடிக்கடி அது எப்படி இல்லாமல் போகுது?

இப்படி வார்த்தைகளால் துளைத்தெடுத்து, கடைசியில் குறைந்த பட்சம் இருநாள்களுக்காவது இந்தப்போரை காதலிகள் நீட்டிக்க வாய்ப் புண்டு. இப்படி தேவையற்ற சமர்களில் இருந்து தப்பிக்க செல்போனை எப்போதும் இயங்கு நிலையில் வைத்திருப்பது காதலர்களின் கடமை. இந்தக்கடமையில் இருந்து தவறினால் ஏற்படும் விளைவுகளால்- தங்கள் காதலியின் சொல்லம்புகளால்- தாக்குண்ட காதலர்கள் பலர் கதைத்து முடிந்தவுடன் செல்போனை சிதறுதேங்காய் போல சுவரில் அடித்து நொருக்கிய சோகங்கள் நிறையவே உண்டு. இதனால் வாரத்துக்கு ஒருமுறை அவர்கள் புதிய போனை வாங்க வேண்டியிருக்கிறது. உங்கள் நண்பர்களும் இப்படி அடிக்கடி புதிய போனோடு உலா வந்தால், அவரும் 'காதலியால் செல் போனை சிதறுதேங்காய் அடிப்போர் சங்கத்து' உறுப்பினர் என்பதை உணர்ந்து கொள்ளுங் கள்.




**(அடுத்த வாரமும் உரையாடுவோம்)**

# காதலா? காமமா?

**கொற்றவை**



"**கா**தல் என்பதும் பரிணாம வளர்ச்சியின் ஓர் அங்கமே. காதல் உணர்வு (மனவெழுச்சி) மேலெழும் போது உயிர் மறு-உற்பத்திக்கான அடித்தளமரக உடலுறவுக்கான இச்சை தூண்டப்படுகிறது. சந்ததிகள் பெருகுவதை உணர்ந்த ஆதிகால மனிதர்கள் அதை ஓர் உயிரியல் கட்டளையாக உணர்ந்திருக்கின்றனர். அந்த வழித்தோன்றல்கள் காதலிக்கும் ஆற்றலை மரபு வழியில் பெறுகிறார்கள். காலப்போக்கில் காதலிக் கும் எண்ணம் நம்முடைய மரபணுத்திரள் அமைப்பு முறையின் ஒரு பாகமாகிவிடுகிறது. அதன் பிறகு அது எண்ணம், நாட்டம் அல்லது வெகுமதி என்ற அளவில் இல்லாமல் மிகவும் ஆழமாகப் பதிக்கப்பட்டு, வாழ்க்கை யில் நம்முடைய ஒவ்வொரு முயற்சிக்கும் துணைபுரி வதாக அமைகிறது. மனிதர்கள் மனவெழுச்சியுடன் துணிகர முயற்சிகளை மேற்கொள்ளும் முதலாளி களாக ஆகிறார்கள்" என்கிறார் அக்கர்மென் என்ற மானுடவியலாளர். "தனக்கு பிடித்தமான ஒருவரை காணும் போது மனிதர்களின் இதயத்துடிப்பு அதிகரிக்கிறது .

**ஒரு சர்ச்சைத் தொடர்**

அதனால் தான் இதயத்தை காதலின் இடமாக கருதத்தோன்றுகிறது" என்றும் அவர் கூறுகிறார்.

காமம் என்பது இழிவான ஒன்றாக பார்க்கப்படும் அதே வேளையில்தான் காதல் இதயத்தில் இருப்ப தாகக் கருதப்படுகிறது. வேடிக்கை என்னவென்றால் இரண்டும் ஒரே உடலின் மூலமே உணரப்படுகின்றன.

**(இன்னும் பேசுவோம்)**

# ஈரடியில் இதயங்கள் பற்றி...! 3

**— சரவணா கார்த்திகேயன்**

இரண்டே வரிகளில் உலகின் அத்தனை விடயங்களையும் அடக்கிய திருக்குறளில் காமத்துப் பாலை யாரும் பெரிதாகக் கண்டுகொள்வதில்லை. ஆனால் எந்தக் காலக் காதலுக்கும் பொருந்தக்கூடிய கருத்துக்களை அது கொண்டுள்ளது. வள்ளுவர் எழுதிய காதல் குறள்களுக்கு நவீன கவிதைவடிவில் பொருள் சொல்லும் ஒரு புதிய முயற்சியே இந்தப் பகுதி.

கொடும்புருவம் கோடா மறைப்பின் நடுங்கஞர்
செய்யல மன்இவள் கண்.
(குறள் 1086)

கண்ணை ஒளிக்கத் தவறிய
புருவக்கோணல் அன்றேல்
மனசு நேராயிருந்திருக்கும்
மப்பு நேராதிருந்திருக்கும்.

கடாஅக் களிற்றின்மேற் கட்படாம் மாதர்
படாஅ முலைமேல் துகில்.
(குறள் 1087)

மதங்கொண்டு வதஞ்செய்யும்
முரட்டுத்திமிரான யானைக்கு
முகமூடி அணிவித்தது போல்
அவள் மார்பில் தாவணி.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# விமானியாகிறார் குக்கூ நாயகி?

பெரும்பாலும் மாற்றுத்திறனாளிகளை மையமாக வைத்து எடுக்கப்பட்ட படங்கள் அனைத்தும் படத்தை பார்த்து விட்டு வெளியே வருபவர்களுக்கு. மாற்றுத்திறனாளிகள் பற்றி ஒரு உயர்ந்த எண்ணத்தோடும் அவர்களின் நிலையை உள்ளத்தில் கனமாக சுமந்து செல்லும் நிலையே இருக்கும். அவர்களை பார்த்தால் நமக்கு மரியாதையும் கூடும்படியாக இருக்கும். அந்தவகையில் வெளிவந்திருக்கும் படம் குக்கூ.

சென்னை சென்ட்ரலில் இருந்து அரக்கோணம் வரை செல்லும் மின்சார ரயிலில் பார்வையற்றவராக சிறு வியா-பாரம் செய்து வருகிறார் தினேஷ். இளையராஜாபோல் பாடும் வல்லமை பெற்றுள்ளதால் ஒரு மேடை இசைக்குழுவிலும் பாடி வருகி றார்.

இந்நிலையில் ஒரு திருமண நிகழ்ச்சியில் தினேஷின் தோழி பார்வையற்ற நாயகி மாளவிகாவை அறிமுகம் செய்து வைக்கிறார். இவர்கள் அறிமுகம் ஆகும் முதல் சந்திப்பே மோதலில் ஆரம்பிக்கிறது. பிறகு இவர்களின் அடுத்த சந்திப்பில் தினேஷ் செய்யும் சேட்டையில் மாளவிகா கோபம் அடைந்து தன்னிடம் இருக்கும் பிரம்பால் அடித்து விடுகி றார். இதில் தினேசுக்கு நெற்றியில் அடிபட்டு விடுகிறது. இதனால் மாளவிகா மீது கடும் கோபம் ஆகிறார் தினேஷ்.

2 நாட்கள் கழித்து மீண்டும் சந்திக்கும்போது, மாளவிகா தினேஷிடம் தனியாக பேச வேண்டும் என்று கூறி அவர் கையைப் பிடித்து அழைத்துச் செல்கிறார். இவருக்கு அடிபட்டதற்கு வருந்தும் மாளவிகா, இவருக்காக பிரார்த்தனையும் செய்கிறார். பிறகு அடிபட்டதை தொட்டு பார்க்கிறார் மாளவிகா. இதனால் மாளவிகா மீது தினேசுக்கு காதல் மலர்கிறது. தன் காதலை வெளிப்படுத்த கிறார். முதலில் தோழியிடம் அதற்கு தோழி, மாளவிகா இருக்கும் ஒரு பார்வையுள் ணம் செய்ய ஆசைப்படுகிற இதனால் மனம் உடைந்து கிடையில் மாளவிகாவிற்கு இளைஞன், வேறொரு பெண் விகாவிடம் கூறுகிறார். இத உடைந்து போகிறார்.

பிறகு தோழி மூலம் தன்னை மாளவிகாவிற்கு தெரியவருகிற காதலிக்க ஆரம்பிக்கிறார் க

அண்மையில் வெளி வந்த 'குக்கூ' திரைப்படம் இரண்டு பார்வை இல்லாதவர்களின் காதலை சொல்லும் படம்.

இந்த படத்தில் கேரளத்தைச் சேர்ந்த புதுமுகம் மாளவிகா பார்வையற்ற பெண்ணாக அட்டகத்தி தினேசுடன் இணைந்து நடித்துள்ளார். இவரது நடிப்பு வெகுவாக பாராட்டப்பட்டு வருகிறது.

இந்தநிலையில் மாளவிகா இனி தான் சினிமாவில் நடிக்கும் உத்தேசம் இல்லை என்று தெரிவித்துள்ளார்.

இதுகுறித்து அவர் கூறுகையில் நான் விமானியாகவேண்டும் என்று தான் விரும்புகிறேன். சினிமாவில் நடிக்க வேண்டும் என்றுமே நான் நினைத்தது கிடையாது. ஒரு பொழுதுபோக்குக்காக ராஜு முருகனின் படத்தில் சவாலான கதாபத்திரத்தில் நடித்தேன். இனி சினிமாவில் நடிக்க விரும்பவில்லை. ஜேர்மனியில் பயணிகள் விமான பயிற்சி கல்விக்கு விண்ணப்பித்துள்ளேன். கிடைத்தவுடன் சென்றுவிடுவேன். இடையில் கிடைக்கும் இடைவெளியில் குக்கூ மாதிரி சவாலான கதாபாத்திரம் கிடைத்தால் நடிப்பது பற்றி யோசிப்பேன் என்று தெரிவித்துள்ளார் மாள விகா.

## கதாநாயகனாக சந்தானம்



நகைச்சுவையால் ரசிகர்களை தன் பக்கம் ஈர்த்து திடீரெனஅசுர வளர்ச்சி கண்டவர் சந்தானம்.

தொலைக்காட்சித் தொகுப்பாளராக இருந்து நகைச்சுவை நடிகரான சந்தானம் ஒரு நாளைக்கு 10 லட்சத்துக்கு மேல் சம்பளம் வாங்கும் நடிகராகவுள்ளார். இப்போது சந்தானம் வல்லவனுக்கு புல்லும் ஆயுதம் என்ற படத்தில் கதாநாயகனாக நடிக்கிறார். தெலுங்கில் எஸ்.எஸ்.ராஜமவுலி இயக்கிய மரியாதை ராமண்ணா படத்தின் மீள் உருவாக்கம் இது. கதாநாயகனாக நடிப்பது ஏன் என்பது பற்றி சந்தானம் கூறுகையில்.

கதாநாயகனாக நடிக்கவேண்டும் 'பஞ்ச் டயலாக்' பேசி பத்து பேரை வளைக்கவேண்டும் என்றெல்லாம் ஆசை கிடையாது. ஆனால் இந்தப் படத்தில் ஒரு நகைச்சுவை நடிகன் தான் கதாநாயகனாக நடிக்க முடியும். அப்பாவியாகவும் இருக்கணும் கதாநாயகனாக நடித்து கைதட்டலையும் அள்ளணும். இதை ஒரு பெரிய கதாநாயகன் செய்ய முடியாது. செய்தா ரசிக்கமாட்டாங்க. அதுதான் நானே நடிக்க தீர்மானிச்சேன். நிறைய சுவாரஸ்யமான விடயங்களை சேர்த்திருக்கின்றோம். படம்வரும்போது அது தெரியும் என்கிறார் சந்தானம்.

## பார்த்தீபன் படத்தில் விஜய், தனுஷ், சூர்யா

பார்த்தீபனின் இயக்கத்தில் உருவாகிறது 'கதை திரைக்கதை வசனம் இயக்கம்'. முதல் முறையாக இந்தப்படத்தில் நடிக்காமல் கதை திரைக்கதை வசனம் எழுதி இயக்குகிறார் பார்த்தீபன்.

கதையே இல்லாமல் ஒரு படம் என்று படத்தின் மீதுள்ள எதிர்பார்ப்பை அதிகப்படுத்தியிருக்கிறார். மேலும் இப்படத்தில் ஆர்யா, அமலாபால், நஸ்ரியா, விஜய் சேதுபதி ஆகியோர் கௌரவ வேடங்களில் நடிக்கின்றனர் என்ற தகவல் ஏற்கனவே வெளியாகியிருந்தது. தற்போது, இவர்களுடன் சேர்த்து விஜய், தனுஷ், சூர்யா ஆகியோரும் இதில் நடிக்கப்போவதாக செய்திகள் வெளியாகியுள்ளன.

## விஷால் படத்தில் சு...

விஷால் தயாரித்து நடிக்கும் படம் 'நான் சிகப்பு மனிதன்". இப்படத்தை இயக்கியிருக்கிறார் திரு. ஜி.வி.பிரகாஷ்குமார் இசையமைத்திருக்கிறார். ரிச்சர்ட்.எம்.நாதன் ஒளிப்பதிவு செய்திருக்கிறார். படத்தின் இசையும் முன்னோட்டமும் வெளியாகி நல்ல வரவேற்பைப் பெற்றிருக்கிறது. படம் ஏப்ரல் 11 இல் வெளியாகின்றது.

ஏப்ரல் 14இல் ஹறி இயக்கத்தில் விஷால் தயாரித்து நடிக்கப்போகும் படத்தின் படப்பிடிப்பும் தொடங்கவிருக்கிறார்.

## எனது வாழ்வில் முக்கியமான படம்

ரஜினி நடித்துள்ள கோச்சடையான் அனிமேஷன் படத்தில் நாயகியாக நடித்திருக்கிறார் ஹிந்தி முன்னணி நடிகைகளில் ஒருவரான தீபிகா படுகோன்.

இந்தியாவில் முதன்முறையாக மோஷன் கேப்சர் தொழில்நுட்பத்தில் கோச்சடையான் தயாராகியிருப்பதால், இந்த படத்தில் எனக்கு நடிக்க சந்தர்ப்பம் கிடைத்ததை பெருமையாக குறிப்பிட்டு வருகிறார் தீபிகா படுகோன்.

இதுகுறித்து அவர் அளித்துள்ள பேட்டியில்,



கோச்சடையான் படத்துக்காக என்னை நடிக்ககேட்டு வந்தபோது, நான் என்ன கதை, எனது பாத்திரம் என்ன என்று எதைப் பற்றியும கேட்கவில்லை. ரஜினி என்றதும் மறுபேச்சின்றி நடிக்க சம்மதம் சொல்லிவிட்டேன். காரணம், ரஜினிக்கு ஜோடியாக நடிப்பதை மிகப்பெரிய கௌரவமாக நினைத்தேன். மேலும், இந்தப் படம் மூலம் ரஜினியை நெருங்கியதால் அவரது சினிமா அனுபவங்கள் மற்றும் சினிமா பற்றிய நிறைய அறிவுரைகள் எனக்குக் கிடைத்தன. ஆக, கோச்சடையான் எனது சினிமா வாழ்வில் முக்கியமான படமாகி விட்டது என்கிறார் தீபிகா.



தமிழக சட்டசபைத் தேர்தலோடு காணாமல்போன வைகைப்புயல் வடிவேலு இந்திய நாடாளுமன்றத் தேர்தலோடு தனது மீள் வருகையை 'ஜகஜால புஜபல தெனாலிராமன்' படத்தின் மூலம் நிகழ்த்தவுள்ளார். கடந்த வாரம் படத்தின் முன்னோட்டக் காட்சித் தொகுப்பு வெளியாகி பெரும் வரவேற்பைப் பெற்றிருக்கிறது. ஏறக்குறைய வடிவேலுவுக்கு திருப்புமுனையாக அமைந்த இம்சை அரசன் 23 ஆம் புலிகேசி படத்தின் 2 ஆம் பாகத்தை ஒத்ததாகவே தெனாலிராமனும் அமைந்திருக்கும் என்பதை இந்த முன்னோட்டக் காட்சி வெளிப்படுத்தி இருக்கிறது. எனவே இந்தப் படம் பெரும் வெற்றி பெறும் என வடிவேலு ரசிகர்கள் நம்புகிறார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

மலர்கிறது.
ளிப்படுத்த தினேஷ் முயற்சி செய்
தாழியிடம் சொல்லுகிறார் தினேஷ்.
ாளவிகா படிப்பதற்கு உதவி யாக
ர்வையுள்ள இளைஞனை திரும
செப்படுகிறாள் என்று கூறுகிறார்.
டைந்து போகிறார் தினேஷ். இதற்
விகாவிற்கு உதவியாக இருக்கும்
ாரு பெண்ணை காதலிப்பதாக மாள
றார். இதனால் மாளவிகா மனம்
ர்.
ம் தன்னை தினேஷ் காதலிப்பதாக
ரியவருகிறது. அதன்பிறகு இருவரும்
ிக்கிறார்கள். வாசனைகளாலும்,

ஓசைகளாலும் இவர்களின் காதல் மலர்ந்து வருகிறது. இதற்கிடையில் மாளவிகாவின் அண்ணன், தன் நண்பருக்கு மாளவிகாவை வலுக்கட்டாயமாக திருமணம் செய்ய முடிவு செய்கிறார்.

இறுதியில் தினேஷ், மாளவிகா காதல் ஜெயித்ததா? மாளவிகாவிற்கு அண்ணன், பார்த்த மாப்பிளையுடன் திருமணம் நடந்ததா? என்பதே மீதிக்கதை.

தினேஷ், மாளவிகா இருவருமே அற்புதமான நடிப்பை வெளிப்படுத்தியிருக்கிறார்கள். ஒரு சில இடங்களில் தினேஷ் நடிக்கும் காட்சிகள் அளவுக்கு மீறியதாகவும் இருக்கிறது. மாளவிகா, தனது இயல்பான நடிப்பால் ஒருபடி மேலே நிற்கிறார். பார்வையற்றவர்களாக நடித்திருக்கும் மற்ற நடிகர்களும் சிறப்பான நடிப்பை வெளிப்படுத்தியுள்ளனர்.

முதற்பாதியில் கலகலப்பாக செல்வதற்காக பாலா முறையை கையாண்டிருக்கிறார். நீண்ட காட்சிகள், யதார்த்தத்துக்கு பொருந்தாத காட்சிகள் அதிகம் இருப்பதால் அதில் கூடுதல் கவனம் செலுத்தியிருக்கலாம். சந்தோஷ் நாராயணன் இசையில் பாடல்கள் அனைத்தும் இனிமை. படத்தில் இளையராஜாவின் இசையே மேலோங்கி இருக்கிறது. வர்மா ஒளிப்பதிவு படத்திற்கு பலம்.

# குக்கூ

சினி விமர்சனம்



கன்னக்கோல்
நடிகர் : பரணி, நடிகை : காருண்யா
இயக்குநர் : வி.எ.குமரேசன்

## ல் சுருதி

இந்தப் படத்துக்கு ஸ்ருதிஹாசன் கதாநாயகியாக நடிக்கிறார். படத்திற்கு இசையமைக்கிறார் யுவன் ஷங்கர் ராஜா. அடுத்தடுத்து பல படங்களில் பாடிவரும் ஸ்ருதிஹாசன் குரலுக்கேற்ப ஒரு இசையைத் தயார்செய்து வைத்திருக்கிறாராம். இதில் விஷாலும் ஒரு பாடல் பாடவிருப்பதாக கூறப்படுகிறது.

ஏற்கனவே 'மத கஜ ராஜா' படத்தில் மை டியர் ...வரு எனும் பாடலை விஷால் பாடியிருப்பது குறிப்பிடத்தக்கது.

## வதங்கும் சமந்தா

ஏ.ஆர். முருகதாஸ் இயக்கத்தில் விஜய் நடித்து வரும் படத்தின் படப்பிடிப்பு ஆந்திர மாநிலம் ஹைதராபாத்தில் நடைபெற்று வருகிறது.

படத்தின் நாயகி சமந்தா தோல் பிரச்சினை காரணமாக வெளிநாட்டுக்கு சென்றுவிட்டார் என்று செய்திகள் வெளியாகின. இதனை மறுத்த சமந்தா, தான் ஆந்திரா வெயிலில் வாடி வதங்கி படப்பிடிப்பில் கலந்து கொண்டு வருவதாக தெரிவித்துள்ளார்.

சமந்தா விஜய் படம் தவிர சூர்யாவுடன் அஞ்சான் படத்திலும் நடித்து வருகிறார் என்பது குறிப்பிடத்தக்கது. விஜய் இரட்டை வேடங்களில் நடிக்கும் இந்த படத்திற்கு கத்தி என்று பெயர் வைக்கப்பட்டுள்ளது. படம் வரும் தீபாவளிக்கு திரைக்கு வர இருக்கின்றது.



## மீண்டும் ஜெயம்ரவி + ஹன்சிகா

நீண்ட இடைவெளிக்கு பிறகு தற்போது ரோமியோ ஜூலியட் என்ற பெயரில் தயாராகும் படத்தில் மீண்டும் ஜோடியாக நடிக்கிறார்கள் ஜெயம் ரவியும் ஹன்சிகாவும்.

இந்த படத்தை லட்சுமண் இயக்குகிறார். இதுகுறித்து ஹன்சிகா கூறுகை யில்.

"ஜெயம் ரவியுடன் 'ரோமியோ ஜூலியட்' படத்தில் நடிக்க நான் ஒப்பந்தமாகி இருப்பது உண்மைதான். பிரமாதமான கதை. நல்ல பாத்திரம். எனக்கு மிகவும் பிடித்தது. படத்தை பற்றி வேறு விடயம் எதுவும் இப்போது சொல்ல முடியாது" என்றார்.

ஜெயம் ரவியும் ஹன்சிகாவும் ஏற்கனவே "எங்கேயும் காதல்" படத்தில் ஜோடியாக நடித்திருந்தனர்.



டாப்ஸி

## வில்லியாக டாப்ஸி

ஆடுகளம், வந்தான் வென்றான் போன்ற படங்களில் நடித்துள்ள டாப்ஸிக்கு தமிழில் அதிக அளவில் படங்கள் குவியவில்லை. தெலுங்கில் பட வாய்ப்பு அதிகரித்ததால் அங்கு அவர் கவனம் செலுத்தி வந்தார். இதற்கிடையில் ஐஸ்வர்யா தனுஷ் இயக்கும் வை ராஜா வை படத்தில் நடிக்க வாய்ப்பு வந்தது. வழக்கமான காதல் நாயகியாக இல்லாமல் வில்லித்தனமான வேடமாக இது அமைந்திருக்கிறது.

தற்போது படத்தின் பெரும்பகுதி படப்பிடிப்பு முடிந்திருக்கிறது. கௌவுதம் கார்த்திக் கதாநாயகனாக நடிக்கிறார். அவருக்கு பிரியா ஆனந்த் ஜோடி. வில்லியாக நடிப்பது பற்றி டாப்ஸி கூறுகையில்,

இப்படியொரு வேடத்தை எனக்கு தந்ததற்காக ஐஸ்வர்யாவுக்கு நன்றி என்றார். கதாநாயகி வேடத்திலிருந்து மிக குறுகிய காலத்திலேயே வில்லியாக நடிக்க டாப்ஸி ஒப்புக் கொண்டிருப்பது அவரது தைரியத்தை வெளிப்படுத்தி இருப்பதாக தெரிவிக்கின்றனர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




— மகாலிங்கம் பத்மநாபன்

பெரிய பரந்தன், குஞ்சுப்பரந்தன், செருக்கன் கிராமங்களுக்கும் மீசாலை, சாவகச்சேரி, கச்சாய் போன்ற தென்மராட்சி ஊர்களுக்குமிடையேயான உறவு வரலாற்று ரீதியிலானதாகும். இவர்களின் உறவு பல விதங்களில் பின்னிப் பிணைந்தது.

### கொண்டான் - கொடுப்பான் உறவு

இரு பிரிவினரும் ஒருவருக்கொருவர் திருமணத்துக்காக பெண்களைக் கொடுத்தனர். பெண்களை எடுத்தனர். எவ்வாறு நல்லூர் திருவிழா யாழ்ப்பாணத்தில் பல நூறு திருமணங்களுக்கு காலாயமைந்ததோ, அது போல பங்குனி வேள்வியும் இங்கு பல புதிய திருமணங்களுக்கு வழிவகுத்தது. பொறிக்கடவை அம்மனுக்கு நேர்த்திக்கடன் செய்து பாற்செம்பு எடுக்கவந்த நங்கையர் மூன்று கிராமத்து இளைஞர்களின் கண்களிலும் பட்டு காதல் பொறியை பற்றவைப்பர். அதேபோன்று காவடி எடுக்க வந்த இளைஞர்களின் தோற்றமும் ஆட்டமும் இங்குள்ள கன்னியர்களைக் கவர்ந்து காதலுக்கு வித்திடும்.

### திருமணம்

திருமணம் என்றால் பெண்வீடு, மாப்பிள்ளை வீட்டில் ஒருமாதமளவில் ஒரே அமர்க்களம்தான். நாள் பார்த்து பந்தற்கால் நடுதல், உறவுப்பெண்கள் எல்லாம் கூடி நெல்குற்றல், மா இடித்தல், பலகாரம் சுடல், அலங்கரித்தல் என்று ஊரே தடல்புடல் படும். கிடாரம் கிடாரமாக நெல் அவித்துக் காயவைத்து குற்றி அரிசியாக்கப்படும். கிராமத்தில் ஏனைய வீடுகளில் உலை வைக்க மாட்டார்கள். எல்லோருக்கும் திருமணவீட்டில் தான் சாப்பாடு. தமது ஆடு, மாடு, கோழியை ஒழுங்குபடுத்திவிட்டு திருமணவீட்டுக்கு வந்தால், பின் இரவுக் கடமைகளுக்குத்தான் வீடு திரும்புவர்.

மாப்பிள்ளை, மணப்பெண் ஆகியோரில் ஒருவர் இந்த மூன்று கிராமங்களைச் சேர்ந்தவராகவும் மற்றவர் தென்மராட்சியைச் சேர்ந்தவராகவும் இருந்தால் திருமணவீடு இன்னும்சிறப்பாக இருக்கும்.

மூன்று கிராமங்களிலிருந்தும் பத்துப் பன்னிரண்டு மாட்டு வண்டில்களில் சுட்ட தீவு வரைக்கும் சென்று அங்கிருந்து பத்துப் பன்னிரண்டு வள்ளங்களில் கச்சாய் துறைமுகம் செல்வர். அங்கு இவர்களை ஏற்ற வண்டில்கள் காத்திருக்கும். வண்டில்களுக்கிடையேயும் வள்ளங்களுக்கிடையேயும் ஓட்டப் போட்டிகள் நடைபெறும். மூன்று நாள்கள் திருமணக் கொண்டாட்டத்தின் பின் திரும்ப வரும் பயணமும் அவ்வாறே நடைபெறும். பலகாரப் பெட்டிகள் முடித்து, பழைய சோறு குழைத்த உருண்டைகள் சாப்பிட்டு, பாத்திரங்கள் கழுவி முடிக்கும் வரை சிறுவர்கள் தமது வீட்டை நினைத்துப் பார்க்கமாட்டார்கள்.

(நிலம் விரியும்)

















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## வலதுகாலை எடுத்துவை

புதிதாகத் திருமணம் ஆகி வீட்டுக்கு வருகிற மணமகளை, ''வலதுகாலை எடுத்து வைத்து வா'' என்று கூறுவதற்கு என்ன காரணம்?

நாம் வாழுகிற இந்தப்பூமி வலதுபுறமாகவே சுற்றுகிறது. இதனோடுசேர்ந்து மற்றகிரகங்களும் வலதுபுறமாகவே நகர்கின்றன.

அதைபோலவே வீட்டுக்கு வரும் மணமகளும் உலகம் போகிறபாதையில் சேர்ந்து இணைந்து போகவேண்டும் என்பதை நினைவுபடுத்திக் காட்டுவதற்காகவே, வலதுகாலை எடுத்துவைத்து வா என்று முன்னோர்கள் கூறிவைத்தனர்.



# பாதிக் கிணற்றில் பெண்கள்

ஆரோக்கியமான சமூக உருவாக்கத்தில் பெண்களின் பங்களிப்பும் ஈடுபாடும் முதன்மையான இடத்தைப் பெறுவது இயல்பு. உலகில் எல்லாத் துறைகளிலும் ஆண்களுக்கு நிகராகப் பெண்கள் பங்களித்தே வருகிறார்கள். ஆனால், அனைத்து நிலைகளிலும் பெண்களின் பிரதிநிதித்துவம் பரவலாக இல்லை என்பதுதான் நிதர்சனம்.

ஆயினும் உயர்பதவிகளை அடையும் பெண்களின் எண்ணிக்கை குறைவாகவே உள்ளது. சமீபத்தில் வெளியான 'கிராண்ட் தார்ண்டன்' என்னும் சர்வதேச ஆய்வு நிறுவனத்தின் வர்த்தக அறிக்கை இதைச் சுட்டிக்காட்டியுள்ளது. உலக அளவில் ஆண்டுதோறும் 21 சதவிகிதம் பட்டதாரிப் பெண்கள், வேலை பெறுகிறார்கள்.

வேலை என்று பார்க்கும்போது தொடக்க நிலைப் பதவிகளில் பெண்களுக்குப் போதுமான வாய்ப்புகள் வழங்கப்படுகின்றன. பணிகளில் திறமையை வெளிப்படுத்தத் தேவையான பயிற்சிகளும் அவர்களுக்கு அளிக்கப்படுகின்றன. ஆனால், உயர் பதவிகளுக்குச் செல்லச் செல்லப் பெண்களின் பங்களிப்பு குறைவாக இருக்கிறது. இலங்கையில் பணிபுரியும் பெண்களில் 60 முதல் 70 சதவிகிதமான பெண்கள், தங்கள் பணியைப் அரைவாசியிலேயே துறந்துவிடுகிறார்கள் என ஆய்வுகள் தெரிவிக்கின்றன. தனிப்பட்ட விருப்பத்தாலோ குடும்பச் சூழலாலோ பெண்கள் இந்த முடிவை எடுக்கிறார்கள்.

பெண்களுக்கு அதிகாரம் வழங்குவதன் மூலமே சமூகம் பெருமளவில் மேம்படும்.

நிறுவனங்களின் மனிதவள ஆற்றலில் பயிற்சிபெற்ற பெண்கள் முக்கிய இடம்வகிக்கிறார்கள். எனவே, பெண்கள் பணியைத் துறப்பதைத் தடுத்து நிறுத்தும் நடவடிக்கைகளில் நிறுவனங்கள் கவனம் செலுத்த வேண்டியது அவசியம். கொள்கை முடிவெடுக்கும் பதவி வரையிலும் ஆண்கள் அளவுக்குப் பெண்களும் பங்களிக்க வாய்ப்புகள் உருவாக்கப்பட வேண்டும். பணியிடங்களில் பாலினச் சமத்துவம் நிலைநிறுத்தப்படும்போதுதான் சமூகத்திலும் அதன் தாக்கம் பரவும். ஆகவே, பெண்களைத் தொடர்ந்து பணிகளில் தக்கவைக்கும் ஆக்கபூர்வமான நடவடிக்கைகளில் நிறுவனங்கள் தீவிரக் கவனம் செலுத்த வேண்டிய தருணம் இது.




## சமையலறைச் சமாளிப்புகள்

♦ இட்லி மாவில் உழுந்து போதாமல், மா இறுக்கமாக இருந்தால் பச்சை அப்பளங்களைத் தண்ணீரில் நனைத்து மிக்ஸியில் போட்டு ஒரு நிமிடம் ஓடவிட்டு மாவில் கலந்து விடுங்கள். இட்லி மிருதுவாகவும் மென்மையாகவும் இருக்கும்.

♦ சமைக்கும்போது உருளைக் கிழங்குகளை மிக அதிகமாக வேக விட்டு விடுவது உண்டு. இந்த



மாதிரி சமயங்களில் உருளைக் கிழங்குகள் மாவாக விடாமல் தடுக்க, பால் மாவைக் கொஞ்சம் கிழங்குகள்மேல் தூவி விடுங்கள் - சிறிது நேரத்தில் கிழங்குகள் இறுகி விடும்.

♦ சாம்பாரில் உப்பு கூடினால் ஒரு முள்ளங்கியை தோல் சீவி நறுக்கி சாம்பாரில் போட்டு 5 நிமிடம் கொதிக்க விடுங்கள். அதிகமாக உள்ள உப்பின் சுவை குறைந்து விடும்.

♦ தோசை சுடும்போது அது ரொட்டி போல் வறண்டு வந்தால், சோறு வடித்த கஞ்சியைச் சிறிதளவு தோசை மாவில் கலந்து தோசையைச் சுட்டுப் பாருங்கள். தோசை பூப்போல் மிருதுவாக் இருக்கும்

## கர்வம்.....!!!



இரண்டு அண்ணன்களோடு பிறந்த என் தோழியை நான் தற்செயலாக கடைத்தெருவில் கண்டேன். இருவரும் அளவளாவியதில் அவளுக்கு இரண்டு ஆண்குழந்தையும் எனக்கு இரண்டு பெண்குழந்தையும் இருப்பதையும் பகிர்ந்துகொண்டோம். உடனே அவள்,

''என்னது இரண்டுமே பொம்பிளப்பிள்ளைகளா? பிற்காலத்தில நீ சரியா கஷ்டப்படப்போறாய்'' என ஏளனமாகக் கூறினாள்.

எனக்கு பதில் சொல்லத் தெரியவில்லை..

முடிந்தவரை எல்லாம் பேசிக்கொண்டோம்.

இறுதியாக அவள் அம்மாவை பற்றி விசாரித்தேன்.

''அம்மா என்னோடுதான் இருக்கிறா. அண்ணைமார் அவாவ வைச்சுப் பாக்கமாட்டம் எண்டு சொல்லிட்டாங்கள். என்னபண்றது? எங்கட அம்மாபட்ட கஷ்டம் பொம்பிளயாப் பிறந்த எனக்குத்தானே தெரியும். அதுதான் நானே அவாவ வைச்சுப் பராமரிக்கிறன்'' என்று கூறிவிட்டு கிளம்பினாள்.

என்னமோ தெரியவில்லை அதன் பிறகு என் பெண்குழந்தைகளை நினைத்து அதிகபட்சகர்வத்துடன் நடக்கத்தோன்றியது எனக்கு.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தவறவிட்ட வெற்றி

புருஜோத்தமன் தங்கமயில்



மிக எரிச்சலூட்டும் வாக்களிப்பு வீதத்தினை (49%) கொழும்பு மாவட்டம் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற மேல் மாகாண சபைத் தேர்தலில் பிரதி பலித்தது. மிகவும் மோசமான வாக்களிப்பு வீதம் இது. தேர்தல்களின் மீது நம்பிக்கை இல்லை என்று சாட்டுக்களைச் சொல்லிக் கொண்டு தமது பொறுப்பினை மக்கள் தட்டிக்கழிக்க முடியாது. அப்படியான கூற்றுக்கள் சோம்போறித்தனத்தின், பொறுப்பற்ற தனத்தின் உச்சம். அது, ஜனநாயக அடிப்படைகளுக்கு விரோதமானதும் கூட.

எரிச்சலூட்டிய விடயத்தில் முக்கியமானது; கொழும்பு வாழ் தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதமும் ஒப்பீட்டளவில் மிகவும் குறைவாகவே இருந்திருக்கிறது. என்ன கூறினாலும், இன்னும் 2 தமிழ் உறுப்பினர்களை இலகுவாகத் தேர்தெடுங்கும் சந்தர்ப்பத்தை தவற விட்டுள்ளனர். இப்போது, தேர்தல் முடிவுகளைப் பார்த்து கொட்டாவி விட்டுப் பலனில்லை. எதிர்காலத்திலாவது பொறுப்போடு வாக்களிக்கப் பழகுங்கள்.


மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணி தனித்துப் போட்டியிட்ட வகையில், தமிழ் மக்களின் வாக்களிப்பு வீதம் இன்னும் கொஞ்சம் அதிகமாக இருந்திருந்தால் கூட 3 ஆசனங்களைப் பெற்றுக் கொண்டிருக்க முடியும். இன்று, 2 ஆசனங்களோடு திருப்திப்பட்டுக் கொள்ள வேண்டியிருக்கிறது.

**அரசியல்வாதிகளையும், கட்சிகளையும் குற்றம் குறை சொல்வது மட்டுமே உங்களது (மக்களின்) உரிமையல்ல. முதலில் உங்களது கடமைகளையும் நிறைவேற்றப் பழகுங்கள். அதாவது, உங்களது உரிமைகளுக்காக மற்றவர்கள் போராட வேண்டும் என்ற மோசமான மனநிலையிலிருந்து மாறித் தொலையுங்கள். அதுதான், எம்மை ஓரளவுக்காவது நிலை நிறுத்த உதவும்.**

அரசியல்வாதிகளையும், கட்சிகளையும் குற்றம் குறை சொல்வது மட்டுமே உங்களது (மக்களின்) உரிமையல்ல. முதலில் உங்களது கடமைகளையும் நிறைவேற்றப் பழகுங்கள். அதாவது, உங்களது உரிமைகளுக்காக மற்றவர்கள் போராட வேண்டும் என்ற மோசமான மனநிலையிலிருந்து மாறித் தொலையுங்கள். அதுதான், எம்மை ஓரளவுக்காவது நிலை நிறுத்த உதவும்.

இறுதியாக, மனோ கணேசன் தலைமையிலான ஜனநாயக மக்கள் முன்னணிக்கு வாழ்த்துகள். எதிர்காலத்திலும் நீங்கள் தனித்து தேர்தல்களை எதிர்கொள்ள வேண்டும். அப்போதுதான், கொழும்பு வாழ் தமிழ் மக்கள் யானை மீது கொண்டிருக்கிற காரணமற்ற பாசத்தை ஏணியில் ஏற்றுவார்கள். அதற்கான முயற்சிகளை கைவிட்டு விடாதீர்கள். சில தேர்தல்களுக்குப் பின்னராவது கொழும்பு மாவட்டத்திலிருந்து 3 தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் தேர்தல்களின் மூலம் நேரடியாக தேர்ந்தெடுக்கப் படுவதற்கான வாய்ப்புக்களை உருவாக்க உழையுங்கள். வெற்றி அவ்வளவு தூரத்தில் இல்லை!

# நடந்தது, நடந்து கொண்டிருப்பது, நடக்கப் போவது...




எங்கடை 'சேரில்' எனக்கு நல்ல பிடிப்பு. ஏனென்றால், நடந்தது, நடந்து கொண்டிருப்பது, நடக்கப்போவது.... அனைத்தையும் அப்படியே சொல்லு வார். "வாரும் பரமசிவம்! ஒரு பைவ் 'மினிற்ஸ்' இதில் இரும் என்பார்.

அவர் காட்டிய இடத்தில் –அவரின் இருக்கைக்கு எதிரில் – அமர்ந்தால் முதல் நாளிரவு தூக்கம் இன்மையையும், கைகால்கள் உழைவு பற்றியும் விஸ்தார மாக எடுத்துரைப்பார்.

பின்பு அன்று காலையில் நடந்த கதையைச் சொல்லுவார். தெருவில் இறங்கித் தெற்குப் பக்கமாகப் பண்ணைக் கடற்கரை வரை நடந்துசென்று , திரும்பி வந்ததைக் கூறுவார்.

எங்கள் பணிமனையிலிருந்து அது ஒரு கிலோ மீற்றர் தூரம் வரும். சென்று வர இரண்டு கிலோ மீற்றர்கள். இதே போன்று மறுநாள் காலை நடக்கப் போவ தனையும் அன்றே சொல்லி விடுவார். "நாளை காலை ஆறு மணிக்கு எழுந்து உப்பிடியே ரெலிக் கொம்மினிக்கேசன் சந்தி போய், பண்ணைச் சந்தையடி யாலை திரும்பி கே.கே.எஸ் வீதியாலை மனோகராத் தியட்டர் சந்தி போய், அப்படியே மானிப்பாய் வீதியிலை ஏறி, தன்ரை குவாட்டர்ஸு க்குத் திரும்பி வரப் போவதாக" நடக்கப் போவதனையும் கூறிவிடுவார். நானும் , எனக்கென்ன, நேரம் போனாற் சரி என்று ,

"அது நல்லது சேர்..... குறைந்தது அவ்வளவு தூரம் என்றாலும் நடக்க வேண் டும் சேர்" என்று ஒத்து ஊதி – வில்லுப் பாட்டுப் பக்க உதவியாளர் கணக்காக 'ஆமாப் போட்டு' – இனி நாளையிண் டைக்கு நடக்கப் போவதைப் பற்றியும் சொல் லுவாரா என ஆவலுடன் காதைக் கொடுத்துக் கேட்க, "பேசாமலிருக்கின் றீர்.... நல்ல நேரம் போயிட்டுது.முந்தின மாதிரி ஸ்பீட்டா' வேலையும் செய்ய முடியுதில்லை. எல்லா டொக்குயூமென் ட்ஸ் ஸை' யும் உடனை கொண்டு வாரும்"



என்று பணிப்பார்.

பணிப்பாளர் என்றால் பணிக்கத் தானே வேணும். "அந்த எலக்ரிசிற்றி பில்' இண்டைக்குச் 'செற்றில்' பண்ண வேண்டும்" என்று கூறுவார்.

"ஓம் சேர்" என வில்லுப்பாட்டு பக்க உதவி புரிந்து விட்டு ,அந்த பைலை' எடுக்கப் புறப்படுகையில், "எலெக்றிசிற்றி எண்ட உடனை தான் ஞாபகம் வருகுது" என்று புதுக்கதை தொடங்குவார்.

"அப்ப எலக்றிசிற்றி சுப்பிரண்டனாக இருந்தவர் என்ரை மனுசியின்ர ஒண்ட விட்ட தம்பியாரின்ரை, பெண்சாதியின்ரை ஒன்றுவிட்ட சகோத ரன்...." என்று தொடங் குவார்.

"அவனும் நானும் ஒன்றாகப் படிச் சனாங்கள்.." என்று நடந்தவற்றைச் சொல்லத் தொடங்கு வார். கதை இடைநடு விற் போகும் போது தான் அந்தக் கதையை அவர் என் னிடம் பத்தாவதோ, பதினோராவதோ தடவையாகச் சொல் கிறார் என்ற விடயம் எனக்கு "ஸ்றைக்' பண்ணும்.ஓம் சேர்! முந்தி ஒருக்கால் ரெண்டு தரம் இந்தக் கதையை சொன்னனிங்கள்' 'என்பேன்.

ஆனாலும் அவர் சொல்ல வந்ததைக் தொடங்குவார்.

நானும் வில்லுப்பாட்டுக்கு "ஓம் சேர்" சொல்லிக் கொண்டிருக்க "அங்கை ஒரு மணியாகப் போகுது... ஆறுதலாக இருக்கிறீர்....ஓடிப் போய் அந்த டொக்கு மென்ட்ஸ்', எலக்றிசிற்றி பேய்மன்ற் பைல்' எல்லாத்தையும் குயிக்காக'க் கொண்டு வாரும்" என்பார். அதனைத் தொடர்ந்து "ச்ச்ச் ..... சா.......இந்த முதுகு வலி குறைஞ்ச பாடாயில்லை....... நாளைக்கு ஒரு ஐஞ்சு அஞ்சரைக்கு எழும்பி – இவ்வளவு நேரமும் சொன்ன இடம் வரை நடந்து போய் திரும்பி வந்தால் தான் ..சரி" என்பார். அடுத்த நாள் காலமை மனுசன் சொன்னமாதிரி அவ்வளவு தூரம் நடந்து போட்டுத்தான் ,பணிமனைக்கு வருவார். நான் எழுந்து செல்லும் போது "இதுகளைக் கொண்டு விச்சு நேரத்துக்கு வேலைசெய்யிற தென்றால் கஷ்டத்திலும் கஷ்டம்" என்று அவர் மனதுள் சொல்வது , இந்தப் பரமசிவத்துக்குக் கேட்கத் தவறு வதில்லை.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இருளின் கதவைத் திறந்தவன் 47

ஔண்யன்



**அ**ந்தக்குரல் யூலியனுக்கு நன்கு பரிச்சயமான- தன் பண்ணை வீட்டில் யூலியனுக்கு அடைக்கலம் கொடுத்த- வோகன் ஸ்மித்தின் குரல்தான். அவரை அந்த இடத்தில் யூலியன் எதிர்பார்க்க வில்லை. என்றாலும் யோசித்துக் கொண்டிராமல், காரினுள்ளே சரேலென உள்நுழைந்தான். தன்னை ஆசுவாசப் படுத்திக் கொண்டான். கார் சாலையில் வழுக்கிக் கொண்டு விரைந்தது.

"நீங்கள் எப்படி இங்கு?" ஆச்சரியத்தை அடக்கமாட் டாதவனாக யூலியன் கேட்டான்.

வோகன் மெல்லச் சிரித்தார்.

"இதெல்லாம் பெரிய விசயமில்லை. வழமையாகவே இந்த வாகனம் பயணிக்கும் பாதை இதுதான். அதிலும் ஆள்நடமாற்றம் குறைந்த பகுதியில்தான் நீங்கள் இறங்குவீர்கள் என எதிர்பார்த்தேன். அதன்படியே நடந்தும் விட்டது" என்று விளக்கிய வோகன், அடுத்த கேள்வியை யூலியனிடம் திருப்பினார்.

"நீங்கள் எந்த விடு திக்கு செல்லவேண்டும் யூலியன்?"

யூலியன் தான் செல்ல வேண்டிய விடுதியின் பெயரைக் குறிப்பிட, அந்தத் திசை நோக்கி காரைச் செலுத்தினார் வோகன். ஆனாலும் யூலியனுக்கு சின்னதாக ஒரு நெருடல். "என்னதான் பண்ணைவீட் டில் இடம் கொடுத்தாலும் வோகனை தூதரக அதிகாரிகளுடனான சந்திப்புக்கும் இழுத்துக் கொண்டு செல்வது நல்லதல்ல. பின்னர் என்னால் வோகனுக்கும் வீண்சிக்கல் வந்துவிடக்கூடும்" என்று அவன் சிந்தித்தான்.

எனவே வோகனைக் கழற்றிவிடுவது எப்படி என்று யூலியன் யோசிக்கத் தொடங்கினான். நேரடியாக வோகனி டம் சொல்லவும் யூலியனுக்குத்தயக் கம். மறைமுகமாகச் சொன்னாலும் கூட வோகன் யூலியனின் உள்ளக்கிடக் கையை அறிந்துவிடக்கூடும்.

சரி.வருவது வரட்டும். வோகனையும் அழைத்துச் செல்வோம் என்ற முடிவுக்கு யூலியன் வந்திருந்தவேளையில் காரும் விடுதி வாசலைத் தொட்டிருந்தது.

யூலியன் கீழே இறங்கியபோதும் வோகன் இன்னமும் காருக்குள்ளேயே இருந்தார்.

"நீங்களும் உள்ளே வரலாம் வோகன்" என்று யூலியன் சம்பிரதாயத் துக்கு அழைக்க, வோகன் தலையாட்டி அந்த அழைப்பை நிராகரித்தார்.

"எனது கார் இந்த விடுதிவாசலில் நின்றால், சந்தேகம் வந்து புலனாய்வுப் பொலிஸார் விசாரிக்கக்கூடும். அப்படி நடந்தால் இவ்வளவு நேரமும் நாம் பட்ட கஷ்டம் வீணாகிவிடும். நீங்கள் மட்டும் உள்ளே சென்று அவர்களைச் சந்தித்து விட்டு வாருங்கள். நான் என் வியாபார விடயமாக சிலரைச் சந்திக்க வேண்டி யிருக்கிறது. உங்கள் அலுவல் முடிந்ததும் விடுதியில் உள்ள தொலைபேசி மூலம் என்னை அழையுங்கள்" என்று சொல்லிவிட்டு சிட்டாகப் பறந்துவிட்டார் வோகன்.

யூலியன் இவ்வளவு நேரமும் எதைச் சொல்லச் சங்கடப்பட்டானோ அந்த விடயம் தானாகவே நடந்துவிட்டதில் அவனுக்கு திருப்திதான்.

விடுதிக்குள் பழக்கப்பட்டவன் போல, தயக்கத்தை வெளியே காட்டிக் கொள்ளாது விடுவிடென்று உள்ளே போனான். உள்ளிருந்த வர்களில் அநேகர் மதுபானச்சாலையை மொய்த்திருந்தனர். கூடவே குடித்தவர்களின் சுதியை ஏற்றுவதற்காக ஒரு இசைக்குழு உச்சஸ்தாயியில் பாடலொன்றை இசைத்துக் கொண்டிருந்தது. வெளிச்சமும் அவ்வளவாக இல்லை. ஏற்கனவே யூலியனின் நம்பிக்கை குரிய ஒரு பணியாள் அந்தவிடுதியில் இருந்தான். இருளை ஊடறுத்து யூலியனின் விழிகள் அந்தப்பணியாள் எங்கிருக்கிறான் எனத்தேடின. சில நிமிடத்தேடலுக்குப் பிறகு கண்ணில் சிக்கினான் அவன். யூலியன் அவனை நோக்கி சமிக்ஞை செய்ய, அவனும் யூலிய னைக் கண்டு கொண்டான். வாயெல்லாம் பல்லாக யூலியன் அருகே ஓடிவந்தான்.

"நீங்களா? இங்கேயா? நம்பவே முடியவில்லை" என்றவன் , வரவேற்பு பிரிவுக்கு சென்று ஒரு திறப்பை எடுத்து வந்தான்.

"வாருங்கள் போவோம்" என்று மெல்லிய இருள் சூழ்ந்த பகுதியூடாக யூலியனை அழைத்துச் சென்றான். ஒரு சொகுசு அறைக்கதவைத் திறந்து யூலியனை உள்ளே அனுப்பினான்.

"நண்பா! என்னைச் சந்திக்க சிலர் வருவார்கள் என்னைப்போல அவர்களையும் யாரும் அறியா வண்ணம் இங்கு அழைத்து வா" என்று சொல்லிவிட்டு விருந்தினர்களுக்காக காத்திருக்கத்தொடங்கினான் யூலியன்.

பணியாள் போய்விட்டான். தனியாக இருக்க யூலியனுக்கு ஏதோபோல இருந்தது. ஒரு மடிக்கணினியையாவது கொண்டுவந்திருந் தால் ஏதேனும் ஒரு நாட்டின் மானத்தை இந்தச் சில நிமிடங்களுக்குள் கப்பலேற்றக் கூடியதாக இருந்திருக்கும்.

முப்பத்தைந்து நிமிடக்காத்திருப்புக்கு பின்னர் சில காலடியோசைகள் கேட்கத்தொடங்கின.தூதரக அதிகாரிகள் வந்துவிட்டார்கள் என்பதை அறிந்து கொண்ட யூலியன் கதவைத்திறந்தான். வந்தவர்களும் எவர் கண்ணிலும் சிக்காமல் யூலியனின் அறைக்குள் நுழைந்தனர்.

கிட்டத்தட்ட இரண்டரை மணித்தியாலங்களாக நீண்டது உரையாடல். உரையாடலின் போது திடீரென ஒரு அதிகாரி சொன்ன செய்தி யூலியனை அதிர வைத்தது. அப்படி அவனை அதிரச் செய்த தகவல் என்ன?

**(திரைகள் இன்னும் திறக்கும்)**

## பந்தயத்துக்கும் பயிற்சி



ஐரோப்பிய உணவகம் ஒன்றில் அமெரிக்கர் ஒருவர் நுழைந்தார்..

"தொடர்ச்சியாக அடுத்தடுத்துப் பத்து பொட்டலம் பிரியாணி சாப்பிடுபவர்களுக்கு பத்தாயிரம் ரூபாய் பரிசு. போட்டியில் தோற்றால் நீங்கள் எனக்கு பத்தாயிரம் ரூபாய் தரவேண்டும். சவாலுக்குத் தயாரா?" என்று அறிவித்தார்.

யாரும் அசையவில்லை. அங்கிருந்தவர்களில் தமிழன் ஒருவன் மட்டும் எழுந்து அவசரமாக வெளியே போனான். இருபது நிமிடம் கழித்துத் திரும்பி வந்தான்.

"பந்தயத்துக்கு நான் தயார்" என்றான்.

அடுத்தடுத்து பத்து பொட்டலம் பிரியாணியை அவன் சாப்பிட்டு முடித்தான் அதைப் பார்த்து, அமெரிக்கர் வியந்து போனார். கூறியபடி பரிசுத்தொகையைக் கொடுத்துவிட்டு,

"ஆமாம், எதற்காக முதலில் எழுந்து வெளியே போனீர்கள்?" என்று கேட்டார்.

"பந்தயத்தில் என்னால் வெல்ல முடிகிறதா என்று பக்கத்தில் உள்ள வேறொரு உணவகத்துக்கு சென்று பத்து பொட்டலம் பிரியாணி சாப்பிட்டு பார்த்தேன்" என்றான் அவன்.

அதைக் கேட்டதும் மயங்கி விழுந்தார் அமெரிக்கர்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சுதந்திர வேட்கை

அடேல் பாலசிங்கம்

28



இதனால் ஒரு துணிகரமான கெரில்லாப் போராளியாக வும் போர்த் தந்திரோபாயத்தில் விற்பன்னராகவும் மக்களி டையே அவர் புகழீட்டினார். கட்டிறுக்கமான ஒழுக்கக் கட்டுப்பாட்டுடன் கலகலப்பான அவரது சுபாவமும் ஒத்தி சைந்து அவருக்கு ஒரு கவர்ச்சிகரமான ஆளுமை யைக் கொடுத் தது எனலாம்.

ஆனால் கிட்டுவைப் பற்றி எண்ணும் பொழுதெல் லாம் போராளிகள் மீதும், மக்கள் மீதும், தமிழரின் தாயகம் மீதும் உணர்ச்சிபூர்வமாக அவர் கொண்டிருந்த அளவு கடந்த நேசம் தான் நினைவுக்கு வருகின்றது. 1985 இலே எம்மைச் சந்திக்க கிட்டு சென்னைக்கு வந்த போது பாலாவையும் என்னை யும் தம்மோடு கூட்டிக் கொண்டு யாழ்ப்பாணம் திரும்ப அவர் திட்டமிட்டு வந்தார். அங்கே எம்மை பாதுகாப்பாக வைத்திருக்க முடியும் என்பதுடன் தாம் நேசித்த யாழ்ப்பா ணத்தை எனக்கு சுற்றிக் காட்டவும் கருதியிருந்தார்.

## விடுதலைப் போராட்டம் பற்றிய ஒரு பதிவு

இந்தியக் கடற்படையினரின் கரங்களில் சிக்கி 1993 இலே , துயர் தரும் வகையில் அவர் மரணம் அடைந்தார். அதை யடுத்து அவருடைய சொந்த ஊரான வல்வெட்டித் துறையில் பிரமாண்டமான அளவில் துயரஞ்சலி ஒன்று நடை பெற்றது. ஒரு இலட்சத்திற்கும் மேலான மக்கள் அந்த வைபவத்தில் திரண்டிருந்தார்கள். வெறுமே அஞ்சலி செலுத்த அல்ல. அந்த மண்ணின் மைந்தன் மீது இருந்த ஆழமான அன்பை யும் மதிப்பையும் வெளிக்காட்டவே பெரும் திரளாக மக்கள் அங்கு அணி திரண்டனர். இன்னுமொரு சரித்திர நாயகனாக திகழ்ந் தவர் பொன்னம்மான். பிரபாகரனின் நம்பிக் கைக்குரிய மூத்த தலைவர்களில் ஒருவர். கிட்டுவோடு 1981 இலே மதுரை யில் இவர் தங்கியிருந்தார். அமைதியான போக்குடையவர்; போராளிகளால் பெரிதும் மதிக்கப்பட்டவர். இந்தியா விடம் இருந்து 1983 இலே இராணுவப் பயிற்சி பெற்ற முதற் தொகுதிப் போராளிகளில் இவரும் ஒருவர். தமிழ் நாட்டில் புலி களின் இராணுவப் பயிற்சி முகாம்களை நிறுவிச் செயற்படுத்தும் பொறுப்பு பொன்னம்மானிடமே ஒப்படைக்கப்பட்டது. யாழ்ப்பாணத்தில் தற்செயலாக நிகழ்ந்த வெடிகுண்டு விபத் தில் சிக்கி இவர் வீரச்சாவைத் தழுவிக் கொண்டார்.

### இறுதி முடிவுகள்

வரலாற்று நாயகனான பிரபாகரஷ்-யும் விடுத லைப் புலிப் போராளிகளையும் நேர் நேராக சந்தித்து அவர் களு டன் கூடி வாழக்கிடைத்த அரிய பெருமையுடன் இலண் டன் திரும்பினோம். இலண்டனில் இருக்கும் போது சென்னை க்கோ யாழ்ப்பாணத்துக்கோ திரும்பிச் செல்லும் அந்த நாளுக் காகக் காத்து இருந்தோம். இந்தியப் பயணத் தின் பின் அரசியல் ரீதியில் முழுமையாக எம்மை அர்ப்பணித் தது போலவே, உள ரீதியிலும் எம்மை அர்ப்பணித்திருந் தோம். போராட்ட களத்தி லிருந்து ஆயிரம் ஆயிரம் மைல் களுக்கு அப்பால் நாற் காலி யில் உட்கார்ந்த படி கற்பனா வாத அரசியல் பற்றிப் பேசுவதை விட்டுவிட்டு களத்துக்கு நேரே சென்று பங்கெடுக்க விரும் பி னோம். இயக்கத்தோடு தொடர்ந்தும் தொடர்பைப் பேணினோம்.

(பதிவு தொடரும்)




02.04.2014 -08.04.2014

**மேஷம்**

**அச்சுவினி, பரணி, கார்த்திகை 1ஆம் பாதம்**

**தன் திறன் உணர்ந்து செயல்பட்டு, நன்மை பெறுகிற மேஷ ராசிக்காரர்களே!**

வெகுநாள் திட்டமிட்ட செயலை நிறைவேற்ற தாராள பணவசதி கிடைக்கும். பிறர் பொருளை பாதுகாக்கும் பொறுப்பு ஏற்க வேண்டாம். இளைய சகோதரரின் கஷ்ட சூழ்நிலை விலக, தேவையான உதவி புரிவீர்கள். வாகன பயன்பாடு சராசரி அளவில் இருக்கும். புத்திரரின் உடல் நலத்திற்கு, சிறு அளவில் மருத்துவ சிகிச்சை தேவைப்படலாம். இல்லறத்துணை ஒற்றுமை குணத்துடன் நடந்து கொள்வார். பணியாளர் நிர்வாகத்தின் நடைமுறை பொறுப்புணர்வுடன் பின்பற்ற வேண்டும். மாணவர்கள் முயற்சியுடன் படித்து, திருப்திகர அளவில் தேர்ச்சி அடைவார்கள்.

**ரிஷபம்**

**கார்த்திகை 2, 3, 4ஆம் பாதங்கள், ரோகிணி, மிருகசீரிடம் 1, 2 ஆம் பாதங்கள்**

**நல்ல எண்ணங்களை, மனதில் நாளும் வளர்த்திடும், ரிஷப ராசிக்காரர்களே!**

உங்களின் இனிய வார்த்தை, நண்பர்களிடம் மதிப்பு, மரியாதை பெற்றுத்தரும். புத்திரரின் நற்செயல் பெருமை தேடித்தரும். குடும்பத்தில் மங்களநிகழ்வு ஏற்படும். உபரி பணவரவில் சேமிப்பை அதிகரிப்பீர்கள். தொழில், வியாபாரத்தில் வியத்தகு அளவிலான வளர்ச்சியும், புகழும் உண்டாகும். பணியாளர் திறம்பட பணிபுரிந்து, நிர்வாகத்திடம் நன்மதிப்பு, சலுகை பெறுவர். குடும்ப பெண்கள், கணவரின் கருத்துக்கு முக்கியத்துவம் தருவதால், ஒற்றுமை சீராகும். மாணவர்கள், நாடகத்திறன் வளர்த்து, படிப்பில் சிறந்த முன்னேற்றம் காண்பர்.

**மிதுனம்**

**மிருகசீரிடம் 3, 4ஆம் பாதங்கள், திருவாதிரை, புனர்பூசம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**மாறுபட்ட கருத்துகளை, துணிவுடன் தவிர்த்திடும் மிதுன ராசிக்காரர்களே!**

மனஉறுதியுடன் பணிகளை துவங்குவீர்கள். சாதகமான சூழ்நிலை உருவாகி, வெற்றியை எளிதாக பெற்றுத்தரும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தருவீர்கள். இல்லறத்துணையின் அன்பு, பாசம் மனதில் மகிழ்ச்சி தரும். தொழில் வியாபாரம் செழித்து வளர, தேவையான அரசு உதவி பெறலாம். உத்தியோகஸ்தர் கடமை உணர்வுடன் பணிகளை நிறைவேற்றுவர். குடும்ப பெண்கள், சேமிப்புப் பணத்தில் வீட்டு உபயோகப் பொருள் வாங்குவர். மாணவர்கள், திட்டமிட்டு படித்து கூடுதல் மதிப்பெண் பெறுவர்.

**கடகம்**

**புனர்பூசம் 4ஆம் பாதம், பூசம், ஆயிலியம்**

**நல்ஒழுக்கமான வாழ்வு, விருப்பமுடன் பின்பற்றும் கடக ராசிக்காரர்களே!**

குடும்பத்தில் ஒற்றுமை, மகிழ்ச்சி நிலவும். இஷ்ட தெய்வ அருள் பலத்துடன், முருகப் பெருமானின் அருளும், சுப நிகழ்வுகளை உருவாக்கும். நண்பருடன் வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் அருமை, பெருமை நிறைந்த செயலால், உங்களின் கூடுதல் அன்பை பெறுவார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சி பெற கிடைக்கிற வாய்ப்பை ஆர்வமுடன் பயன்படுத்துவீர்கள். குடும்ப பெண்கள், அத்தியாவசிய செலவுகளுக்கு மட்டும், முன்னுரிமை தருவர். மாணவர்கள், வெளியிடத்தில் சுற்றுவதை தவிர்த்து, படிப்பில் கவனம் கொள்வர்.

**சிம்மம்**

**மகம், பூரம், உத்திரம் 1ஆம் பாதம்**

**துன்பத்தை கண்டு துவளாத, மனம் கொண்ட சிம்ம ராசிக்காரர்களே!**

சனி, ராகு இருவரும் குருவின் பார்வை பெற்று, உங்கள் செயல் நிறைவேற துணை புரிகின்றனர். பேசுவதில் நிதானம், நற்பெயரை பாதுகாக்கும். வீடு, வாகன பராமரிப்பில் பணச்செலவு அதிகரிக்கும். உடல்நல ஆரோக்கியம் சீராக இருக்கும். இல்லறத்துணையின் மனதில் நம்பிக்கை வளர்ப்பது நல்லது. தொழில், வியாபாரத்தில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பணியாளர் குளறுபடி வராத அளவில் பணிபுரிவது அவசியம். பெண்கள், பணச்செலவுகளை சிக்கன முறையில் மேற்கொள்ள வேண்டும். மாணவர்கள், அதிக விலையுள்ள பொருட்களை கவனமுடன் பயன்படுத்தவும்.

**கன்னி**

**உத்திரம் 2, 3, 4ஆம் பாதங்கள், அத்தம் 1, 2 ஆம் பாதங்கள்**

**தன்னிடம் பழகுபவர்களை, சமமாக கருது கின்ற கன்னி ராசிக்காரர்களே!**

உங்களின் கோப குணம், தற்புகழ்ச்சி, அளவற்ற பேச்சு ஆகியவை தவிர்ப்பதால், வாழ்வில் இருக்கிற நல்ல சூழ்நிலைகளை பாதுகாக்கலாம். புத்திரரின் ஆடம்பரமான நடவடிக்கையை, இதமுடன் சரி செய்வது நல்லது. இல்லறத்துணை குடும்ப சிரமங்களை சரி செய்வதில், குழப்ப மனதுடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் சிறிது லாப விகிதம் குறைப்பதால், திட்டமிட்ட இலக்கை அடையலாம். பணியாளர் பாதுகாப்பு நடைமுறையில், கூடுதல் கவனம் பின்பற்றவும். மாணவர்கள், நண்பரின் குறையை விமர்சிக்க வேண்டாம்.

**துலாம்**

**சித்திரை 3, 4ஆம் பாதங்கள், சுவாதி, விசாகம் 1, 2, 3 ஆம் பாதங்கள்**

**சொல்லை விட, செயலுக்கு முக்கியத்துவம் தரும், துலாம் ராசிக்காரர்களே!**

புத்திரரின் சொல் சிறப்பாக உருவாகி, மனதில் ஞானம் பெருகும். எதிரி, உங்கள் வாழ்வியல் முன்னேற்றம் உணர்ந்து விலகுவர். இல்லறத்துணை இஷ்டதெய்வ வழிபாடு நிறைவேற்றுவார். தொழில், வியாபாரத்தில் வளர்ச்சியும், பணவரவும் கூடும். உத்தியோகஸ்தர், குடும்ப பெண்கள், தாராள பணவசதி கிடைத்து மகிழ்ச்சிகர வாழ்வு நடத்துவர். மாணவர்கள், நண்பரின் உதவியால் படிப்பு சார்ந்த புதிய விஷயம் அறிந்து கொள்வர்.

**விருச்சிகம்**

**விசாகம் 4ஆம் பாதம், அனுஷம், கேட்டை**

**நல்ல காரியங்களுக்கு, பணம் தாராளமாக செலவிடும் விருச்சிக ராசிக்காரர்களே!**

வீடு, வாகனத்தில் அதிக பயன்பாட்டு வசதி பெற, தேவையான மாற்றம் செய்வீர்கள். புத்திரரின் கவனக்குறைவை சரிசெய்வதில், இதமான அணுகுமுறை வேண்டும். எதிரியால் இருந்த தொல்லை விலகும். இல்லறத்துணை அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வார். தொழில், வியாபாரத்தில் உருவாகிற போட்டியை பொறுமையுடன் எதிர்கொள்வீர்கள். பணியாளர்களுக்கு ஓரளவு சலுகை கிடைக்கும். குடும்ப பெண்கள், உறவினர்களிடம் இருந்த மனக்கிலேசம் மறந்து, சொந்தம் பாராட்டுவர். மாணவர்களின் படிப்புக்கான பண வசதி சீராக இருக்கும்.

**தனுசு**

**மூலம், பூராடம், உத்திராடம் 1ஆம் பாதம்**

**அடுத்தவர் நலம் சிறக்க, இயன்ற அளவில் உதவும் தனுசு ராசிக்காரர்களே!**

உடல்நலம் பேணுவதில், அதிக அக்கறை கொள்வீர்கள். புத்திரர், தன் நண்பருடன் ஏற்படுகிற சச்சரவு தீர, சிறந்த ஆலோசனை சொல்வீர்கள். சொத்து தொடர்பான ஆவணம் கவனமுடன் பாதுகாக்க வேண்டும். . பணியாளர்கள், தொழில்நுட்ப அறிவை வளர்த்து திறம்பட செயல்படுவர். பெண்கள், குடும்ப பணவசதிக்கேற்ப ஆடை, அணிகலன் வாங்குவர். மாணவர்கள், நன்றாக படித்து ஆசிரியர், பெற்றோரின் பாராட்டு பெறுவர்.

**மகரம்**

**உத்தராடம் 2, 3, 4ஆம் பாதங்கள், திருவோணம், அவிட்டம் 1, 2 ஆம் பாதங்கள்**

**இறை பக்தியில், கூடுதல் நம்பிக்கையுள்ள மகர ராசிக்காரர்களே!**

நிலுவைப்பணிகளை நினைவுப்படுத்தி, புதுஉத்வேகத்துடன் நிறைவேற்றுவீர்கள். அரசு அதிகாரிகளிடம், அதிக விளக்கம் தந்து பேசவேண்டாம். வீடு, வாகனத்தில் உரிய பாதுகாப்பு முறை பின்பற்றவும். புத்திரர், உங்கள் சொல்கேட்டு அன்பு, பாசத்துடன் நடந்து கொள்வர். இல்லறத்துணை, உங்கள் அருமை, பெருமை மதித்து நடந்து கொள்வார். பணியாளர், பணியிடத்தில் விவாத பேச்சில் ஈடுபடக்கூடாது. பெண்கள், குடும்பத்தின் எதிர்கால நலன் சிறக்க, பணி மேற்கொள்வர். மாணவர்கள், பாதுகாப்பு குறைவான இடங்களில் செல்ல வேண்டாம்.

**கும்பம்**

**அவிட்டம் 3, 4 ஆம் பாதங்கள், சதயம் 1, 2, 3ஆம் பாதங்கள்**

**தன் செயல்களால், நற்பெயர் பெற முயற்சிக்கும் கும்ப ராசிக்காரர்களே!**

இஷ்ட தெய்வ அனுகிரகத்தினால், குடும்பத்தில் மங்கள நிகழ்வு உண்டாகும். உறவினர் வருகை மகிழ்ச்சி தரும். எதிரி வியந்து பார்க்கிற புதிய வாழ்வியல் நடைமுறை உருவாகும். இல்லறத்துணை உங்களின் நல்ல குணம் உணர்ந்து பாராட்டுவார். தொழில், வியாபாரத்தில் அளவான மூலதனம், கடின உழைப்பு என்ற நடைமுறை பின்பற்றுவீர்கள். பணியாளர்களுக்கு தாமதமான சலுகை, எளிய முயற்சியால் கிடைக்கும். பெண்கள், கணவருக்கு உறுதுணையாக நடந்து கொள்வர். மாணவர்கள், நண்பர்களின் உதவியால், படிப்பில் முன்னேற்றம் காண்பர்.

**மீனம்**

**பூரட்டாதி 4ஆம் பாதம், உத்திரட்டாதி, ரேவதி**

**நண்பர்களிடம் நல்அன்புடன் பழகுகிற மீன ராசிக்காரர்களே!**

வாகனத்தில் மிதவேகம் பின்பற்றவும். புத்திரர் விரும்பிய பொருள் வாங்கித் தர கேட்டு, பிடிவாத குணத்துடன் செயல்படுவர். காலமுறை உணவுப்பழக்கம், உடல்நல ஆரோக்கியம் பாதுகாக்கும். வெளியூர் பயணத் திட்டத்தில் மாற்றம் செய்வீர்கள். இல்லறத்துணை கருத்து வேற்றுமை மறந்து, குடும்ப நலனில் அக்கறை கொள்வார். தொழிலில் உற்பத்தி, விற்பனை சராசரி அளவில் இருக்கும். பணியாளர்களுக்கு சலுகை கிடைக்க தாமதமாகும். பெண்கள், சிக்கன பணச்செலவில் வாழ்வு நடத்துவர். மாணவர்கள், நண்பர்களிடம் படிப்பு தவிர, பிற விஷயம் விவாதிக்க வேண்டாம்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மாயத் தீவில்
## மந்திரக் கிழவி




வானில் தோன்றிய காளியின் உருவம் மந்திரக்கிழவியோடு உரையாடவும் செய்தது.

"மகளே! எதற்காக இந்த யாகத்தை நடத்துகின்றாய்?" என்றாள் காளி.

"தாயே! நான் என்றென்றைக்கும் இளமையோடு சிரஞ்சீவியாக வாழும் வரத்தை நீ தந்தருள வேண்டும். அதற்காகத் தான் இத்தனை பிரமாண் டமாக யாகம் ஒன்றைச் செய்கின்றேன்" என்றாள் மாயக்கிழவி.

"அதற்கு நீ எனக்கு ஆயிரத்தொரு அரசிளங் குமாரர்களை பலி தர வேண்டும். அதில் ஒருவர் குறைந் தால் கூட உனது யாகம் பயனற்றதாகி விடும்" என்றாள் காளி. இதைக் கேட்டதும் மந்திரக்கிழவியின் மனதில் உண்மையிலேயே ஆயிரத்தொரு அரசிளங் குமாரர்கள் இருக்கின் றார்கள் தானா என்ற ஒரு சந்தேகம் தோன்றியது. உடனேயே பலிபீடத் தில் தயாராக இருந்த ஒவ்வொரு அரசிளம் குமாரர்களையும் எண்ணத் தொடங்கினாள். எனினும் அவள் சந்தேகப்பட்டதைப் போல ஆயிரத் தொரு இளவரசர்கள் இருக்கவில்லை. இருவர் குறைவாகவே காணப்பட்டார்கள். அந்த இருவரும் வேறு யாருமல்ல. இந்திரவர்மனும் சந்திரவர்மனும் தான். 'அந்த இரண்டு குட்டிப் பிசாசு களும் மாயப் புகையில் மயங்கி பலிபீடத்தை நோக்கி வந்தார்களே! அதற்கிடையில் எங்கே தொலைந்தார் கள்?' என்று குழம்பத் தொடங்கினாள் மாயக்கிழவி. அவளுக்குத் துணை யாக பூதகணங்களும் இளவரசர்களைத் தேடத் தொடங்கினார்கள். எங்கு தேடியும் அவர்களைக் காண வில்லை.

(மந்திரக் கிழவி வருவாள்...)

# குறள் படி



அறிவு பொங்கிட - குறள் படி
அன்பு ஓங்க - குறள் படி
அறம் பெருகவே - குறள் படி
அநீதி நீங்கிட - குறள் படி
நல்லவள் ஆகிட - குறள் படி
நீதி நிலைத்திட - குறள் படி
நன்றி நாடிட - குறள் படி
நட்பு மலர்ந்திட - குறள் படி
செல்வம் கூடிட - குறள் படி
சினம் மாறிட - குறள் படி
சிந்தனை ஊறிட - குறள் படி
சீர்களும் நிலைத்திட - குறள் படி

ஸாதிக் பாரிஸ்,
மள்வானை

# தெரிந்து கொள்வோம்

- சுகப்பிரசவம் அல்லாமல் தன் தாயின் வயிற்றில் இருந்து கிழித்து வெளியே எடுக்கப்பட்டவர் ஜூலியஸ் சீசர். அதனால்தான் இந்த முறைக்கு சீசரியன் என்று பெயர் வந்தது.
- பிறந்து ஆறு முதல் எட்டு வாரங்கள் வரை குழந்தைகள் அழுதால் கண்ணீர் வராது.
- நான்கு வயது குழந்தைகள் ஒரு நாளைக்கு சுமார் 400 கேள்விகள் கேட்கும்.
- கருவில் முதன் முதலில் உருவாகும் உறுப்பு - இதயம். மனிதன் இறந்து போனதும் முதலில் செயலிழக்கும் உறுப்பு - இதயம்.
- மனித உடல்களில் சுமார் 6 கோடியே 50 லட்சம் செல்கள் இருக்கின்றன.
- ஒரு தலைமுறை என்பது 33 ஆண்டுகள்
- பழ மரங்களில் நீண்ட காலம் விளைச்சல் தருவது தோடை மரம். சுமார் 400 ஆண்டுகளாக தொடர்ந்து அது விளைச்சல் தரும்.
- உலகிலேயே மிகச் சிறிய மரம் குட்டை வில்லோ மரம். அதன் உயரம் இரண்டே அங்குலம் தான்.
- பொதுவாக தாவரங்கள் நகராது. ஆனால் கிலாமிடோமொனாஸ் என்ற ஒரு செல் தாவரம் நகர்ந்து போகும் தன்மை உடையது.
- பச்சோந்தியின் நாக்கு தன் உடலின் நீளத்தை இரண்டு மடங்கு அதிகமாக இருக்கும்.
- நாக்கை நீட்ட முடியாத ஒரே விலங்கு முதலை.
- நீல திமிங்கலத்தின் எடை 22 யானைகளின் எடைக்கு சமம். அதன் இதயம் ஒரு சிறிய கார் அளவில் இருக்கும்.
- யானையின் கால் தடத்தின் நீளம் அளந்து, அதை ஆறால் பெருக்கி வரும் விடையே - யானையின் உயரம்.




# அறிந்துகொள்ள வேண்டியவை

### "பாலைவனக்கப்பல்"

ஒட்டகமானது கடும் குளிர், கடும் வெப்பம், கொதிக்கும் மணல், புழுதிக்காற்று, புல்பூண்டு, தண்ணீர் அற்ற வறட்சியில் மாதக்கணக்கில் பிரயாணம் செய்யும்போது அனைத்து இயற்கைத் தாக்குதல்களையும் சளைக்காமல் வெற்றிகரமாக எதிர்கொண்டு வெற்றிநடை போட்டு பாலைவனத்தை கடக்கக் கப்பல் போல் அமைவதால் "பாலைவனக்கப்பல்" எனும் பெயரைப் பெற்றுள்ளது.

ஒட்டகம் பாலைவனத்தில், தனிச்சிறப்பு வாய்ந்த தனக்கு ஒப்புமை அற்ற தாவர உண்ணி வகையைச்சேர்ந்த பாலூட்டி பிரிவைச்சார்ந்த ஒரு வீட்டுவிலங்காகும்.

பொதுவாக ஒரு ஒட்டகம் 250 கிலோ எடையிலிருந்து 680 கிலோ எடை வரை வளரும். இந்தப் "பாலைவனக் கப்பல்" 50 ஆண்டுகள் வரை உயிர் வாழ்கின்றது. ஒட்டகத்தின் மிகவும் புகழ்பெற்ற பண்பு, நீரில்லாமல், உணவில்லாமல். பாலைவனத்தில் பலநாள் வாழக்கூடியது,



### நாய்




கற்கால மனிதனோ, மங்கையோ ஒநாய் குட்டியை தத்தெடுத்த நாள் முதல் அதை நல்ல காவலானகவும், வேட்டைத் துணையா கவும் கண்டனர். மனித இன நடத்தை மற்றும் அகழ்வாராய்ச்சி முடிவுகள், ஆயிரம் ஆண்டு களுக்கு முன்பே பெரும்பான்மையான நாய் இனம் வழி வழியாக மனிதர்க்கு சேவகனாகவே இருந்து வந்திருக்கின்றன எனச் சுட்டிக் காட்டு கின்றன. தற்போது அவை பார்வை குறை உள்ளவர்களுக்கு உதவுவது, பண்ணை விலங்கு களை மேய்ப்பது, வேட்டை மற்றும் பந்தயங்க ளில் ஆர்வம் உள்ளவர்களுக்கு சிறந்த பொழுது போக்கு சாதனமாகத் திகழ்வது, ஆகியவை அவற்றின் அநுகூலங்களும், அவலங்களும் நிறைந்த சேவகத்தின் முன்னேற்றங்கள். நாய்களை ஒட்டுண்ணிகள் என அழைப்பது உண்மையில் தகாத ஒன்றாகும்.

# விடுகதைகளும் விடைகளும்

- முதுகிலே சுமை தூக்கி முனகாமல் அசைந்து வரும். அது என்ன?
  -நத்தை-
- ஓயாது இரையும் இயந்திரம் அல்ல. உருண்டோடி வரும் பந்தும் அல்ல. அது என்ன?
  -கடல் அலை-
- வயதான பலருக்கு புதிதாக ஒரு கை. அது என்ன?
  -வழுக்கை-
- தலையைச் சீவினால் தாளில் நடப்பான். அவன் யார்?
  -பென்சில்-
- காற்றைக் குடித்து காற்றில் பறப்பான், அவன் யார்?
  -பலூன் -
- பச்சை நிற அழகிக்கு உதட்டுச் சாயம் பூசாமலே சிவந்த வாய் அவள் யார்?
  -கிளி-
- அம்மா படுத்திருக்க, மகள் ஓடித்திரிவாள். அது என்ன?
  -அம்மி குளவி-
- கன்று நிற்க கயிறு மேயுது. அது என்ன?
  -பூசணிக்கொடி-
- க சக்கிப் பிழிந்தாலும் கடைசி வரை இனிப்பான். அவன் யார்?
  -கரும்பு-



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






**இ**னம். ஈழத்தமிழரைப் பற்றி தமிழில் வந்திருக்கும் திரைப்படம். சந்தோஷ்சிவன் என்கிற ஒளிப்பதிவாளர் இதனை இயக்கியிருக்கின்றார். இது மாதிரியான சிக்கலான கதைகளை திரைப்படமாக்கும் பாணியில் அவரது படங்கள் அமைந் திருக்கும். அந்த வகையில் சிக்கலுக்குரிய கதையுடன் வந்திருக்கும் 'இனம்' தமிழக சினிமா சூழலிலும், உணர்வாளர்கள் மற்றும் சமூக வலைப்பதிவாளர்கள் மத்தியிலும் கொதி நிலையை ஏற்படுத்தி யிருக்கின்றது.

அப்படி என்னதான் இருக்கிறது கதை யில்? முதல் காட்சியுடன் படம் தடை செய்யப்படக்கூடும் என்ற மனநிலையோடு தியேட்டருக்குள் நுழைந்தோம். சினி மாக்காரர்கள், பத்திரிகையாளர்கள். எழுத்தாளர்கள். இவ்வளவுபேரும் நிறைந்தகூட்டத்துக்கு திரையை திறந் தார்கள்.

கறுப்பு வெள்ளை, சாயம்போன வர்ணங்களில் குழந்தைகள் வரைந்த ஓவியங்களுக்கு இடையில் படத்தின் பெயர் உள்ளிட்ட முகவரி வந்துபோகிறது. இருதரப்பினர் ஆயுதங்களுடன் சண் டையிட்டுக் கொள்வது. இடையில் அகப்படும் குழந்தைகளும், பறவை களும் சாவது என ஓவியங்கள் தீர்ந்ததும் படம் ஆரம்பிக்கிறது.

ஓர் ஈழப்பெண்ணை இந்திய உயரதிகாரி விசாரிக்கிறார். அவரின் குரல் மட்டும் கேள்வி கேட்கும். அந்தப் பெண் தன் நிலையை விபரிப்பார். பட கேறும்போது 50 பேர் என்றும் இறங்கும் போது 47 பேர் என்றும் நாடுகடக்கும் கடற் பயணத்தின் துயரை ஒரு வரியில் சொல்லிவிடுவார். அதில் சுனாமி அக்கா என்பவரை அவர் நினைவுபடுத்த, திரை யும், கதையும் பின்னோக்கி ஈழத்துக்கு நகரும்.

போர் பச்சைப் பசேல் என்ற, நீர் வளம் மிக்க இடங்களில் நடந்திருக்கிறது. மக்களைவிட கோழிக்குஞ்சுகள் போரில் அதிகம் பாதிக்கப்பட்டிருக்கின்றன. அங்கு சுனாமி அக்கா எனப்படும் நடுத்தர வய துடைய பெண் ஒரு இல்லம் நடத்துகிறார். அதாவது சுனாமியில் குடும்பங்களை இழந்த சிறார்களையும், சிறுமியரையும் இணைத்து ஒரு இல்லம் நடத்துகிறார். அங்கு வளரும் பிள்ளைகளுக்கு பாடம் சொல்லிக் கொடுக்க போர் வேளையிலும் 'கோர்ட்' போட்டுக் கொள்ளும் வாத்தியாரும் இருக்கிறார். இதைவிட மிதிவெடி ஒன்றில் சிக்கி அதில் இருந்து எழுந்து வர முடியாமல் அங்கேயே வருடக்கணக்கில் இருந்து சாமியாராகி ப்போன ஒருவரும் இடையிடையே வந்துபோகிறார். இவர் களுக்கு மத்தியில் போர் தொடங்குகிறது.

ஒரு நாளில் கடற்கரையில் ஒருவன் பெட்சீற்றால் மூடப்பட்டபடி கிடப்பதை சுனாமி அக்காவின் இல்ல பிள்ளைகள் கண்டுபிடிக்கிறார்கள். அவன் மூளை சுகமில்லாதவன். தெளிவாக கருத்தூன்றி கதைக்க முடியாதவன். அவனை தூக்கிவருகிறார்கள். அவன் கையில் சிறு கத்தி ஒரு கைத் தொலைபேசி உள்ளிட்ட பொருட்களை வைத்திருக்கின்றான். அதுஜீவாவின் கத்தியென சொல்கிறான். "யார் ஜீவா?" "லீடர்.. வீரன்.. பெரியவன்" என்கிறான் அவன்.

ஜீவாவைத் தேடி கதை நகரப்போகிறது என்ற எதிர்பார்ப்பு எழுகிறது. ஆனால் அது நடக்கவில்லை. சுனாமி அக்காவின் இல்லத்தில் அவனை பராமரிக்கின்றனர். அங்கு போர் இடையிடையே வந்து போகிறது. ஷெல் வெடிக்கிறது. பள்ளிக் கூடங்களுக்குள் வகுப்பெடுக்க விடாமல் பெண் போராளிகள் வந்து மாணவர் களைப் பிடித்துப் போகிறார்கள். மீசை கூட அரும்பாத சிறுவர்கள் அமெரிக்க கொமாண்டோக்களின் துப்பாக்கிகளுடன் வந்துபோகிறார்கள். மோசமான எறி கணை வீச்சு நாளொன்றில் நந்தன் பகுங்குகுழி வெட்டுகிறான். அந்தக் குழியில் மண்டையோடு ஒன்று வருகிறது. அனைவரும் அதனை சாபம் என்று சொல்லி கடலில் வீசி விடுகின்றனர். ஆனால் நந்தன் அதை 'மை டியர் பிரண்ட' என்று சொல்லி எப்போதும் கையிலே கொண்டு திரிகின்றான். இடையிடையே நந்தனை போட்டு அடிக்கிறார்கள். கட்டி யும் வைக்கிறார்கள். அதற்குள் காதல் வந்துவிடுறது. அந்தப் பெண் மீது நந்தனுக்கும் காதல் வருகிறது. முக்கோண காதல் கதை ஆரம்பம். அந்தப் பெண் எங்கேயோ அருவியில் குறுக்குக் கட்டோடு குளிக்கிறாள். நந்தன் மரத்துக்குக் கீழ் மறைந்திருந்து பார்க் கிறான். அவளைப் பின்தொடர்கிறான். இந்த நேரத்தில் மற்றைய காதலன் வந்து முத்தம் கொடுக்க, கிளாமர் 'சோங்' ஆரம்பிக்கிறது. கிளிநொச்சியில் மக்களை அப்பாவிகளாக விட்டு வெளியேறும் ஐ.நா. நிறுவனங்கள் பற்றி காட்சி வருகிறது. அவர்கள் மேலிடத்தில் ஆங்கிலத்தில் பேசுகின்றனர். இன அழிப்பு நடக்கிறது என்பதை ஆங்கிலத்தில் யாருக்கோ விளங்கவைக்க முயற்சிக்கின்றனர். 'அதற்கு எதுவும் செய்ய முடியாது வெளியேறுங்கள்' என்ற பதில் தெளி வாக கேட்கிறது. அவர் மீன் குஞ்சுகளைக் கூட கவனமாக எடுத்துக் கொண்டு வன்னியைவிட்டு வெளியேறுகின்றனர். இந்தப் பந்தியைப் போலவே குழப்பமாக படத்தின் இடைவேளை வரையிலான காட்சிகள் முடிகின்றன.

இரண்டாம் பாதியில் சிறுவர்கள் போராளி களோடு சேர்ந்து கொள்கின்றனர். காதலர் களாக இருந்தவர்களும் பிரிகின்றனர். அவ ளுக்கு தெரியாமலேயே அவன் ஓடிவிடுகிறான். ஏற்கனவே அந்த சிறுவர் இல்லத்திலிருந்து போராளியான ஒருவன் மறுபடியும் வருகிறான். சில சிறார்களை போராட்டத்துக்கு அழைத்துப் போகிறான். நந்தனும் அவர்களுடன் போய் வழி தெரியாமல் திரும்பி வந்துவிடுகின்றான்.போர்ச் சத்தம் அடிக்கடி கேட்கிறது. அவர்களுக்குள் குண்டு விழுகிறது. சிறுவர்கள், வயதானவர்கள் செத்துக் கிடக்கின்றனர். போரிலிருந்து சிறுவர்களை காப்பாற்ற திருமணமே சிறந்த வழியென்கிறார் சுனாமி அக்கா. அவரின் கூற்றுப்படி அங்கிருக் கிற ஒவ்வொருவரும் தமக்கு பொருத்தமான வர்களை தெரிவு செய்து வாழைநாரில் தாலி கட்டிக் கொள்கின்றனர். தாலி கட்டியபின் அந்த சோடிகளை இராணுவத்திடம் போகும்படி அனுப்புகிறார் சுனாமி அக்கா. அவர்களும் போகிற பச்சைப் பசேலென்ற வயல் வெளியில் மீன் குஞ்சுகளைப் பிடித்து அருவியில் விட்டுக் கொண்டிருக்கிறார் புத்த பிக்கு. இந்தச் சிறார்களைக் கண்டதும் சிரித்து, அன்போடு கையில் வைத்திருக்கும் மாதுளம் பழத்தை கொடுக்கிறார். அவர்கள் அதை வாங்கிக் கொண்டு ஒரு பாழடைந்த வீட்டுக்குள் ஒதுங்கு கின்றனர். பாலும், புத்த பிக்கு கொடுத்த மாது ளம் பழத்தையும் சாப்பிட்டு முதல் இரவை கொண்டாடுகின்றனர். நந்தன் அவளிடம் முத்தம் கேட்கிறான். அவள் எதற்கும் இணங்கவில்லை. மறுத்துவிடுகிறாள். அவன் அந்தப் பாலையும், மாதுளம் பழத்தையும் எடுத்துச் சென்று மண்டையோட்டுக்கு படைக்கிறான். சாப்பிடச் சொல்லிவிட்டு அவ்விடத்திலேயே படுத்து உறங்கிவிடுகிறான். அந்த நேரத்தில் பாதுகாப்பு தேடி போராளி ஒருவன் அந்த வீட்டுக்குள் நுழைந்துவிடுகிறான். அவன் அந்த பழத்தை யும், பாலையும் பருகி களைப்பாற இராணு




**மோசமான எறிகணை வீச்சு நாளொன்றில் நந்தன் பகுங்குகுழி வெட்டுகிறான். அந்தக் குழியில் மண்டையோடு ஒன்று வருகிறது. அனைவரும் அதனை சாபம் என்று சொல்லி கடலில் வீசி விடுகின்றனர்.**


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பச்சையாக கேரளாவைக் காட்டி, முள்ளிவாய்க்கால் அல்லது வன்னி என்கிறார். கதை என்ன என்பதை சினிமாக்காரர்களாலேயே கண்டுபிடிக்க முடியவில்லை. ஒளிப்பதிவில் கூட எதுவுமில்லை. நினைவில் நிற்குமளவுக்கு எந்தக் காட்சியும் இல்லை. ஒரே டுமீல் டமீல் சத்தங்களால் நிறைந்திருக்கிறது இசை. இதுமாதிரியான சம்பவங்களை படமாக்க நினைப்பவர் களுக்கு இந்தப் படம் ஒருபோதும் முன்னோடியாக இருந்துவிடக்கூடாது. சினிமா தொழிலில் பெரும் வளர்ச்சி கண்டுவிட்ட இந்தியாவில் இந்தப் படம் தோல்விக்குரிய தயாரிப்பை பெற்றிருக்கிறது.

# என்ன சொல்கிறது?




...வத்தினர் வீட்டை சுற்றி வளைத்துவிடுகின்றனர். அவன் அதற்குள்ளேயே பதுங்கிக் கொள்கிறான். வீட்டுக்குள் நுழைந்து இராணுவம் தேடுகிறது. இருப்பதெல்லாம் பொதுமக்கள் என அறிந்ததும் ராணுவம் விலகுகிறது. போன ஒரு சிப்பாய் திருப்பி வந்து சராமாரியாக சுட போராளியும் சுடுகிறான். இருவரும் செத்துப் போகின்றனர். நந்தன் உள்ளிட்டோர் தப்பி ஓடி சரணடைய வருகின்றனர். சுனாமி அக்காவும் வருகிறார். புலிகளும் - இராணுவமும் சண்டையிடும் நடுப்பகுதியில் அவர்கள் மாட்டிக் கொள்கின்றனர். சரமாரியான துப்பாக்கிச் சூடு. இராணுவத்தினர் இந்தப்பக்கம் வரும் வரைக்கும் சுடாமல் காத்திருக்கின்றனர். ஆனால் அவர் அந்த இடத்தில் அமர்ந்திருந்து கல்தோன்றா மண் தோன்றா காலத்து மூத்த குடிகள் என்று கவிதை பாடிக் கொண்டிருக்கிறார். சுனாமி அக்காவின் கீழ் வளர்ந்த ஒரு போராளி அவளை காப்பாற்றுவதற்காக எழுந்து ஓடுகிறான். நெருங்கி தூக்க முயற்சிக்க இராணுவம் சுடுகிறது. சுனாமி அக்காவும் போராளியும் செத்துப் போகின்றனர்.


அதில் சிலர் காயப்படுகின்றனர். ஒருவனின் காலில் துளைத்தபடி நிற்கிறது ஆர்.பீ.ஜீ. அவனைத் தூக்கிக்கொண்டு ஒரு போராளி மருத்துவமனைக்கு ஓடுகிறான். அவனுக்கு பின்னால் நந்தன் ஓடுகிறான். மருத்துவமனை காயப்பட்டவர்களால் நிரம்பி வழிகிறது. அங்கு நந்தன் ஜீவாவை கண்டுபிடிக்கிறான். ஜீவ மோசமாக தலையில் காயப்பட்டு கட்டுப் போட்டு கிடத்தப்பட்டிருக்கிருன். அவனை எழுப்பி பேசுகிறான். 12 வயது நிரம்பிய மிகவும் சிறியவனாக ஜீவா இருக்கிறான். 'இவன் என் தம்பி' என்று நந்தன் ஏனைய இல்ல சிறுவர்களுக்கு அறிமுகப்படுத்தி வைக்கிறான். லீடர் என்றும், வீரன் என்றும் நந்தன் இவனையா சொன்னான் என்று அவர்கள் கேட்டு சிரிக்கின்றனர். ஜீவா சொல்கிறான் "லீடர் சாகும்போது நான் பக்கத்தில தான் சுட்டுக் கொண்டிருந்தன். சாகும்போது அவரின் கண் திறந்திருந்தது. கண் திறந்திருந்தா திருப்பியும் வருவாங்களாம்" என்று சொல்கிறான். நந்தன் அந்தக் கத்தியை ஜீவாவிடம் கொடுக்க "அதை நீயே வைத்துக் கொள்" என்று நந்தனிடமே கொடுத்துவிடுகிறான்.

அடுத்து சரணடையும் காட்சி வருகிறது. 'கோர்ட்' அணிந்த வாத்தியார் தன் மனைவியின் வயிற்றில் தலையணையைக் கட்டி கர்ப்பிணியாக கூட்டிவருகிறார். அந்த தலையணைக்குள் தங்க நகைகளை பதுக்கி எடுத்துவருகிறார் என்பதை இராணுவம் கண்டுபிடித்ததும், அந்தப்பெண்ணை பாலியல் வன்புணர்வுக் குட்படுத்த முயற்சிக்கின்றனர். சுற்றி வர நவீன ரகத் துப்பாக்கிகளுடன் நிற்கும் இராணுவத்தினர் மத்தியில் ஒரு கருங்காலி வேரைக் கொண்டு இராணுவத்தினரை அடிக்க முற்படுகிறார் வாத்தியார். அடுத்த காட்சியில் இந்திய அதிகாரி விசாரித்துக் கொண்டிருக்கும் பெண்ணும் நந்தனின் தற்காலிக மனைவியுமானவளும் அவளின் நண்பியும் சோதனை செய்யப்படுகின்றனர். நந்தன் கண்களை மூடிக் கொள்கின்றான். அங்கு மக்கள் போல வேடமிட்டு வந்திருக்கும் பெண் போராளிகள் பைகளுக்குள் இருந்து துப்பாக்கிகளை எடுத்து இராணுவத்தை சுடுகின்றனர். மக்கள் மத்தியில் சரமாரியான சண்டை. பலர் இறந்து திசை மாறிப் போய்விடுகின்றனர். நந்தனின் மனைவியும், அவளின் நண்பியும் ஓடிக்கொண்டிருக்க அவர்களை பிடிக்கிறது இராணுவம். தனித்தனியே வைத்து பாலியல் பலாத்காரம் செய்கின்றனர். அதை ஒரு சிப்பாய் வீடியோ படம் எடுக்கின்றான். அது தவறென வாதாடுகிறார் ஒரு 'கொமாண்டர்'. "போரில் இதெல்லாம் சகஜம்" என்று சொல்லி பாலியல் பலாத்கார காட்சி காட்டப்படுகிறது. எங்கிருந்தோ வரும் நந்தன், ஜீவா கொடுத்த கத்தியால் தன் மனைவியை பாலியல் வன்புணர்த்தும் இராணுவத்தினனை குத்தி கொல்கிறான். இருவரும் பாலத்துக்கு மறுபக்கம் அதாவது இராணுவத்தினர் பக்கம் வந்துவிடுகின்றனர். நந்தன் ஜீவாவை விட்டு வர மாட்டேன் என்று சொல்லி ஜீவாவிடம் ஓடுகிறான். அவனைக் கூப்பிட்டு முத்தமிட்டு அனுப்புகிறாள் அவள். நந்தன் ஓடி மறையும் பாதையில் குண்டுவெடிக்கிறது. அவன் மீள வரவில்லை. இவர்கள் படகேறி இந்தியா வருகின்றனர்.

விசாரணை அதிகாரி விசாரணையை முடித்து அவளை வெளியே அனுப்புகிறார். இதற்கு என்ன செய்வோம் என்ற வகையில் ஏக்க வசனம் பேசுகிறார்.

2009இல் நடந்த இலங்கை போரில் 40,000 பொதுமக்கள் இறந்தார்கள். பலர் கொல்லப்பட்டும், காணாமலும் போனார்கள் என்ற திரை வசனத்துடன் படம் முடிகிறது.

இதுவே இனம் படத்தின் முழுக்கதையும். ஆங்காங்கே தொடர்பின்றியும், குழப்பமாகவும் அமையும் காட்சிகள் ஏராளம். படத்தின் அரசியலை நாம் விமர்சிக்க முடியாது. ஆனால் இதுபோன்றதொரு கதையை திரைப்படமாக்கும்போது பின்பற்றவேண்டிய எந்த விடயமும் இதில் கடைப்பிடிக்கவில்லை. போர் பற்றிய கூகிள் படங்களை வைத்துக்கொண்டே காட்சிகளை அமைத்திருக்கிறார். அதிக காட்சிகள் இறுதிப் போரின்போது வந்த புகைப் படங்களை நினைவுபடுத்துகின்றன. அத்துடன் இந்த வகை படங்களுக்கு அவசியம் தேவைப்படும் புவியியல் சார்ந்த காட்சி அமைப்பிலும் தவறியிருக்கிறார் பச்சையாக கேரளாவைக் காட்டி, முள்ளிவாய்க்கால் அல்லது வன்னி என்கிறார். கதை என்ன என்பதை சினிமாக்காரர்களாலேயே கண்டுபிடிக்கமுடியவில்லை. ஒளிப்பதிவில் கூட எதுவுமில்லை. நினைவில் நிற்குமளவுக்கு எந்தக் காட்சியும் இல்லை. ஒரே டுமீல் டமீல் சத்தங்களால் நிறைந்திருக்கிறது இசை. இதுமாதிரியான சம்பவங்களை படமாக்க நினைப்பவர்களுக்கு இந்தப் படம் ஒருபோதும் முன்னோடியாக இருந்துவிடக்கூடாது. சினிமா தொழிலில் பெரும் வளர்ச்சி கண்டுவிட்ட இந்தியாவில் இந்தப் படம் தோல்விக்குரிய தயாரிப்பை பெற்றிருக்கிறது. காரணம் சரியான களஆய்வு இடம்பெறவேயில்லை. இப்படி ஆயிரம் குறைகளை மட்டுமே 'இனம்' மீது சொல்லமுடியும்.




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அவர்களுக்கென்று ஓர் உலகம்

முருகேசர் கைதடியிலாம். அவரைக் கொண்டே விட்டாச்சாம் என்ற செய்தி ஊருக்குள் பரவிய போது உள்ளம் நொந்தவர்களில் ஆறுமுகத்தாரும் ஒருவர். அவர் முருசேகர் வீட்டில் சில காலம் வேலை செய்த போது முருகேசருக்கு அவரது குடும்பத்தினரால் இழைக்கப்பட்ட அநீதிகளையும் அவமதிப்புக்களையும் கண்டு கவலை யுற்றிருக்கின்றார்.

உதயகுமார் கௌரிகா

சிறுகதை



சூரியனின் பொன்மயமான வரவுக்கு கட்டியம் கூறுகின்ற புள்ளினங்களின் இனிய ஓசையுடன் அன்றைய நாளுக்குத் தயாராகியது அந்த இல்லம். அன்புக்கு அங்கு என்றுமே குறை இருந்ததில்லை. ஆலயத்தில் அமைதி தேடுகின்ற சில அங்கத்தவர் கள் மணியை அடித்து ஒலியை எழுப்பி தம் மனதிற்கு ஆறுதல் தேடினர். இன்னொருபுறம் இனிய சங்கீதம் அமைதி யுடன் ஒலித்துக் கொண்டிருந்தது.

தமது உடலுக்கும், உளத்துக்கும் ஆறுதல் தேடும் விதமாக அவரவர் வேலைகளில் இன்பமுடன் ஈடுபட்டி ருந்தனர் அந்த இல்ல அங்கத்தவர்கள். உறவுகளின் பிடியிலிருந்து விலக்கி ஒதுக்கப்பட்டவர்கள் தான் இவர்களென்றாலும் மனதுக்கு அமைதியும் ஒருவரில் ஒருவர் அன்பு கொள்ளவும் ஏற்ற இடமாக கைதடி முதியோர் இல்லமாக இருந்தது.

வளர்ந்து வரும் தென்னை, கமுகு,வாழைகளுக்குத் தண்ணீர் ஊற்றுவது தான் முருகேசர் விரும்பி ஏற்ற வேலை. நிரையாக வைக்கப்பட்டு வளர்ந்து வரும் தென்னைகளும், அவற்றினூடு பயிராக நாட்டப்பட்ட வாழைகளும் வாழ்வில் எது வந்தாலும் நிமிர்ந்து நிற்க வேண்டும்என்ற வாழ்க்கைத் தத்துவத்தைஉணர்த்துவதாக நிற்கும் நிரையான கமுகுகளுக்கும் தண்ணீர் விட்ட படியே அவற்றின் அழகை ரசித்துக் கொண்டிருந்தார் முருகேசர்.

நீரைப் பெற்றுக் கொண்ட ஒவ்வொரு பயிர்களும் நீரில் நனைந்த மண்ணும் தன்னை நன்றியுடன் பார்ப் பதைப் போன்ற ஒரு உணர்வு மனதில் தோன்றி அவருக்கு ஒரு வித இன்பத்தைத் தந்தது. பெரும் குலையை ஈன்ற மகிழ்வுடன் தலை தாழ்த்தி நின்ற வாழையைப் பார்த்து "மனித இனம் நிழல் கிடைத்தால் நிச்சயம் உறங்கி விடும் என்பதற்காக வாழை தன் பச்சை நிழற்குடையை எச்சரிக்கையாக மடக்கி வைத்தி ருக்கிறது" என்று தன் மனதுக்குள் நினைத்தபடி மகிழ்ந்திருந்தார் முருகேசர்.

தண்ணீர் ஊற்றிக் கொண்டிருக்கும் போது தான் இரண்டரை வருடங்களுக்கு முன் வைத்த அந்த "வத்தாவி"த் தென்னையை உற்றுநோக்கினார். முகத்தில் ஆயிரம் நிலவுகள் ஒன்று சேர்ந்ததைப் போன்ற வெளிப்பும் மகிழ்வும் ஏற்பட்டது.

முதல் முதலாகத் தென்னம் பிள்ளையில் பாளை தோன்றிவிட்டால் முருகேசர் நிலத்தில் நிற்கமாட்டார். அதிர்ஷ்டலாபச் சீட்டிழுப்பில் கோடி பணம் பெற்றதைப் போல் ஒரு சந்தோசம். தனது பெண் பிள்ளையே ஒன்று பூப்படைந்து விட்டதைப் போல அவரது கருத்து. 'அதுகும் ஒரு பிள்ளைதானே. அப்பதானே அவையட மனமும் மகிழும். அதுகளுக்கு "உயிர் இருக்குது தானே" என்று கூறியபடி முத்துமாலையை வாங்கி பாளையின் கழுத்தில் போட்டார். இப்ப தான் ஏதோ பெரியதொரு சடங்கு செய்துவிட்டது போன்ற ஆத்ம திருப்தி.

"முருகேசர் கைதடியிலாம். அவரைக் கொண்டே விட்டாச்சாம்" என்ற செய்தி ஊருக்குள் பரவிய போது உள்ளம் நொந்தவர்களில் ஆறுமுகத்தாரும் ஒருவர். அவர் முருசேகர் வீட்டில் சில காலம் வேலை செய்த போது முருகேசருக்கு அவரது குடும்பத்தினரால் இழைக்கப்பட்ட அநீதிகளையும் அவமதிப்புக்களையும் கண்டு கவலை யுற்றிருக்கின்றார்.

தன் பெண் பிள்ளைகளை வெளிநாட்டுக்கு அனுப்பி, அவர்களுக்கு திருமணம் செய்து வைத்து விட்டு, தனது இரண்டு ஆண்பிள்ளை களையும் நல்ல உத்தியோகத்தில் அமரச் செய்தவர் தான் முரு கேசர்.

முருசேகரின் பிள்ளைகளோ பகடைக் காயாக அவரை வெளிநாட்டுக்கு அழைத்தனர். அந்நிய மண் முருகேசருக்கு, வெறுக்க முன்பு முருகேசரை அவரது பிள்ளைகள் வெறுத்து விட்டனர். ஒவ்வொரு பிள்ளைகளும் தவணை அடிப் படையில் ஓரிரண்டு மாதங்களுக்கு மட்டுமே பராமரித்தனர்.

பின்பு அவர்களுக்கு முரு கேசரின் இருப்பு சுமையாகி விட்டது. "ஐயாக்கு இங்கத் தேக் 'கிளைமற்' ஒத்துவரவில்லை" என்ற நாகரீகப் பொய்யுடன் யாழ்ப்பாணத்துக்கே அனுப்பப் பட்டார் முருகேசர். எந்த நேரமும் தொலைக் காட்சி முன் இருக்கும் மருமக்களுக்கு முருகேசர் செய்யும் ஒவ்வொரு செயல்களும் குற்றங்களாகக் காணப்பட்டன.

"உங்கட அப்பரை கெதியாக் கொண்டே கைதடியில் விடுங்கோ. இல்லாட்டி நான் என்ர பிள்ளைகளைக் கூட்டிக் கொண்டு என்ர அம்மா வீட்ட போடுவேன். எனக்கென்ன தலையெழுத்தே இவரை வைச்சுப் பராமரிக்க"

"எங்களுக்கு மட்டுமே அவர் தன்னுடைய சொத் தைத் தந்தவர். எல்லோருக்கும் தானே பிரிச்சுக் கொடுத்தவர். இவருக்கென்ன 'பெஞ்சனா' இருக்கு. நான் வைச்சு பார்க்கமாட்டன்" இப்படியாக தொடர்ந்தன மருமக்க ளின் நச்சரிப்புக்கள்.

"மனைவி சொல்லே மந்திரம்" எனக் கட்டுப்பட்ட முருகேசனாரின் ஆண்பிள்ளைகள் மனைவியரின் கோபத்துக்கும் , நச்சரிப்புக்கும் பயந்து " ஐயாவுக்கு கைதடியில் இருக்கத்தான் ஆசையாம்" என்ற நாசூக்கான வார்த்தையுடன் இங்கு கொண்டு வந்து சேர்த்து விட்டனர்.

முருகேசரின் வாழ்க்கைச் சம்பவங்கள் அடுத்தடுத்து கண் முன்னே நிழலாடிய ஆறுமுகத்தாருக்கு தான் தெரியும். முந்தி ஒரு காலம் புளியடி வாசிக சாலை யில் ஈழுநாதம் பேப்பரில வந்த புதுவை இரத்தின துரையி ன் கவிதைகளில் சில வரிகள் தான் நினைவுக்கு வந்தது.

"என்னஆறுமுகம் சீமெந்துக் கல்லிலேயே சிலை போல இருந்திட்டாய். இங்க வந்து என்ர பிள்ளையைப் பாரன். இந்த வத்தாவிக் கன்டேல்லே சாமத்தியப் பட்டிட்டாள்" என தன் தேகமே சந்தோசத்தால் குலுங்கும் படி சிரித்தார். முருகேசரின் சந்தோசத்தைக் கண்ட ஆறுமுகத்தாருக்கு இன்று தான் அவருடைய உள்ள மகிழ்ச்சியின் சிரிப்பு விளங்கியது. பாவம் மனுசன் இவ்வளவு காலமும் உதட்டால தான் சிரித்துக் கொண்டிருந்தது.


"தென்னம்பிள்ளை பெரியபிள்ளை ஆனதுக்கே இப்படிச் சந்தோசப்படுகிற மனுசன் தன்ர பிள்ளை களின்ர ஒவ்வொரு முயற்சியிலையும் எப்படிச் சந்தோசப்பட்டி ருக்கும்.சீ என்ன மனித நேயம் இப்ப இந்த உலகத்தில இருக்கு. பத்து மாசம் பெத்த வளர்த்த தாய் தகப்பனை பாரமென நினைப்பதும் , அவர்களின் மனம் நோகு படியான வார்த்தைகளை சொல்வதும் பின் அவர் களைப் பாரமாகக் கருதி இங்கு கொண்டு வந்து சேர்ப்பதும் ,என இந்த உலகை வெறுப்புடன் எண்ணிப் பார்த்த வரின் சிந்தனையைக் குலைத்தார் பார்வதி.

"என்ன இண்டைக்கு வேலன்ர பிறந்தநாளென்று தெரியும் தானே! அங்க எல்லாரும் பூசைக்கு ஆயத்த மாயிற்றினம். பூசையால வந்து நாங்க 'கேக்' வெட்ட வேணும்.பின்னேரம் கலை நிகழ்ச்சி செய்ய வேணும். முருகேசர் தான் பாட்டு, நீங்கள் டான்ஸ், கண் மணியாச்சி நாட்டியம் என்று தெரியாதோ? கெதியா வாருங்கோ கெதியா வருங்கோ" எனச் சிரிப்புடன் விரைவுபடுத்துகிறார் பார்வதி. மகிழ்வின் ரேகைகள் பரவத் தொடங்குகின்றன.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






## பிரிட்டனில் ஆபாசம் பார்க்கும் குழந்தைகள்?

பிரிட்டனில் 2 வயது குழந்தைகள் இணையத்தில் ஆபாச படத்தை பார்க்கிறார்கள் என்ற அதிர்ச்சி தகவல் வெளியாகியுள்ளது. குழந்தைகள் மற்றும் இளைய சமுதாயத்தை இணையத்தில் உள்ள ஆபாச காணொளிகள், பாலியல் வன்முறை செயல்களுக்கு தூண்டுகின்றன என சமீபத்திய ஆய்வொன்றின் மூலம் தெரிய வந்துள்ளது. சுமார் 30 லட்சம் குடும்பங்களில் உள்ள குழந்தைகள் ஆபாச படங்களை பார்ப்பதாகவும், இதில் 2[illegible] பங்கு குடும்பத்தினர் இதனைத் தடுக்கும் முயற்சியில் ஈடுபட்டுள்ளனர் என்றும் தெரிவிக்கப் பட்டுள்ளது.

ஆபிரிக்க காடுகளில் தந்த வேட்டையில் ஈடுபடுவோரால் யானைக் குட்டிகள் அனாதைகளாகின்றன. அவற்றை காப்பாற்றி வளர்க்கும் பணியில் இங்கிலாந்தைச் சேர்ந்த ரெய்சல் மூர்டான்(33) என்ற பெண் தன்னை அர்ப்பணித்துள்ளார். இவர் 6 யானைக்குட்டிகளை தத்தெடுத்து வளர்த்து வருகின்றார் ஜாம்பியாவில் லுசாகா நகருக்கு அருகே அடர்ந்த காட்டில் ஒரு சரணாலயத்தை ஏற்படுத்தி இந்த யானைக்குட்டிகளுடனேயே தனது வாழ்நாளைக் கழித்து வருகின்றார்.

சமீபத்தில் அமெரிக்காவில் நடைபெற்ற ஒஸ்கார் விருது வழங்கும் விழாவுக்கு, நடிகர் பிராட் பிட் வந்தபோது, பார்வையாளர்கள், அவரையே, வைத்த கண், வாங்காமல் பார்த்தனர். அவர் அணிந்திருந்த உடையும், அதில் செய்யப்பட்டிருந்த வேலைப்பாடுகளும், பிரமிப்பாக இருந்ததுதான், இதற்கு காரணம். இந்த உடையை வடிவமைத்தவர், அவரது மனைவியும் நடிகையுமான ஏஞ்சலினா தானாம். படப்பிடிப்பு இல்லாத நேரங்களில், ஆடைகள் வடிவமைப்பதில், கவனம் செலுத்துகிறார். அப்படி, அவர் வடிவமைத்த உடைகளில் ஒன்றைத்தான், விழாவுக்கு அணிந்து வந்திருந்தார் பிராட் பிட். 'மனைவி அமைவதெல்லாம், இறைவன் கொடுத்த வரம்' என, விழாவுக்கு வந்திருந்தவர்களிடம், மாய்ந்து மாய்ந்து, கூறினாராம் பிட்.



அறிவிலே மாத்திரம் எமக்கு ஒன்று குறைவு. ஆனால் நடை, உடை, பாவனையில் நாமும் மனிதர்களைப் போலேதான் எனக்கூறுகிறதா இந்தப் பூனை?

## 5 குழந்தைகள் என பலரை ஏமாற்றிய கனடாப் பெண்

கனடாவைக் சேர்ந்த பெண் ஒருவர் தான் கர்ப்பிணியென்றும் 5 குழந்தைகளை கருவில் சுமப்பதாகவும் கூறி தனது கணவர் மற்றும் உறவினர்களை ஏமாற்றி வந்துள்ளார்.
இவர் உண்மையில் கர்ப்பிணி என்றும் 5 குழந்தைகளை கருவில் சுமக்கிறார் என்பதையும் அப்பெண்ணின் நண்பி ஒருவர் நம்பி அப்பெண்ணுக்காக முகநூலொன்றை உருவாக்கி அதில் பெண்ணின் கர்ப்பம் குறித்து தெரிவித்துள்ளார்.
இதனை பார்த்த பலர் மேற்படி தம்பதியினருக்கு பரிசு மழை பொழிந்துள்ளனர்.
குறித்த பெண் 34 கிழமைகளின் பின்னர் தனது கணவனிடம் 5 கட்டில் வாங்கித்தருமாறும் கோரியுள்ளார்.
ஒருநாள் தம்பதியினர் மருத்துவமனைக்கு சென்றுள்ளனர். இதன்போது கிடைக்கபெற்ற மருத்துவ அறிக்கை குறித்த பெண் கர்ப்பிணி இல்லை என்பதை அறிவித்துள்ளது.
இதனை கேட்டு பெண்ணின் கணவர் அதிர்ச்சிடையந்துள்ளார்.
இந்தப்பெண் வேண்டுமென்றே கட்டுக்கதையொன்றை உருவாக்கியுள்ளார் என்று தெரிவித்த மருத்துவர் இவரை உளவியல் மதிப் பீட்டு ஆய்வு ஒன்றில் ஈடுபடுத்தியுள்ளார்.
இதனை நம்பி பரிசில்களையும் நன்கொடைகளையும் கொடுத்த அனைவருக்கும் திருப்பி தருவதாக அப்பெண்ணின் கணவர் வாக்குறுதி அளித்துள்ளார் என அந்தநாட்டு ஊடகம் செய்தி வெளியிட்டுள்ளது.

## மினரலில் குளிக்கும் நடிகை



நடிகை கங்கனா ரனாவத் போத்தல் தண்ணீரில் தினமும் குளிக்கிறார். 'தாம் தூம்' படத்தில் ஜெயம் ரவியுடன் நடித்தவர் கங்கனா ரனாவத். ஹிந்தியில் பல்வேறு படங்களில் நடித்து வருகிறார். சமீபத்தில் மும்பை புறநகர் பகுதியில் நவீன வசதிகளுடன் கட்டப்பட்டுள்ள அடுக்குமாடி குடியிருப்பு ஒன்றில் வீடு வாங்கினார். அந்தப் பகுதியில் குறைந்த அளவிலானவர்களே குடியேறி இருக்கின்றனர். இன்னும் குடிநீர் இணைப்பு வழங்கப்படவில்லை. அவசர அவசரமாக கங்கனா குடியேறிவிட்டதால் அவருக்கு தண்ணீர் கஷ்டம் ஏற்பட்டது. ஆனால் அதுபற்றி அவர் கவலைப்படவில்லை. தினமும் ஆயிரக்கணக்கில் பணம் கொடுத்து தூய நீர் (மினரல் வோட்டர்) கொள்கனலன்களை வாங்கி வீட்டில் அடுக்கி வைக்கிறார். குடிப்பதற்கு மட்டுமல்ல தினமும் குளிப்பதற்கும் இவற்றைத்தான் பயன்படுத்துகிறார். தமிழகத்திலும் தண்ணீர் பிரச்சினை உள்ள இடங்களில் சென்று நடிக்கும் சில நடிகைகள் குளிப்பதற்கும் மினரல் வோட்டர் கேட்டு நச்சரிக்கும் சம்பவங்கள் நடந்திருக்கின்றன.

## ஆக்குலஸ் நிறுவனமும் பேஸ்புக்கிடம்?


சமூக வலைத்தளங்களில் முன்னணியில் திகழும் பேஸ்புக், சமீபகாலமாக நவீன தொழில்நுட்ப நிறுவனங்களை தன்வசப்படுத்தி வருகின்றது.
சமீபத்தில் தான் கடந்த பெப்ரவரி 19ஆம் திகதி வாட்ஸ் ஆப் நிறுவனத்தை வாங்கியது.
இந்த வர்த்தக பரிவர்த்தனை மேற்கொள்ளப்பட்ட ஒரு மாதத்தில் ஆக்குலஸ் (Oculus) நிறுவனத்தையும் வாங்க திட்டமிட்டுள்ளது பேஸ்புக்.
இந்நிறுவனத்தை ரூ.12 ஆயிரம் கோடிக்கு வாங்குவதாக பேஸ்புக் அறிவித்துள்ளது. இதில் ஒரு பகுதி பணமாகவும், ஒரு பகுதி பங்குகளாகவும் வழங்கப்படும் என்றும் பேஸ்புக் குறிப்பிட்டுள்ளது.
இதுபோன்ற நவீன தொழில்நுட்ப சேவைகளை வாங்கி அவற்றை ஒருங்கிணைத்து செயற்படுத்தினால், வரும் காலங்களில் சமூக இணையதளத்தின் மூலம் மக்களின் பல்வேறு தேவைகளை பூர்த்தி செய்யமுடியும் என்று பேஸ்புக் நிறுவனரும் தலைமை செயல் அதிகாரியுமான மார்க் தெரிவித்துள்ளார்.



ரஷ்யாவின் மருத்துவமனை புற்றுநோயால் பாதிக்கப்பட்ட குழந்தைகளுக்கு மகிழ்வூட்டும் முறையில் சிகிச்சை வழங்கப்பட்டுவருகிறது. இதனால் நோயால் பாதிப்புற்ற சிறுவர்கள் தாங்கள் ஒரு வைத்தியசாலையில் இருப்பதுபோன்று உணர்வதில்லை. மாறாக ஒரு களிப்பூட்டும் பூங்காவில் இருப்பதுபோலவே இதன்போது மகிழ்வுடன் இருக்கின்றார்கள். குறித்த சிகிச்சை முறையினை வழங்கும்போது மருத்துவர்கள் சிறுவர்களுக்கு பிடித்தமான கோமாளிகளைப் [illegible] கலகலப்பாக அவர்களை சிரிக்கவைத்தபடியே செயற்பாடுவார்கள்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



















Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை கொழும்பு - 6, வெள்ளவத்தை, பெரகும்பா பிளேஸ், 1/5 ஆம் இலக்கத்தில் உள்ள லான்ட் மார்க் என்டர் பிறைஸ் ஸ்தாபனத்தால், 2014 ஏப்ரல் 2 ஆம் திகதி வெளியிடப்பட்டது.